விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 15 வெள்ளிக்கிழமை (31.08.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 256

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

## காணாமல் போன உறவுகள் எங்கே?

# சுதந்திர விசாரணையை வலியுறுத்தி வவுனியாவில் ஆர்ப்பாட்டம்!



(வவுனியா)

இலங்கையில் காணாமல் போனவர்கள் தொடர்பாக ஐ.நாவின் நடவடிக்கை குழுவின் மேற்பார்வையில் சுதந்திரமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று சர்வதேச காணாமல் போனோர் தினத்தையொட்டி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. வவுனியாவில் காணாமல் போனோரின் உறவினர்கள் கலந்து கொண்ட ஆர்ப்பாட்ட நிகழ்விலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு இலட்சம் தொன் அரிசி டுபாய்க்கு ஏற்றுமதி!

(கொழும்பு)

இலங்கையிலிருந்து ஒரு இலட்சம் தொன் அரிசியை டுபாய் நாட்டிற்கு ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், இதுவரை 500 கொள்கலன்களில் அரிசி அனுப்பப்பட்டுள்ளதாகவும் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இலங்கை வரலாற்றில் முதற் தடவையாகவே இந்தளவு அரிசி ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் மேலும் பல நாடுகள் இலங்கையில் இருந்து அரிசியை கொள்வனவு செய்ய முன்வந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

ஐக்கிய மக் (20ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் குழுக்களிடையே மட்டக்களப்பில் மோதல்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, ஏறாவூர் பிரதேசத்தில் இரு அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் இரண்டு பெண்கள் பாதிக்கப்பட்டு, ஏறாவூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக்காலை இடம்பெற்றதாக கூறப்படும் இம் மோதல் பற்றி மேலும் தெரிய வருவதாவது, ஏறாவூர் பிரதேசத்திலுள்ள ஐயங்கேணி கிரா (20ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு செயலர் எங்கே? தேடிய ஊடகவியலாளர்கள்!

(கொழும்பு)

சீனப்பாதுகாப்பு அமைச்சரை பாதுகாப்புத்துறை உயர் அதிகாரிகளும், வெளிவிவகார அமைச்சரும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வரவேற்றனர். ஆனால் பாதுகாப்பு அமைச்சை கவனிக்கும் கோத்தபாய ராஜபக்ஷ அங்கிருக்க வில்லை.

அது ஊடகவியலாளர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தியது. ஆனால் அவர் சூடான் சென்றுள்ளதாலேயே, சீனப் பாதுகாப்பு அமைச்சரை வரவேற்கும் நிகழ்வில் பங்கேற்க வில்லையென்று பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளை, சீனப்பாதுகாப்பு அமைச்சரின் பயணம் பல வாரங்களுக்கு முன்னரே, உறுதி செய்யப்பட்டுவிட்ட நிலையில், கோத்தபாய ராஜபக்ஷ திடீரென சூடானுக்கு மேற்கொண்டுள்ள பயணம் கேள்விகளை எழுப்பியுள்ளது.

எனினும், சீனப் (20ஆம் பக்கம் பார்க)

## இசட் புள்ளிப் பிரச்சினைக்கு தீர்வை முன்வைக்க உத்தரவு

(கொழும்பு)

இசட் புள்ளிப்பிரச்சினைக்கு இறுதித்தீர்வுத்திட்டத்தை முன்வைக்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு, உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

எதிர்வரும் மூன்றாம் திகதி இறுதி யோசனைத்திட்டத்தினை நீதிமன்றில் சமர்ப்பிக்க வேண்டும் என தெரிவித்துள்ளது. இசட்புள்ளி முறைமையினால் அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக 33 மாணவ, மாணவியர் உச்ச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, சட்டமா அதிபர் திணைக்களம், மனுதாரர்களின் சட்டத்தரணிகள் ஆகியோர் இணைந்து இந்தப் பிரச்சினைக்கு தீர்வுத்திட்டத்தை முன்வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இசட்புள்ளி குறித்த அறிக்கை இறுதி அறிக்கையாக அமைய வேண்டும் என பிரதம நீதியரசர் சிரானி பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## மிருகபலி பூஜை நிறுத்தம் மேர்வின் நன்றி தெரிவிப்பு




(கொழும்பு)

ஜனாதிபதியின் வேண்டுகோளின் காரணமாக முன்னேஸ்வரம் காளி கோவிலில் மிருக பலி பூஜையை நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக முன்னேஸ்வரம் காளி கோயிலின் பிரதம குருவான சிவபாதசுந்தரம் தெரிவித்துள்ளார்.

நாளை இம் மிருக பலி பூஜை நடத்தப்பட விருந்தமை (20ஆம் பக்கம் பார்க்க)

## ஈழ விடுதலைக்கு ஆதரவளிப்பதே விடுதலை சிறுத்தைகளின் கொள்கை

### தொல் திருமாவளவன் தெரிவிப்பு



(சென்னை)

ஈழ விடுதலைக்கு ஆதரவளிப்பதே விடுதலை சிறுத்தைகள் கட்சியின் கொள்கையென அதன் தலைவர் தொல் திருமாவளவன் தெரிவித்தார். விகடன் இதழுக்கு வழங்கிய கேள்வி பதிலின் போதே அவர் இதனை கூறியுள்ளார். அவர் மேலும் கூறியதாவது,

நீங்கள் கற்பனை செய்து வைத்திருந்த தலைவர் பிரபாகரனை, நேரடிச் சந்திப்பின் போது உணர்ந்தீர்களா?

பிரபாகரன் ஒரு மாபெரும் மக்கள் தலைவர் என்றாலும், இன விடுதலைக்கான படைத் தலைவர் என்பதால் அவ்வளவு எளிதாக சந்திக்க இயலாது (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக் குழுவின் கலைநிகழ்வுக்கு திருச்சியில் நேற்று ஆர்ப்பாட்டம்

(சென்னை)

திருச்சி கண்டேரன் மெண்ட் பகுதியில் உள்ள கலைக்காவிரி கவின்கலைக் கல்லூரியில் நேற்று இலங்கை குழுவினரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதனை எதிர்த்து நாம் தமிழர் கட்சியினர் கல்லூரிக்கு எதிரே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இங்கே இரு நாடுகளுக்கு இடையிலான கலை பண்பாடு கலாசார பரிவர்த்தனை திட்டத்தின் கீழ். இலங்கையில் இருந்து வந்த 70க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் உள்ளிட்டோர் நிகழ்ச்சிகளில் பங்கெடுத்து வருகின்றனர்.

நேற்று இலங்கை குழுவினரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்த நிலையில் இதனை எதிர்த்து நாம் தமிழர் உள்ளிட்ட கட்சிகளைச் சேர்ந்த 10க்கும் மேற்பட்டோர் கலைக் காவிரி கவின்கலைக் கல்லூரிக்கு எதிரே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை பொலிஸார் கைது செய்தனர். (எ-11)

## இலங்கை விவகாரங்களுடன் சீன அமைச்சர் இந்தியா பயணம்

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சீனப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் லியான் குவான்லி, நாடு திரும்பும் வழியில் இந்தியாவிற்கும் விஜயம் செய்ய உள்ளார்.

அண்டை நாடுகளுடன் நட்புறவை பேணும் நோக்கில் இந்த பயணம் அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டு சீனப் பாதுகாப்பு அமைச்சர் இந்தியாவிற்கு செல்ல உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

சீனா இலங்கையுடன் நெருங்கிய உறவுகளைப் பேணி வருகின்றமை உள்ளிட்ட விவகாரங்களில் இந்தியா அதிருப்தி அடைந்துள்ள நிலையிலேயே சீனப் பாதுகாப்பு அமைச்சர் இந்திய விஜயத்தை மேற்கொள்ள உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஆட்டோ மோதியதில் குடும்பப் பெண் பலி!

(யாழ்ப்பாணம்)

பஸ்ஸிலிருந்து இறங்கி வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த குடும்பப் பெண்ணை பின்னால் வந்த ஆட்டோ மோதியதில் குடும்பப்பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 4.00 மணியளவில் சுன்னாகம் பஸ் தரிப்பிடத்திற்கு அருகில் இடம் பெற்றுள்ளது.

இதில் மூளாய் தெற்கு, சுழிபுரத்தினைச் சேர்ந்தவரும் இருபிள்ளைகளின் தாயாருமான கனகரத்தினம் கனகம்மா (வயது 56) என்ற குடும்பப் பெண்மணியே உயிரிழந்தவராவார்.

குறித்த குடும்பப்பெண் சுன்னாகத்திலுள்ள உறவினர் ஒருவரை பார்ப்பதற்கு சுழிபுரத்திலுள்ள தனது வீட்டிலிருந்து பஸ்ஸில் சென்று சுன்னாகம் பஸ் நிலையத்தில் இறங்கி வீதி வழியாக நடந்து சென்றபோது பின்புறமாக வந்த ஆட்டோ குறித்த பெண்ணை மோதியுள்ளது.

இதில் படுகாயமடைந்த அவர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி அன்றைய தினம் நள்ளிரவுக்கு முன்பே உயிரிழந்துள்ளார்.

விபத்துக்குக் காரணமான ஆட்டோ சாரதி சுன்னாகம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்டபோது வழக்கினை விசாரணை செய்த நீதவான் சாரதியினை எதிர்வரும் 12ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (எ-4)

## வீடியோ விழா

(யாழ்ப்பாணம்)

குருநகர் நாட்டுக் கூத்து மன்றம் நடத்தும் ஆளுமை வீடியோ திரைப்பட வெற்றி விழாவும் வீரியம் புதிய வீடியோ தொடக்க விழாவும் மன்றத் தலைவர் கலைமாமணி கிறகரி கிறிஸ்தோப்பர் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இல. 20, கடற்கரை வீதி, பணிமனையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ. இளங்கோவன், சிறப்பு விருந்தினராக பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா ஆகியோர் கலந்து கொள்வர். (எ)

# பஸ்ஸிலிருந்து தப்பியோடிய சிப்பாய் இளைஞர்களால் துரத்திப் பிடிப்பு

(மிருசுவில்)

தனியார் பேருந்தில் வந்த இளைஞன் பேருந்தை விட்டு திடீரென இறங்கி ஓடியமையால் இளைஞர்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டான்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 8.30 மணியளவில் மிருசுவில் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

யாழில் இருந்து சென்று கொழும்பை நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்தை மிருசுவில் சந்தியில் உள்ள பொலிஸார் இடைமறித்துள்ளனர்.

திடீரென அப்பேருந்தில் இருந்து இளைஞர் ஒருவர் குதித்து ஓடவே "திருடன் பிடி" என்று பொலிஸார் துரத்தினர்.

இதனால் சந்தியில் நின்ற இளைஞர்களும் துரத்தி வடக்கு மிருசுவில் பிரதேசத்தில் வைத்து மடக்கிப் பிடித்து பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அதன் பின்னரே அவர் ஒரு இராணுவ சிப்பாய் என்றும் தனது மனைவி சுகவீனம் காரணமாக கொழும்பு வைத்தியசாலையில் இருப்பதாகவும் அவரைப் பார்க்க மேலதிகாரிகள் தனக்கு விடுமுறை வழங்காமையினாலேயே தான் திருட்டுத்தனமாகச் செல்வதாகவும் தெரிவித்துள்ளார்.

குறித்த நபரை பொலிஸார் இராணுவப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (எ-3,85)

## தேர்தல் சட்ட மீறல் அதிகரிப்பு

(கொழும்பு)

கடைசிநேரத்தில் நடைபெறும் மும்முரமான பிரசார நடவடிக்கைகள் காரணமாக தேர்தல் சட்டங்கள் அதிகளவில் மீறப்படுவ தாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் கூறினர்.


அரசாங்கக் கட்சி வேட்பாளர்களும் ஏனைய கட்சியின் வேட்பாளர்களும் பொதுச் சொத்துக்களை பயன்படுத்தும் குற்றம் இழைப்பவர்களாக உள்ளனர்.

சுற்றுலா விடுதிகள் உத்தியோகபூர்வ வாகனங்கள் அரச முத்திரை பொறித்த தபால் உறைகள் என்பன பெருமளவில் தேர்தல் பிரசாரத்திற்காக துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக பவ்ரல் அமைப்பு கூறியுள்ளது. (எ-11)


### பெயர் மாற்றம்

சென்யூட்ஸ், இளவாலை எனும் விலாசத்தில் வசிக்கும் கமலநாதன் கரோலின் பிறில்டா ஆகிய நான் எனது பெயரை 28.08.2012 இலிருந்து காயத்திரி என பெயர் மாற்றம் செய்கின்றேன் என்பதை இலங்கை குடியரசு வாழ் மக்களுக்கு அறியத் தருகிறேன்.

(305) காயத்திரி


### தனுஸ் வேக்ஸ்சொப் அன் சேவிஸ் சென்ரர்

மோட்டார் சைக்கிள் திருத்தம், வயறிங், பெயின்ரிங் வேலைகளும் ஆட்டோ, மோட்டார் சைக்கிள் சேவிசும் (29)

95, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தொ.பேசி.இல.: 021 4914625, 077 4191251, 077 2090482, 077 7293312

உரிமையாளர்: உதயகுமார் திலீபன் (அன்னாமலை)

ஞாயிற்றுக்கிழமையும் திறக்கப்படும்



## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

## கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி : 03.09.2012 - 20.09.2012 2.00 மணிவரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி : 21.09.2012 நண்பகல் 12.00 மணி

கேள்விப்பத்திரம் திறந்து பார்க்கும் திகதி : 21.09.2012 பிற்பகல் 2.00 மணி

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் இடம் : தலைமை அலுவலகம், வலிகாமம் தெற்கு பிரதேசசபை

| இல. | வேலை விபரம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப்பணம் (வற் உட்பட) | இக்ராட் பதிவுத் தரம் |
|---|---|---|---|---|
| 1 | மயிலங்காடு மாப்பாணர் வீதி திருத்தம் | 40000.00 | 560.00 | C8/M7 |
| 2 | ஈவினை மத்தாளோடை வீதி திருத்தம் | 72000.00 | 560.00 | C8/M7 |
| 3 | உடுவில் பெரிய கிணற்றடி வீதி திருத்தம் | 41500.00 | 560.00 | C8/M7 |
| 4 | கோட்டைக்காடு கந்தசாமி கோயில் வீதி திருத்தம் (ஏழாலை) | 14700.00 | 560.00 | C9/M8 |
| 5 | தாவடி அரசடி வீதி திருத்தம் | 21000.00 | 560.00 | C9/M8 |
| 6 | தலைமை அலுவலக வாகனத் தரிப்பிடம் அமைத்தல் | 8000.00 | 560.00 | C10/M9 |
| 7 | தலைமை அலுவலக உள்ளகத் தொடர்பாடல் வசதி | 14700.00 | 560.00 | தகைமைச் சான்றிதழ் |
| 8 | கொத்தியாலடி கழிவு கொட்டுமிட சுற்றுமதில் அமைத்தல் | 12000.00 | 560.00 | C10/M9 |

மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கான கேள்விகள் குறிக்கப்பட்ட "இக்ராட்" தரத்திற்கு பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரரிடமிருந்து என்னால் கோரப்படுகின்றன.

தேசத்தைக் கட்டியெழுப்பும் (NBT) வரியாக மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணத்துடன் மேலதிகமாக 2% அறவிடப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரத்தின் மூலப் பிரதி "தலைவர், தலைமை அலுவலகம், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, காங்கேசன்துறை வீதி, உடுவில்" என்ற முகவரிக்கும் அதன் பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கும் உரிய காலத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரம் தேவைப்படுவோர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

திரு. தி. பிரகாஷ்,
தலைவர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை வீதி,
உடுவில்.

2012.08.30 (C-886)


# இந்தியா இலங்கையின் எதிரி; சீனாவுடன் ஒப்பந்தம் தேவை

## தேசப்பற்றுள்ள இயக்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியா, இலங்கையின் பரம விரோதி.

எனவே இலங்கை சீனாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குறிப்பிட்டுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாஸ அமரசேகர இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கையின் மிக முக்கிய பாதுகாப்புப் பிரதேசங்களை நோக்கி இந்தியா அக்னி ஏவுகணைகளை தயார் நிலையில் வைத்திருப்பதாக சில தினங்களுக்கு முன்னர் தகவல்கள் வெளியாகின.

இது இந்தியாவின் இரட்டை வேடத்தைக் காட்டுகிறது. அத்துடன் இந்தியாவின் அநாகரிகமான செயற்பாடு இதுவாகும். இந்தியா ஒருபுறம் புத்தபெருமானின் கபிலவஸ்துக்களை இலங்கைக்கு அனுப்புகிறது. மறுபுறத்தில் இலங்கைக்கு எதிராக அக்[illegible] ஏவுகணைகளை தயார் செய்கிறது.

இதிலிருந்து இந்தியா இலங்கைக்கு பரம விரோதி என்று புலனாகின்றது என்றும் அமரசேகர குறிப்பிட்டார்.

சீனா, இலங்கையில் யுத்தம் இடம் பெற்ற வேளையில் ஆயுதங்களை வழங்கி உதவியது. ஏனைய விடயங்களில் சீனா இலங்கைக்கு உதவியளித்து வருகின்றது. இந்நிலையில் இந்தியாவுக்குப் பயந்து இலங்கை சீனாவுடனான உறவை துண்டித்துக் கொள்ளவோ குறைத்துக் கொள்ளவோ கூடாது என்றும் குணதாஸ அமரசேகர குறிப்பிட்டார்.

குணதாஸ அமரசேகர தலைமை தாங்கும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், அமைச்சர் விமல் வீரவன்ஸ முக்கிய பதவி வகிக்கும் அமைப்பு என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)


### மாதாந்த குத்தகைக்கு

TATA 709 வாகனம்
மாதாந்த குத்தகைக்கு
உண்டு.

தொடர்பு: 0777722448 (C-887)



### 'EASY ENGLISH'

(Levels : One / Two / Three)

வகுப்பு : 31.08.2012 / Phone : 773 212 711 (625)



### பதவி வெற்றிடம்

சர்வதேசிய மட்டத்தில் சிறந்த தொழில் பயிற்சியினை வழங்கி கொண்டிருக்கும் D.M.I நிறுவனத்தின் வவுனியா கிளையில் முகாமைத்துவ பகுதியில் பயிற்சியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

பயிற்சிக் காலம் : 5 - 6 மாதங்கள், பயிற்சியின் பின் எமது கிளைகளில் தொழில் வாய்ப்பு.

தகைமை : O/L, A/L

இம்முறை பரீட்சைக்கு தோற்றியவரும் விண்ணப்பிக்கலாம்

தொடர்பு: 0774122203, 0247900171, 0770308484 (315)



### மனோதத்துவ வைத்தியம்

### (General Psychotheraphy)

### பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P. ஆறுமுகம் | T.P.: 0719315664, 0777569205

மீண்டும் யாழில்

28.08.2012 முதல் 05.09.2012 வரை 9 நாட்கள்மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

நாதன் இன்

(முன்பு கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்) (C-884)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## யாருக்கு எதுவோ?

ஒரு ஊரிலே ஒருவன் இருந்தான். அவனுக்கு என்ன வேலையென்றால்... வீட்டுக்கூரைகளில் உள்ள ஓடுகளை மாற்றி சீராக்குவது. புதிதாகவும் ஓடு மாற்றிக் கொடுப்பான். ஓடு மாற்றுவதற்கு அவனுக்கு ஒருநாள் கூலி 10 ரூபாவாகும். ஊர் ஊராகச் சென்று ஓடு மாற்றிக் கொடுப்பான்.

ஒருநாள் அவன் காட்டு வழியாக அடுத்த ஊருக்குச் சென்று கொண்டிருந்தான்.

நடுக்காட்டிலே ஒரு ஐயனார் கோவில் இருந்தது. அதைத் தாண்டிப் போய்க்கொண்டிருக்கும் போது... திடீரென்று ஒரு குரல் ஒலித்தது.

"இதோ பார்! இங்கே வா" என்று அந்தக் குரல் அழைத்தது.

இவன் பயந்து விட்டான். இந்த நடுக்காட்டிலே என்னை யார் அழைப்பது?...என்று நினைத்தபடி நடையை எட்டிப் போட்டான்.

மறுபடியும் அந்தக்குரல் ஒலித்தது.

"உன்னைத்தான் கூப்பிடுகிறேன் இங்கே வா" என்றது.

இந்த நபர் உற்றுப் பார்த்தான். அந்த சாமியின் சிலைதான் பேசியது.

"ஐய்யய்யோ...நான் ஒரு பிழையும் செய்யவில்லையே என்னை ஏன் கூப்பிடுகிறாய்..." என்று நடுங்கிக் கொண்டே அருகில் போய் நின்றான்.

"பயப்படாதே! உன்னுடைய காலடியிலே சற்று தோண்டிப் பார்...! என்ன இருக்கிறது என்று தெரியும்" என்றது.

உடனே இவன் அங்கேயே உட்கார்ந்து தோண்ட ஆரம்பித்தான். தோண்டிக் கொண்டு போகும்போது ஒரு அடிக்குக் கீழே... ஒரு பானை தெரிந்தது. அதை வெளியில் எடுத்துப் பார்த்தால்... உள்ளே நிறைய துவரம் பருப்பு அளவிற்குத் தங்கக் காசுகள். இதைப் பார்த்தவுடனேயே அவன் அசந்து போனான்.

இப்போது அந்த சிலை மறுபடியும் பேச ஆரம்பித்தது.

"இதோ பார்... அவ்வளவு தங்கக் காசுகளையும் ஒரு துணியிலே கொட்டி ஒரு மூட்டையாகக் கட்டி எடுத்துக்கொண்டு போ" என்றது.

இவனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவ்வளவு சந்தோசம். மேல் துண்டை எடுத்து தரையிலே விரித்தான்... தங்கக் காசுகளைக் கட்டப் போனான். இப்போது அந்த சிலை... கூறியது "பானையை சுத்தமாக அப்படியே வெறுமையாக்காதே! அதிலே ஒரு நாலு தங்கக் காசாவது போட்டு வை!" என்றது.

இவன் எண்ணி நான்கு காசுகளை மட்டும் எடுத்து பானையிலே போட்டான். பானையை இருந்த இடத்திலேயே வைத்து மூடி விட்டு... மூட்டையைத் தூக்கித் தலையிலே வைத்துக் கொண்டு புறப்பட்டான்.

அடுத்த ஊரிலே ஓடு மாற்ற வேண்டிய வேலை இருந்தால் வீட்டின் உத்தரத்திலேயே மூட்டையைக் கட்டித் தொங்கப் போட்டுவிட்டு... இவன் கூரை மேலே ஏறி உட்கார்ந்து ஓடு மாற்றும் பணியில் ஈடுபட்டான்.

அந்த வீட்டுக்கார அம்மா... சமையல் செய்ய ஆரம்பித்த வேளை துவரம் பருப்பு ரின்னைத் திறந்து பார்த்தார். அது தீர்ந்து போய் இருந்தது... சரி கடையில் போய் வாங்கி வரலாம் என்று நினைத்துக் கொண்டு புறப்படும் வேளையில் உத்தரத்திலே தொங்கிய மூடை கண்ணுக்குத் தென்பட்டது.

அவளது கணவனிடம் "என்ன இது மூட்டை?" என்று கேட்டாள்.

கூரை மேலே உட்கார்ந்திருந்த இவன்... அதுவா வேறு ஒன்றுமில்லை... துவரம் பருப்பு வாங்கி வைத்துள்ளேன்... வீட்டிற்குக் கொண்டு செல்வதற்காக... என்றான்.

இந்த அம்மா "சரி! அவசரத்திற்கு இதிலே கொஞ்சம் எடுத்துக் கொள்வோம்... அதன்பின் வாங்கிக் கொடுத்தனுப்பலாம்" என்று நினைத்தார்.

மெதுவாக மூட்டையைக் கீழே இறக்கிப் பார்த்தபோது அது பூராகவும் தங்கம்! அவ்வளவுதான் பளிச்சென்று அந்த அம்மாவின் மனதினுள் ஒரு யோசனை...

உடனே விரைந்து சென்று ஒரு பானையை எடுத்து வந்து அவ்வளவு தங்கத்தையும் எடுத்துக்கொண்டார்.

கடையில் துவரம் பருப்பு வாங்கி வந்து அந்தத் துணி மூட்டையிலே போட்டு பழையபடி உத்தரத்திலேயே கட்டித் தொங்கவிட்டார்.

மாலைவேளை இவன் தனது கூரை வேலையை முடித்துக் கொண்டு கீழே இறங்கி துணி மூட்டையை இறக்கினான்.

"என்ன இது? காலையிலே கனமாக இருந்தது... இப்போது லேசாக இருக்கிறதே என்று நினைத்துக் கொண்டு பிரித்துப் பார்த்தான். உள்ளே பூராகவும் துவரம் பருப்பு... அவன் வீட்டுக்கார அம்மாவிடம் "இதிலே தங்கம் இருந்ததே... பார்த்தீர்களா?" என்று கேட்டான்.

அதற்கு அந்த அம்மா "நீ என்ன கனவு கினவு கண்டியாப்பா?" என்று கேட்டார்.

இவனுக்கு ஒருவகைப் பதற்றம் ஏற்பட்டது. தலையிலே கையை வைத்துக் கொண்டு மறுபடியும் அந்த சாமி சிலையருகே ஓடிப்போனான். "இப்படி ஆசை காட்டி மோசம் செய்து விட்டாயே?" என்று அலறினான்.

மறுபடியும் அந்தச் சிலை பேசியது... "இதோ பார்... நான் ஒன்றும் மோசமானவன் இல்லை. இன்று அந்தத் தங்கம் அந்த அம்மாவிற்குப் போய்ச் சேர வேண்டும் என்கிற விதி இருந்திருக்கிறது. இதுவரை காலமும் அதைத் தூக்கிக் கொண்டு போவதற்கு யாரும் கிடைக்கவில்லை. அதுதான் உன் தலையிலே ஏற்றி அனுப்பி வைத்தேன். கவலைப்படாதே... உனக்குக் கிடைக்க வேண்டிய பங்கு அந்தப் பானையில் உள்ளது. அதை எடுத்துக் கொள்" என்றது.

"தரித்திரபுத்தி... நான் அப்போதே அள்ளும்போது, சற்று கூட அள்ளிப் போட்டிருக்க வேண்டும்" என்று தன்னையே நொந்து கொண்டான்.

யாருக்கு எது கிடைக்க வேண்டுமோ அதுதான் கிடைக்கும் என்பதை விளக்குவதற்காக இக்கதை கூறப்படுகிறது.

இதையே வேறு விதமாகவும் நாம் அர்த்தம் புரிந்து கொள்ளலாம்.

நமக்குக் கிடைக்க வேண்டியதை நாம்தான் நிர்ணயம் செய்து கொள்கிறோம். அனைத்தும் நமது கையிலேதான் இருக்கிறது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மருதங்கேணி பிரதேச வாரிவிட்டான் வீதி புனரமைப்பை துரிதப்படுத்த கோரிக்கை

(மருதங்கேணி)

மருதங்கேணி பிரதேச வாரிவிட்டான் வீதியானது பிரதான வீதியாகும். இவ்வீதி கடந்த 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் புனரமைப்பு செய்வதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் நேப் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்ட போதிலும் இதுவரை எதுவித புனரமைப்பு பணிகளும் செய்யப்படவில்லை.

அம்பாறையை சேர்ந்த ஒப்பந்தகாரர் இதன் இவ்வீதியை கடந்த 2011 ஆம் ஆண்டு ஜூன் மாதம் புனரமைப்பு செய்து முடித்திருக்க வேண்டும்.

ஆனால், ஒரு ஆண்டு கடந்த நிலையிலும் இதுவரை இவ்வீதி புனரமைக்கப்படவில்லை. தொடர்ச்சியாக நீடிப்பு வழங்கப்பட்டு இதன் புனரமைப்பு இழுத்தடிக்கப்படுகிறது.

மருதங்கேணி கிராமத்திலேயே வடமராட்சி கிழக்கிற்கான பொது அமைப்புக்களான வைத்தியசாலை, பிரதேச செயலகம், பிரதேச சபை, வங்கி போன்ற அனைத்து அமைப்புக்களும் உள்ளன. வடமராட்சி கிழக்கின் மருதங்கேணி தொடக்கம் கட்டைக்காடு வரையான மக்கள் இவ்வீதியையே பயன்படுத்தி இப் பொதுத்தேவைகளுக்காக பயணிக்கின்றனர். ஆனால், சிதைவடைந்து போயிருக்கும் இவ்வீதியை பயன்படுத்த முடியாமல் உள்ளது.

மேலும் இவ்வீதியே ஏனைய கிராமங்களுக்கான பேருந்துச் சேவை மார்க்கமாக உள்ளபோதிலும் இவ் வீதி புனரமைக்கப்படாமையால் இதன் வழியாக போக்குவரத்தும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. இதனால் பொது மக்கள் பெரிதும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

இவ்வீதியில் யா/உடுத்துறை மகா வித்தியாலயம், யா/மருதங்கேணி இத.க.வித்தியாலயம் ஆகிய இரண்டு முன்னணி பாடசாலைகள் உள்ளன. ஆனால், இவ்வீதி வழியான போக்குவரத்து முடங்கியுள்ளதன் விளைவாக இப்பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆகிய இடங்களில் இருந்து பேருந்துகளில் வந்து வேறு வீதிகளில் இறங்கி 2 கிலோ மீற்றர் வரை நடந்து வந்து கற்பிக்க வேண்டிய கஷ்ட நிலை தொடர்கிறது.

இதனால் இப்பிரதேச மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே, இப்பிரதேசம் மிகவும் தொலைவில் உள்ள காரணத்தினால் உரிய அதிகாரிகளின் கண்காணிப்புக்கு உட்படுவதில்லையென்று பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (அ-2)

# தபால்மூல வாக்களிப்புக்கு மீண்டுமொரு சந்தர்ப்பம்

கலைக்கப்பட்ட மூன்று மாகாண சபைத்தேர்தலுக்காக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ்.தேர்தல் மாவட்டத்தில் தபால்மூல வாக்களிப்புக்கு விண்ணப்பித்து தபால்மூல வாக்களிப்பினை மேற்கொள்ளாதவர்கள் எதிர்வரும் 3,4, 5, 6 ஆம் திகதிகளில் வாக்களிப்பினை மேற்கொள்ள முடியும் என யாழ்.உதவித்தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

கடந்த 27, 28 ஆம் திகதிகளில் தபால்மூல வாக்களிப்பு நாடளாவிய ரீதியில் இடம்பெற்றிருந்தது. இந்தத் தேர்தலை தபால்மூல வாக்களிப்புக்கு யாழ்.தேர்தல் மாவட்டத்தில் சுமார் 9 ஆயிரம் பேர் தகுதி பெற்றிருந்தனர். இந்நிலையில் தபால் மூல வாக்களிப்பினை தவறவிட்டவர்கள் மேற்குறிப்பிடப்பட்ட திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை யாழ்.மாவட்ட செயலகத்திலுள்ள யாழ்.தேர்தல் திணைக்களத்தில் தமது வாக்கினை அளிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 120 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 75 | 80 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 40 | 70 | 80 | 90 |
| தக்காளி | 40 | 60 | 50 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 45 | 40 | 40 | 40 |
| கோவா | 50 | 70 | 65 | 70 |
| கரட் | 120 | 110 | 100 | 150 |
| பூசணி | 40 | 30 | 30 | 40 |
| புடோல் | 35 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 45 | 60 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 70 | 70 | 80 | 80 |
| பெரிய வெங்காயம் | 65 | 80 | 70 | 70 |
| பாகற்காய் | 80 | 70 | 80 | 60 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | -- | 80 | 90 | -- |
| பயற்றங்காய் | 70 | 60 | 60 | 40 |
| லீக்ஸ் | 100 | 110 | 100 | 120 |
| பீற்றூட் | 50 | 40 | 40 | 80 |
| கறிமிளகாய் | 90 | 70 | 70 | 80 |
| முருங்கைக்காய் | 30 | 40 | 100 | 40 |
| போஞ்சி | 100 | 110 | 110 | 120 |
| கத்தரிதம்புள்ள | 40 | 90 | 60 | -- |
| கீரை - 1 பிடி | 08 | 10 | 15 | 15 |
| தேசிக்காய் | 190 | 180 | 100 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 20-25 | 30 | 20 | 20-25 |

# இராசி பலன்

*31.08.2012*
*(ஆவணி 15, வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு*
*பூரணை முன்னிரவு 8.09 மணிவரை*
*அவிட்டம் காலை 6.31 மணிவரை*
*இராகுகாலம் 10.35-12.05 மணிவரை*
*சுபநேரம் 6.05-7.35 மணிவரை*
*பூரணை விரதம்.*

**மேடம்** வருமானம் அதிகரித்து வளம் காணும் நாள், வழிபாட்டால் ஆனந்தப்படுவீர்கள், மதிப்பும் மரியாதையும் உயர்வடையும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்** செல்வாக்கு அதிகரிக்கும் நாள், தொழிலை விரிவுபடுத்த நடவடிக்கை எடுப்பீர்கள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**மிதுனம்** பெண் தெய்வ வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், தடைப்பட்ட காரியங்கள் நடைபெறுவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள், முன்னோர் சொத்துக்களால் நன்மையுண்டு.

**கடகம்** அம்பிகையை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், சரியாக நடந்தாலும் ஏதாவது குறை கேட்கும் வாய்ப்புண்டு, செலவுகள் அதிகரிக்கும், தேகாரோக்கியத்தில் கவனம் தேவை.

**சிங்கம்** உறவினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பயணத்தால் அலைச்சல் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும் விதத்தில் அமையும்.

**கன்னி** ஆலய வழிபாட்டல் ஆனந்தம் காண வேண்டிய நாள், தொழில் நன்மையுண்டு, வசூலாகாமல் இருந்த கடன்கள் திடீரென வசூலாகலாம், தொழில் முன்னேற்றம் கருதி முக்கிய முடிவெடுப்பீர்கள்.

**துலாம்** கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்வதில் அக்கறை காட்டுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் மேலோங்கும்.

**விருச்சிகம்** வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு, வாகன யோகமுண்டு, சந்தித்த நபர்களால் சந்தோசமான தகவலொன்று வந்து சேரும்.

**தனுசு** விருப்பங்கள் நிறைவேற விரதம், வழிபாடுகளை கடைப்பிடிக்க வேண்டிய நாள், சகோதர ஒற்றுமை பலப்படும், பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும், நண்பர்கள் கடைசி நேரத்தில் உதவ முன்வருவர்.

**மகரம்** குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**கும்பம்** இறைவழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், வேலைச்சுமை கூடும், சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், தொழில் நன்மை கருதி புதியவர்களை இணைக்கும் எண்ணம் உருவாகும்.

**மீனம்** சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்திற்கு வழி வகுப்பர், அன்புத் தொல்லைக்கு ஆளாகலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவியை எரித்துக்கொலை செய்தவருக்கு 12 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிப்பு

(யாழ்ப்பாணம்)

**தனது மனைவியினை மண்ணெண்ணெய் ஊற்றி எரித்துக் கொலை செய்த கணவருக்கு யாழ்.மேல் நீதிமன்றம் 10 வருடங்களின் பின்னர் 12 வருட கடூழியச் சிறைத்தண்டனை வழங்கியுள்ளது.**

2002 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி காலை 5.30 மணியளவில் சுதுமலை சாவற்காட்டிலுள்ள வீடொன்றில் ஜெகன் மோகன்-லஷ்மி என்பவரை அவரது கணவரான முத்துலிங்கம் ஜெகன்மோகன் என்பவர் மண்ணெண்ணெய் ஊற்றி எரித்துக் கொலை செய்துள்ளார்.

இக்கொலை வழக்கின் ஆரம்பகட்ட விசாரணைகள் மல்லாகம் நீதிமன்றில் மேற்கொள்ளப்பட்டு சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

பின்னர் யாழ்.மேல் நீதிமன்றில் குறித்த வழக்கு குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு தொடர்ந்து நடைபெற்று வந்த நிலையில் இவ்வழக்கு நேற்றைய தினம் யாழ்.மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கின் போது குறித்த குடும்பப் பெண் வழங்கிய வாக்குமூலம் சமர்ப்பிக்கப்பட்டது. அதில் அப்பெண் இறக்கும் தறுவாயில் குறிப்பிட்டுள்ளதாவது,

அதிகாலை 5.30 மணியளவில் எனது கணவர் நித்திரையிலிருந்து எழுந்திருந்தார். நான் அப்போது உறங்கிக் கொண்டிருந்தேன். திடீரென எனது கணவர் வீட்டில் எரிந்து கொண்டு இருந்த விளக்கினை எடுத்துக் கொண்டு வந்து நான் இரவு நேரம் அணிந்துள்ள எனது ஆடையில் மண்ணெண்ணெய் ஊற்றி பற்ற வைத்துவிட்டு எனது அறைக்கதவினை மூடிவிட்டு வெளியே சென்றுவிட்டார். இந்த நேரம் எனது பிள்ளைகள் உறங்கிக் கொண்டு இருந்தனர் என குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் வழக்கை விசாரணை செய்த மேல் நீதிமன்ற ஆணையாளர் குறித்த நபர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றம் நிரூபிக்கப்பட்டிருப்பதனால் எதிரிக்கு 12 வருட கடூழியச் சிறைத்தண்டனையும் 10 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் 6 மாத சாதாரண சிறைத்தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார்.

எதிரி சார்பில் சட்டத்தரணிகளான கே.பி. எஸ்.வரதராஜா, எஸ்.சிவநேசனின் அனுசரணையுடன் சிரேஷ்ட சட்டத்தரணி என்.சிறிகாந்தா ஆஜராகி இருந்ததோடு வழக்குத் தொடுநர் சார்பில் அரச சட்டவாதி செல்வி நளினி கந்தசாமியும் ஆஜராகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-4)

## இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலடியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு இலவச மருத்துவமுகாம் நடைபெறவுள்ளது.

இவ் இலவச மருத்துவ முகாமில் அனைவரையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு சத்தியசாயி சேவா நிலையம் அறிவித்துள்ளது. (அ-9)

## கருத்தரங்கும் ஆலோசனையும்

(யாழ்ப்பாணம்)

சிறிய,நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான திறன் அபிவிருத்தி கருத்தரங்கும் எதிர்கால முதலீடு தொடர்பான ஆலோசனையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை யாழ்ப்பாணம் ரில்கோ விடுதியில் நடைபெறவுள்ளது.

இலங்கை வங்கி நடத்தும் மேற்படி நிகழ்வில் அனைவரையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் அறிவித்துள்ளார். (அ-9)

# முரண்பாடாக கருத்து வெளியிட்டவர் மனநல பிரிவில் அனுமதிக்கப்பட்டார்

(கரவெட்டி)

தொண்டைமானாறு பகுதியில் அண்மையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் பாடலை ஒலிபரப்பியதாக அப்பகுதி நபர் ஒருவரினால் வீட்டு உரிமையாளர் ஒருவருக்கு எதிராக வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு விசாரணை நேற்றுமுன்தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் வழக்கு இடம்பெற்றது.

ஈழத்து எழுச்சிப்பாடல்கள் எஸ்.பி. சாந்தனின் பக்திப்பாடலான பிட்டுக்கு மண்சுமந்த பெருமான் என்ற பக்திப்பாடல் வீட்டு உரிமையாளரால் ஒலிபரப்பப்பட்டுள்ளது.

இதனை தவறாக எண்ணிய குறித்த நபர் வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்திருந்தார்.


இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி.ஸ்ரீநிதி நந்தசேகரம் குறித்த வழக்கை விசாரணை மேற்கொண்டபோது பக்திப்பாடல் ஒலிபரப்பப்பட்டமை தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து முறைப்பாடு செய்த நபரை விசாரணை மேற்கொண்ட நீதவான் முறைப்பாடு செய்த நபர் மாற்றுக்கருத்துக்களை தெரிவித்ததை அடுத்து யாழ்.போதனா வைத்தியசாலை உள நல வைத்திய பிரிவில் அனுமதிக்குமாறு நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (அ-3-24)




# புத்தூர் கிந்துசிட்டி மயானத்திற்கு அருகில் கழிவுப்பொருட்கள் கொட்டப்படுகின்றன

## மூக்கைப் பொத்தும் மக்கள்



(சுன்னாகம்)

சுன்னாகம் புத்தூர் வீதியில் உள்ள கிந்துசிட்டி மயானத்திற்கு அருகில் கழிவுப்பொருட்கள் கொட்டப்படுவதால் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் தாம் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாகவும் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பருத்தித்துறை வீதியையும் சுன்னாகத்தையும் இணைக்கும் பிரதான வீதியான இவ்வீதியில் நாள்தோறும் பெரும் எண்ணிக்கையான பயணிகள் பயணம் செய்து வருகின்றனர்.

கிந்துசிட்டி மயானத்திற்கு அருகில் கொட்டப்படும் கழிவுப்பொருட்களால் இவ்வீதியில் துர்நாற்றம் வீசி வீருவதுடன் பயணிகளும் மூக்கைப் பொத்தியவாறு பயணம் செய்ய வேண்டியுள்ளதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை தற்போது பெய்துவரும் மழை காரணமாக நீர் தேங்கி நின்று டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.கழிவுப்பொருட்களை கொட்டுவதற்கான குப்பைத் தொட்டியொன்றை அப்பகுதியில் அமைக்குமாறு வலிகாமம் கிழக்கு பிரதேச சபையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் இதுவரையும் எவ்விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். எனவே, இவ்விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-9)

# மரம் வெட்டும் இயந்திரம் காலினை பதம் பார்த்தது

(யாழ்ப்பாணம்)


மரம் வெட்டும் இயந்திரம் காலை பதம் பார்த்ததில் குடும்பஸ்தர் படுகாயமடைந்துள்ளார்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்றுக்காலை 8.45 மணியளவில் யாழ்.ஆஸ்பத்திரி வீதியிலுள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தினைச் சேர்ந்தவரும் இரு பிள்ளைகளின் தந்தையாருமான அ.கங்காதரன் (வயது 66) என்பவரே படுகாயமடைந்து உள்ளார்.


தனது வீட்டிற்கு அருகிலுள்ள மரம் ஒன்றினை தனக்கு பரீட்சயம் இல்லாத மரம் வெட்டும் இயந்திரத்தினால் வெட்டும்போது இயந்திரம் கட்டுப்பாட்டினை இழந்து குறித்த குடும்பஸ்தரினை வெட்டியுள்ளது.

இதில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ-4)









ஏசியன் பவுண்டேசன் நிறுவனம் சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்துடன் இணைந்து வடமாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 61 நூலகங்களுக்கு ஒரு தொகுதி நூல்களை வழங்கியதோடு அந்த நூல் நிலையங்களில் நூலகராக பணிபுரிபவர்களுக்கு பயிற்சிப் பட்டறையொன்றையும் நேற்று யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடத்தியது. இந்த நிகழ்வில் ஏசியன் பவுண்டேசன் நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி அன்ரன் நல்லதம்பி, சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் யாழ்.பிராந்திய முகாமையாளர் எஸ்.சிவானந்தன் ஆகியோர் நூலகர்களிடம் நூல்களை கையளிப்பதையும் பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலகச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசுக்கு வாக்களித்தால் சாபக்கேடுதான் மிஞ்சும்

## பிரதான எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

மகிந்த சிந்தனை என்ற நரகத்திலிருந்து நாட்டைப் பாதுகாக்க எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் பொதுமக்கள் , ஐக்கிய தேசியக்கட்சிக்கு வாக்களிக்க வேண்டும். அரசாங்கத்திறகு வாக்களித்து பாலியல் வல்லுறவு, கொலை,கொள்ளை, ஊழல்மோசடிகள் போன்ற குற்றச்செயல்களில் பாவங்களையும் சாபங்களையும் பொதுமக்கள் பெற்றுக் கொள்ளக்கூடாது என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் கல்வி மற்றும் சமுர்த்தி உதவிகள் என்பவற்றை சீரழிக்கும் புதிய கொள்கைகளை அரசு கையாண்டு வருகின்றது. தேசிய வருமானத்தில் 6 வீதத்தை இலவசக் கல்விக்காக ஒதுக்கவேண்டும் என்பது நியாயமான கோரிக்கையாகும். எனவே பொதுமக்கள் ஒன்றிணைந்து போராடுவதனால் மாத்திரமே சவால்களை வெற்றிகொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எம்பிலிப்பிட்டிய நகரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார். இவர் இங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

எவ்வாறாயினும் அரசாங்கத்திற்கு எதிரான மக்கள் குரல் மேலோங்கி வருகின்றது.

பாலியல் வல்லுறவுகள், சிறுவர் துஷ்பிரயோகம், கொலை,கொள்ளை, புதையல் தோண்டல், தேசிய சேமிப்பு வங்கியின் நிதிக் கொள்கை உட்பட பல்வேறு குற்றச்செயல்கள் மேலோங்கி நாட்டில் அநீதியே ஏற்பட்டுள்ளது.

பௌத்தர்கள் என்ற வகையில் மனதைக் கட்டுப்படுத்துவது முக்கியமானதாகும். இதனை முட்டாள்களுக்கு செய்ய இயலாது. மனதை கட்டுப்படுத்த அடிப்படை தகைமை கல்வியாகும். இதனையும் அரசு தற்போது அழித்துவருகின்றது. அரசியல் தலையீடுகள் மேலோங்கி தேசிய இலவசக் கல்வியின் எதிர்காலம் கேள்விக்குறியாகி விட்டுள்ளது.

உயர்தரப்பரீட்சை, 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை போன்றவை கூட இன்று நம்பகத்தன்மையற்ற வகையிலேயே இடம் பெறுகின்றன. இசட்புள்ளி குளறுபடியி னால் சுமார் 6 ஆயிரம் மாணவர்கள் வரை பாதிக்கப்படும் நிலையே ஏற்பட்டுள்ளது.

கல்விக்கான நிதி தொடர்ந்தும் குறைக்கப்பட்டே வருகின்றன. எனவே எதிர்வரும் மாகாணச்சபை தேர்தல் நாட்டின் பாதுகாப்பானதாக அமைய வேண்டும் எனக்கூறினார். (அ-2)

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பல் 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் தலைமையில் நடைபெறும்.

எனவே மேற்படி கூட்டத்திற்கு பிரதேச திணைக்களத் தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரை தவறாது சமுகமளிக்குமாறு பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் அறிவித்துள்ளார். (அ-2)

## இரணியன் செல்வன் புராண இசை நடனம்

வலிகாமம் மேற்கு பகுதியில் 40 வருடங்களாக இயங்கி வரும் தொல்புரம் கலாலயம் நாடக மன்றத்தினர் வரலாற்றுப்புகழ் மிக்க பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவத்தின் வேட்டைத்திருவிழாவை முன்னிட்டு எதிர்வரும் 6ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 10மணிக்கு **இரணியன் செல்வன்** என்னும் இசை நாடகத்தினை ஆற்றுகை செய்ய உள்ளதாக கலாலய செயலர்ளர் வி.குணபாலா அறிவித்துள்ளார்.

செல்லையா உதயச்சந்திரனின் நெறியாள்கையில் கலாலய நாடக மன்றத்தினரால் இவ் ஆற்றுகை செய்யப்படவுள்ளது.

பின்னர் கடந்த ஆண்டு குந்தியின் செல்வன் இசை நாடகத்தினை தொல்புரம் கலாலய நாடக மன்றத்தினர் ஆற்றகை செய்து பாராட்டுக்களைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.(அ)

# தரம் 5 புலமைப்பரீட்சை இரத்துச் செய்யப்படாது

## கல்வியமைச்சின் செயலாளர் திட்டவட்டம்

எந்தவொரு காரணத்திற்காகவும் நடந்து முடிந்த 5ஆம் தரப்புலமைப்பரிசில் பரீட்சை இரத்துச் செய்யப்படாதென கல்வியமைச்சின் செயலாளர் கோத்தபாய ஜயரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இம்முறை நடந்து முடிந்த 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள்கள் முன்னதாகவே வெளியாகிவிட்டதென இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சுமத்தியது.

அதனால் பரீட்சை இரத்துச் செய்யப்பட வேண்டும் என அந்தச்சங்கம் கோரிக்கை விடுத்தது. எனினும் ஆசிரியர் சங்கத்தின் கோரிக்கை போன்று பரீட்சையை இரத்துச் செய்யமுடியாதெனக் கல்வியமைச்சின் செயலாளர் கூறினார்.

அத்துடன் வினாத்தாள்கள் முன்னதாகவே வெளியான விடயம் குறித்து குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை நடத்திவருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)


# சேவை நலன் பாராட்டு

**31.08.2012 இல் ஓய்வு பெறும் கிளி/ கரியாலை நாகபடுவான் இல.02 அ.த.க. பாடசாலை அதிபர்**

**திரு. தம்பிராசா ரவீந்திரன் அவர்களின் பணிநயப்பு**



**இன்முகத்துடன் பேசி சேவையை இனிதே நிறைவு செய்யும் ரவீந்திரன் ஐயா பன்னெடும் பணிநயந்து நாங்கள் உன் பணிநயப்பு பாவொன்று பகருகின்றோம்.**

ஆசு நீக்கி அறிவொளி பரப்பி நல்
ஆசானாய் நின்று பல்லாயிரம் தீபம் ஏற்றினாய்
பேச்சரிய புகழ் பரப்பி பள்ளி முதல்வனும் ஆனாய்
புகழோடு பல்லாண்டு வாழ்க வாழ்க
துன்பங்கள் வந்தும்மை சூழ்ந்த போதும்
துரத்தி ஓட்டி அதை வெற்றி கண்டாய்
அன்பு பண்புடன் பள்ளிதனில் நீ
ஆற்றிய பணிகள் என்றும் மறக்குமோ
அன்பு அறிவு விடாமுயற்சி நற்பண்பு
அனைத்திற்கும் இலக்கணமாய் திகழ்ந்தவரே
உன் அரிய புகழ் பேசும் உன் சக அதிபர் குழாம்
உலகுள்ளவரை வாழ்க பணி தொடர்க
என வாழ்த்துகின்றோம்

(சு-883)

**கிளிநொச்சி மாவட்ட அதிபர்கள் சங்கம்,**
**வலயக் கல்வி அலுவலகம்,**
**கிளிநொச்சி.**



| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:- 1977 இந்து<br>நட்சத்திரம்:-உத்தராடம் 3<br>உயரம்:-5'10"<br>கி.பா:-45.25<br>தொழில்:-பொறியியலாளர் U.K (P.R)<br>B/373 | பிறப்பு:- 1987 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-அவிட்டம் 2<br>உயரம்: 5'3"<br>கி.பா:-29.25<br>தொழில்:- பிரான்ஸ் கம்பனி<br>G/389 |
| பிறப்பு:- 1972 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-ரேவதி 4<br>உயரம்:-5'8"<br>கி.பா:-28.25, 2 இல் செவ்<br>தொழில்:-Bsc,Msc ஆசிரியர்<br>B/374 | பிறப்பு:- 1973 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- அஸ்வினி 3<br>உயரம்: 5'2"<br>கி.பா:-51 , 1 இல் செவ்<br>தொழில்:- பட்டதாரி(பரத நடனம்)<br>G/325 |
| பிறப்பு:- 1975 இந்து<br>நட்சத்திரம்:-அவிட்டம் 2<br>உயரம்:-5'7"<br>கி.பா:-36<br>தொழில்:-கனடா A/L கம்பனி வேலை<br>B/379 | பிறப்பு:- 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- புநர்பூசம் 3<br>உயரம்: 5'3"<br>கி.பா:-72<br>தொழில்:- MBBS டாக்டர்<br>G/400 |
| பிறப்பு:- 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-மூலம் 4<br>உயரம்:-5'4"<br>கி.பா:-39.25,<br>தொழில்:-Bsc படவரைஞர் சேவை, அரச நிதி உதவியாளர்<br>B/390 | பிறப்பு:- 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- பூராடம் 1<br>உயரம்: 5'5"<br>கி.பா:-6.50<br>தொழில்:- Bsc விவசாய விஞ்ஞானம் (NGO)<br>G/391 |

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)

இல.144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005

E.mail:-kalyanamalai.jaffna@gmail.com

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணனியை முடக்கும் புதிய வைரஸ்

கணனிக்கு கெடுதல் விளைவிக்கும் முடக்கிப்போடும் மால்வேர் புரோகிராம்கள் இப்போது புதிய வடிவமைப்பில் வலம் வருவதை பல ஆய்வு நிறுவனங்கள் கண்டறிந்துள்ளன.

வழக்கமான ட்ரோஜன் ஹார்ஸ், பாட்நெட் மற்றும் பிஷிங் அட்டாக் என கணனியில் புகுந்து நம் பேசனல் தகவல்களை திருடுவதும் செயற்பாட்டினை முடக்குவதுமான வைரஸ்களும் மால்வேர்களும் இன்னும் வந்துகொண்டு தான் இருக்கின்றன.

இவற்றிற்கு இடையே புதிய வகை தாக்குதல்களுடன் சில புதிய வைரஸ்கள் வருவதாக கண்டறியப்பட்டுள்ளது.

ஷமூன் (Shamoon) என்னும் புதிய மால்வேர் புரோகிராம் ஒன்று பல நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சிலர் அல்லது நிறுவனங்களை இது தாக்குகிறது. குறிப்பாக மின்சக்தி நிறுவனங்களை இது இலக்காக கொண்டு தாக்குகிறது.

செக்யூலர்ட் (Seculert) என்ற இஸ்ரேல் நாட்டு நிறுவனத்தின் ஆய்வு மையக் கணக்கின்படி முதலில் இது கணனி ஒன்றினை இணையம் வழியே கைப்பற்றுகிறது.

பின்னர் அங்கிருந்து கொண்டு நிறுவனங்களை தாக்குகின்றது. அதன் பின்னர் தான் தங்கியுள்ள கணனியில் உள்ள கோப்புக்களை திருத்தி எழுதுகிறது.

அதன் மாஸ்டர் பூட் ரெகார்டையும் (Master Boot Record) மாற்றுகிறது. இவ்வாறு மாற்றப்பட்டால் பின்னர் அந்த கணனியை இயக்கவே முடியாது.

செக்யூலாட் மாஸ்கொவில் இயங்கும் காஸ்பெர்ஸ்கி லேப், அமெரிக்க அண்ட்டி வைரஸ் நிறுவனமான சைமாண்டெக் ஆகிய நிறுவனங்களால் இந்த வைரஸ் எத்தகைய தகவல்களை குறி வைத்து தாக்குகிறது என அறிய முடியவில்லை.

2010 ஆம் ஆண்டில் ஈரான் நாட்டின் நியுக்கிளியர் திட்டத்தினை கெடுத்த ஸ்டக்ஸ்நெட் வைரஸ் போல இது இயங்குமோ என்ற சந்தேகத்துடன் இந்த அண்ட்டி வைரஸ் நிறுவனங்கள் இதனை அணுகத் தொடங்கி உள்ளன.

இவற்றுடன் இதேபோல பல வகையான குறிப்பிட்ட கெடுதல் வேலையை இலக்காக கொண்டு Duqu, Flame and Gauss என மால்வேர் புரோகிராம்கள் உலா வருகின்றன. இவை மால்வேர் மற்றும் வைரஸ் புரோகிராம்களை கண்டறியும் புரோகிராம்களிடமிருந்து தப்பித்து விடும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

1990 ஆம் ஆண்டு வாக்கில் வந்த வைரஸ்கள்தான் தங்கள் இலக்காக மிக மோசமான விளைவைக் கொண்டிருந்தன. வேகமாக பரவி மால்வேர் என்பதை ஒவ்வொரு கணனி பயனாளரும் உச்சரித்து பயப்பட வேண்டும் என்ற இலக்கோடு இவை வடிவமைக்கப்பட்டன.


எவ்வளவு நாச வேலைகளை செய்திட முடியுமோ அவற்றை மேற்கொண்டன. Codered, Nimda போன்றவை இந்த வகையை சார்ந்தவையாக இருந்தன. மிக மோசமான SQL Slammer இணைய தளங்களையே முடக்கிப் போட்டன. அதைப் போன்றவையே இப்போதும் பரவி வருகின்றன.

தாங்கள் கைப்பற்றிய கணனியிலிருந்து பயனர் பெயர், கடவுச் சொல், வங்கிக் கணக்குகள், அவை குறித்த தகவல்களை கண்டறிந்து வர்த்தக நிறுவனங்களை முடக்குகின்றன.

மேலும் கைப்பற்றிய கணனியை தளங்களாக கொண்டு ஸ்பேம் பிஷிங் அட்டாக் அல்லது மற்ற மால்வேர் புரோகிராம்களை பரப்புகின்றன. இதுவரை எரிச்சல் தரும் ஓர் புரோகிராமாக இருந்த மால்வேர்கள் தற்போது கண்டு அஞ்ச வேண்டிய புரோகிராம்களாக மாறி வருகின்றன.

ஆனால் இவை அனைத்திற்குமான பாதுகாப்பு வளையங்களை தற்போது இயங்கும் அண்ட்டி வைரஸ் புரோகிராம்கள் விரைவில் உருவாக்கி தரும் என்ற நம்பிக்கை அனைவரிடமும் உள்ளது.

# மனிதனின் உணர்ச்சிகளை கண்டுபிடிக்கும் ரோபோ



பேச்சு, முகபாவம் ஆகியவற்றை கொண்டே ஒருவரது உணர்ச்சிகளை கண்டுபிடிக்கும் ரோபோவை பின்லாந்து விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். மனிதனின் உணர்ச்சிகளை கண்டுபிடிக்கும் ரோபோவை உருவாக்கும் ஆராய்ச்சியில் பின்லாந்தின் அவுலு பல்கலைக்கழக பேராசிரியர்கள் மேடி பிடிகெய்னன், ஜுகா ரோனிங் தலைமையிலான குழுவினர் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்.


இவர்களது ஆராய்ச்சி தற்போது இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது. இதுபற்றி மேடி கூறுகையில், மனிதனின் பேச்சு, முகபாவம், குரல் ஏற்ற இறக்கம் ஆகியவற்றை அவரது உணர்ச்சியை இந்த ரோபோ துல்லியமாக தெரிந்து விடும்.

வழக்கமான வீடியோ கமெரா மனிதனின் முகம், வாய் அசைவுகள், நெற்றி சுருக்கம் ஆகியவற்றை துல்லியமாக பதிவு செய்யும். கைனட் டெப்த் கமெரா சத்தங்களை பதிவு செய்யும். மைக்ரோபோன் பிரத்தியேக மென்பொருள் புரோசசர் ஆகியவற்றின் உதவியுடன் இந்த ரோபோ செயற்படுகிறது.

எதிராளியின் மனோபாவத்துக்கு ஏற்ப ரோபோவும் தன் முகத்தை மாற்றிக் கொள்ளும். நோயாளியின் முக மாற்றங்களை தொடர்ந்து கண்காணிப்பது குற்ற விசாரணைகள் போன்ற பணிகளில் இந்த வகை ரோபோக்கள் உதவிகரமாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

சீன பல்கலைக்கழகம் உட்பட உலகின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த கல்வி நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இந்த ஆராய்ச்சி நடந்தது குறிப்பிடத்தக்கது.

# Colour Files



உங்களது கணனியில் உள்ள கோப்பறைகளுக்கு வித விதமான கலர்களை தரலாம். இதன்மூலம் குறிப்பிட்ட கோப்பை தேடுவது மிக எளிது.

உதாரணமாக புகைப்படங்களுக்கு நாம் சிவப்பு நிறத்தினை வைத்து விட்டால் புகைப்படம் உள்ள கோப்பறைகள் எல்லாம் சிவப்பு நிறம் கண்டுகொள்ளலாம்.

அதைப்போலவே நமது வீட்டில் உள்ள குழந்தைகளுக்கும் அவர்கள் சம்பந்தப்பட்ட கோப்பறைகளுக்கும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நிறம் என நிறங்களை கொடுத்து விட்டால் தேடுவதற்கு வசதியாக இருக்கும்.

1.5 எம்.பி கொள்ளளவு கொண்ட இந்த மென்பொருளை தரவிறக்கம் செய்யவும் இதனை நிறுவிய பின்னர் உங்கள் கணனியில் உள்ள கோப்பறையை ரைட் கிளிக் செய்து ஒரு விண்டோ ஓப்பன் ஆகும். இதில் உங்களுக்கு வேண்டிய நிறத்தினை கிளிக் செய்து மாற்றலாம்.

# பிளாஸ், மெமரிகளில் இழந்த தரவுகளை மீட்பதற்கு




கணனிகள் பயன்படுத்தும் இடமெல்லாம் பிளாஸ், மெமரிகள் மிக முக்கிய பங்கை வசிக்கின்றன. அதாவது தரவுகள் தகவல்களை இலகுவாக கணனிக்கு பரிமாற்றவும் இலகுவாக உடன் எடுத்துச் செல்லக்கூடியதாகவும் காணப்படுகின்றன.

இவ்வாறு முக்கியத்துவம் பெற்று விளங்கும் பிளாஸ் மெமரிகளில் சேமிக்கப்பட்ட தரவுகள் வைரஸ் தாக்கத்தினாலேயோ அல்லது எதிர்பாராதவிதமாகவோ அழிக்கப்பட வாய்ப்புக்கள் இருக்கின்றன.

இச்சந்தர்ப்பங்களில் இழக்கப்பட்ட தரவுகளை மீட்பதற்கென Soft orbits Flash Drive Recovery எனும் மென்பொருள் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இம்மென்பொருளின் உதவியுடன் Music sticks, digital cameras, flash drivers, USB drives, Pc cards போன்றவற்றில் இழக்கப்பட்ட புகைப்படங்கள் டொக்கி மென்ட் கோப்புக்கள் Mp 3 பாடல்கள் போன்ற ஏனைய கோப்புக்களையும் மீட்டிக் கொள்ள முடியும்.

# LG Optimus L9 கைப்பேசிகள்





LG நிறுவனமானது இரட்டை சிம் வசதி கொண்டதும் நவீன தொழில்நுட்பத்துடன் அமைந்ததுமான Optimus L9 எனப்படும் கைப்பேசிகளை விரைவில் அறிமுகப்படுத்துகின்றது. கொரிய நாட்டில் தயாரிக்கப்பட்டு வரும் இக்கைப்பேசிகள் கூகுளின் அன்ரோயிட் இயங்கு தளத்தில் செயற்படக் கூடியவாறு உருவாக்கப்படுகின்றது.

மேலும் 1GHZ வேகத்தில் செயற்படவுள்ள புரோசசர் 4.7, அங்குலமுடைய தொடுதிரை, 5 மெகா பிக்சல்கள் உடைய கமெரா போன்ற அம்சங்களை உள்ளடக்கியதாகவும் காணப்படுகின்றது.

125 கிராம்களே இக்கைப்பேசியின் உள்ளக நினைவகமானது 4GB வரை காணப்படுவதுடன் 44 வகையான மொழிகளுக்கு துலக்கத்தை ஏற்படுத்தக்கூடிய Optical character Recognition மென்பொருளையும் தன்னகத்தே கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# கணனியினை கண்காணிக்க




கணனிகளை பயன்படுத்தும் போது மேற்கொள்ளப்படும் குளறுபடிகள், தவறான பாவனைகள் போன்றவற்றை மிகவும் எளிதான முறையில் கண்காணிப்பதற்கு Super silent manager எனும் மென்பொருள் பயன்படுத்தப்படுகிறது. இலவசமாக கிடைக்கும் இம்மென் பொருளானது விண்டோஸ் இயங்கு தளங்களில் மட்டும் செயற்படக்கூடியவாறு காணப்படுகின்றது.

இதன்மூலம் குழந்தைகள் கணனிகளை பாவிக்கும் போதோ அல்லது ஊழியர்களின் கணனிப்பாவனையையோ அல்லது ஏனைய குடும்ப உறுப்பினர்களின் செயற்பாடுகளையோ துல்லியமாக கண்காணிக்க முடியும்.

தவிர மென்பொருளின் உதவியுடன் வெப் கமெரா மூலம் பயணம் செய்கையிலோ அல்லது அலுவலகத்திலிருந்தவாறோ கண்காணிக்கமுடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தப் புனித பூமியை மீண்டும் இரத்தத்தில் நனைய விடமாட்டேன்

## அமைச்சர் மேர்வின் மீண்டும் கொதிப்பு

(கொழும்பு)

கடந்த 30 வருடங்களாக இரத்தத்தால் நனைந்த இந்த பூமியை மீண்டும் மிருகபலி என்ற பெயரில் இரத்தத்தால் நனைய வைக்க எவருக்கும் இடமளிக்கமாட்டேன் என்று பொதுமக்கள் தொடர்புகள் மற்றும் பொதுமக்கள் விவகார அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

பயங்கரவாதிகளினால் கடந்த 30 வருடங்களாக இந்த நாடு அடிக்கடி இரத்தத்தால் நனைந்து கொண்டிருந்தது. அந்த நிலைமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் உரிய முறையில் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு நாட்டில் சமாதானம் நிலை பெறச் செய்யப்பட்டது.

உலகின் எந்தவொரு தலைவராலும் முடியாத வகையில் சமாதானத்தை ஏற்படுத்திய ஜனாதிபதி நாட்டில் ஓடிக்கொண்டிருந்த இரத்த ஆற்றினையும் தடுத்தி நிறுத்தினார். சமாதானமாகவும் சுதந்திரமாகவும் தமது மத அனுஷ்டானங்களை மேற்கொள்ளும் இந்த தருணத்தில் மிருகபலி என்ற பெயரில் மீண்டும் நாட்டை இரத்தத்தால் நனைய விடப் போவதில்லை.

சிலாபம் முன்னேஸ்வரம் காளி கோயிலில் இடம்பெறும் மிருகபலி பூஜையை தடுத்து நிறுத்துமாறு பொதுமக்கள் தொடர்புகள் அமைச்சர் என்ற வகையில் மதத்தலைவர்கள் பலரும் என்னிடம் முறைப்பாடுகளை செய்துள்ளனர்.

இந்த நாட்டில் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் பலரும் இந்த மிருகபலி பூஜையை எதிர்க்கின்றனர். மிருகவதை மற்றும் மிருகங்கள் சுதந்திரமாக வாழ்வதற்கான சட்ட திட்டங்கள் நூறு ஆண்டுகளுக்கு முன் இருந்தே நாட்டில் அமுலில் உள்ளன.

இந்நிலையில் இந்த புனித பூமியை மீண்டும் அசுத்தப்படுத்த நான் ஒருபோதும் இடமளிக்கமாட்டேன். அதனால் மிருகவதை தொடர்பில் உள்ள சட்டங்களில் திருத்தங்களை மேற்கொண்டு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன் என்று அவர் மேலும் கூறியுள்ளார். (அ-2)

# மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகவே ஒழுக்காற்று விசாரணை வேண்டும்

## தயாசிறி எம்.பி. கூறுகிறார்

(கொழும்பு)

தனக்கு எதிராக அல்லாமல் ராஜபக்ஷ ஆட்சிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கூறியுள்ளார்.

ஒழுக்காற்று விசாரணைக்காக ஐ.தே.க. தலைமையகமான சிறிகொத்தாவிற்கு வந்தபோதே செய்தியாளர்களிடம் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷ ஆட்சிக்கு எதிராகவே ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். எனக்கு எதிராக அல்ல. இவர்கள் ஏன் இதை செய்கிறார்கள் என்று எனக்கு புரியவில்லை. இவர்கள் எனது தேர்தல் பிரசாரத்திட்டங்களை முடக்கியுள்ளனர்.

கட்சிக்கு பாதகமான விதத்தில் கருத்துக்களை தெரிவித்த குற்றச்சாட்டின் பேரில் சட்டத்தரணி யசந்த பெரேரா தலைமையிலான இருவர் கொண்ட விசாரணைக்குழுவொன்றின் முன்னிலையில் ஆஜராகுமாறு தயாசிறி ஜயசேகர அழைக்கப்பட்டிருந்தார்.

குற்றப்பத்திரத்துக்கு நாம் மூன்று ஆட்சேபனைகளை தெரிவித்தோம். இது தொடர்பான தீர்மானம் எதிர் வரும் ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளது. என்னை எதுவும் தடுக்க முடியாது. ஆயிரம் விசாரணைகளை எதிர்கொள்ள நான் தயார் என்றார். (அ-2)

# இலங்கையரை ஏமாற்றிய நைஜீரிய பிரஜைக்கு சிறை

லொத்தர் பரிசு கிடைத்திருப்பதாக கூறி இலங்கையர்களை ஏமாற்றிய நைஜீரிய பிரஜை ஒருவருக்கு கொழும்பு கோட்டை நீதவான் ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

கிளின்ச் கிறிஸ்டியன் எனும் மேற்படி நபர் இலங்கை இளைஞர் ஒருவரிடமிருந்து 7 இலட்சத்து 20 ஆயிரத்து 400 ரூபாவை மோசடி செய்ததாகவும் மற்றொரு வர்த்தகர் ஒருவரிடமிருந்து 1000 அமெரிக்க டொலர்களை மோசடி செய்ய முயன்றதாகவும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தார். இக்குற்றச்சாட்டை ஒப்புக் கொள்வதாக அவரின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் ஷிரால் நூர்தீன் கூறினார்.

அதன்பின் மேற்படி நைஜீரிய பிரஜைக்கு 5 வருடகாலத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட ஒருவருட சிறைத் தண்டனை விதித்து நீதவான் தீர்ப்பளித்ததுடன் இரு குற்றங்களுக்கும் தலா ஆயிரத்து 500 ரூபா அபராதமும் விதித்தார்.

ஈ.எஸ்.பி.என். கிரிக்கெட் சபை நடத்திய லொத்தரில் 7 இலட்சத்து 50 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண் பரிசு கிடைத்திருப்பதாக மேற்படி இலங்கையர்களுக்கு தொலைபேசியூடாக குறுந்தகவல் அனுப்பி மேற்படி நைஜீரிய பிரஜை மோசடி செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தார். (அ-2)




★1422-ஆறாம் ஹென்றி 9 மாத அகவையில் இங்கிலாந்தின் மன்னன் ஆனான்.

★1864-அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்கப் படைகள் ஜோர்ஜியாவின் அட்லாண்டா நகர் மீது தாக்குதலைத் தொடுத்தனர்.

★1886-தென் கரோலினாவில் சார்ல்ஸ்டன் நகரில் நிலநடுக்கம் ஏற்பட்டதில் 100 பேர் உயிரிழந்தனர்.

★1888-கிழிப்பர் ஜேக்கின் முதலாவது படுகொலை இடம்பெற்றது.

★1897-தோமஸ் எடிசன் முதலாவது திரைப்படம் காட்டும் கருவியான கினெட்டஸ்கோப்புக்கான காப்புரிமம் பெற்றார்.

★1919-அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சி அமைக்கப்பட்டது.

★1920-போலந்தில் கமரோவ் என்ற இடத்தில் சோவியத் போல்ஷெவிக்குகளுடன் இடம்பெற்ற போரில் போலந்து வெற்றி பெற்றது.

★1942-மேற்கு உக்ரைன், டெர்னோப்பில் என்ற இடத்தில் காலை 4.30 மணிக்கு 5 ஆயிரம் யூதர்கள் பெல்செக் என்ற நாசி வதை முகாமிற்கு அனுப்பப்பட்டனர்.

★1945-அவுஸ்திரேலியாவில் லிபரல் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.

★1957-ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து மலாயா கூட்டமைப்பு விடுதலை பெற்றது.

★1962-ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து திரினிடாட் டொபாகோ விடுதலை பெற்றது.

★1968-கார்ஃபீல்ட் சோபர்ஸ் கிரிக்கெட் போட்டியொன்றில் ஒரு ஓவரில் 6 ஆறு ஓட்டங்களை எடுத்து சாதனை புரிந்தார்.

★1978-இலங்கையில் ஜனாதிபதி ஆட்சிமுறையை அறிமுகப்படுத்திய புதிய அரசியல் யாப்பு வெளியிடப்பட்டது.

★1986-கலிபோர்னியாவில் இரு விமானங்கள் வானில் மோதிக் கொண்டதில் 67 பேர் வானிலும் 15 பேர் தரையிலும் உயிரிழந்தனர்.

★1986-சோவியத் பயணிகள் கப்பல் அட்மிரல் நகீமொவ் கருங்கடலில் மூழ்கியதில் 423 பேர் உயிரிழந்தனர்.

★1991-சோவியத் ஒன்றியத்தில் இருந்து கிர்கிஸ்தான் வெளியேறி தனி நாடாக அறிவித்தது.

★1994-ஐரியக் குடியரசு இராணுவம் போர் நிறுத்தத்தை அறிவித்தது.

★1997-வேல்ஸ் இளவரசி டயானா பாரிசில் கார் விபத்தில் உயிரிழந்தார்.

★1998-வட கொரியா தனது முதலாவது செய்மதியை ஏவியது.

★1999-புவெனஸ் ஐரிசில் பயணிகள் விமானம் ஒன்று விமான நிலையத்தில் இருந்து புறப்படுகையில் விபத்துக்குள்ளாகியதில் 65 பேர் உயிரிழந்தனர்.

★2005-பக்தாத்தில் அல் ஆயிம்மா பாலத்தில் கூட்ட நெரிசலில் சிக்கி ஆயிரத்து 199 பேர் உயிரிழந்தனர்.

★2007-அகில இந்திய சமத்துவ கட்சியை நடிகர் சரத்குமார் ஆரம்பித்தார்.

### பிறப்புக்கள்

★1569-ஜஹாங்கீர், இந்தியாவின் முகலாய்ப் பேரரசின் மன்னன் (இ.1627)

★1944-கிளைவ் லொயிட், மேற்கிந்திய தீவுகளின் துடுப்பாளர்.

★1979-யுவன் சங்கர் ராஜா, தமிழ்த் திரைப்பட இசையமைப்பாளர்.


### இறப்புகள்

★1814-ஆர்தர் பிலிப், பிரித்தானிய கடற்படை அட்மிரல், காலனித்துவ நிர்வாகி (பி.1738)

★1963-ஜோர்ஜெஸ் பிராக், பிரெஞ்சு ஓவியர் (பி.1882)

★1997-டயானா, வேல்ஸ் இளவரசி (பி.1961)

★2001-ஜி.கே.மூப்பனார் தமிழக காங்கிரஸ் தலைவர் (பி.ஆகஸ்ட் 30-1931)



**யுவன் சங்கர் ராஜா**

யுவன் சங்கர் ராஜா தமிழ்த் திரை ப்பட இசைய மைப்பாளர்களில் ஒருவர் ஆவார். இவர் இசைய மைப்பாளர் இளை யராஜாவின் இளைய மகன் ஆவார்.

**இசையமைத்து வெளிவரவுள்ள திரைப் படங்கள்:-**

பில்லா 2 (2012), பேசு (2012), காதல் 2 கல்யாணம் (2012), ஆதிபகவன் (2012), தங்க மீன்கள் (2012), சமர் (2012), வேட்டை மன்னன் (2012), மூன்று பேர் மூன்று காதல் (2012), ஆதலால் காதல் செய்வீர் (2012) ஆகிய வையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்கடத்தலில் ஈடுபடுவோருக்கு 20 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை

## கவனம் செலுத்துகிறது அரசு

(கொழும்பு)

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு 20 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதிப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோதமான முறையில் படகுகள் மூலம் வெளிநாடுகளில் புகலிடம் கோருவதற்கான ஒழுங்குகளை செய்வோர் மற்றும் சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்களுக்கு எதிரான சட்டங்களை கடுமையாக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவோரின் சொத்துக்களை முடக்குவது தொடர்பிலும் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகவும் விரைவில் இந்த சட்டங்கள் அறிமுகம் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2006 ஆம் ஆண்டு குடிவரவு குடியகல்வு சட்டத்தில் திருத்தங்களை கொண்டுவர தீர்மானிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு எதிர்காலத்தில் பிணை வழங்க முடியாத வகையில் சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சு மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

புகலிடக் கோரிக்கையாளர்களை அனுதாப அடிப்படையில் நோக்கப்பட வேண்டுமெனவும் இதனால் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கான தண்டனை தொடர்ந்தும் 3 மாதங்களாக நீடிக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறெனினும் சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களுக்கு எந்தவிதமான மன்னிப்பும் வழங்கப்படமாட்டாது எனவும் கடுமையான தண்டனைகள் விதிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## சங்கத்திற்கு பெயர் மாற்றம்

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர்கள் சங்கம் இலங்கை ஊடகவியலாளர்கள் சங்கம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. கொழும்பு பொது நூலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சங்கத்தின் உறுப்பினர்களை தெரிவு செய்யும் வருடாந்த கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது சங்கத்தின் அதிகாரிகள் உட்பட 24 நிறைவேற்று உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். சங்கத்தின் தலைவராக லசந்த ருகுணுகேவும் செயலாளராக ரங்க ஜயசூரியவும் தெரிவு செய்யப்பட்டதுடன் பொருளாளராக துமிந்த சம்பத் தெரிவு செய்யப்பட்டார். (அ-2)

# முன்பள்ளி ஆசிரியர்கள் 40 பேருக்கு டிப்ளோமா கற்கைநெறிக்கு ஏற்பாடு

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

(கிளிநொச்சி)

எமது சமூகத்தின் எதிர்காலம் இன்றுள்ள சிறார்களின் நல் எதிர்காலத்திலேயே தங்கியுள்ளது. ஆகவே அவர்களை நற்பிரஜைகளாக உருவாக்க வேண்டிய பொறுப்பு எம் ஒவ்வொருவருக்கும் உண்டு என பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார். கிளிநொச்சி மாவட்ட மழலைகள் விளையாட்டு விழாவில் அண்மையில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

இன்றுள்ள சிறார்கள் எமது சமூகத்தின் மிகப்பெரும் சொத்துக்கள். அவர்களின் எதிர்காலத்தில்தான் எமது சமூகத்தின் மேன்மை தங்கியுள்ளது. எனவே அவர்களை சிறந்த புத்திஜீவிகளாகவும் சமூக பொறுப்புமிக்கவர்களாகவும் வளர்த்தெடுக்க வேண்டிய கடப்பாட்டை நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

முன்பள்ளி தொடக்கம் சிறார்களின் ஆளுமையை வளர்த்தெடுப்பதற்கான பல்வேறு செயற்பாடுகளை நாம் முன்னெடுத்து வருகின்றோம்.

அதன் ஒரு அங்கமாக தற்போது 40 ஆசிரியர்களுக்கு முன்பள்ளி டிப்ளோமா கற்கை நெறியை தொடர்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தொடர்ந்து ஏனைய ஆசிரியர்களுக்கும் இக்கற்கை நெறியை தொடர்வதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கல்வி பண்டாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் ஏற்பாட்டில் வடமாகாண ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவினரால் நடத்தப்பட்ட இவ்விளையாட்டு விழாவில் கிளிநொச்சி மாவட்டத்தில் நான்கு கோட்டங்களிலும் இயங்கிவரும் முன்பள்ளிகளின் சிறார்களும் பங்குபற்றினர். (அ-2)

# ஒரு இலட்சம் தொன் அரிசி டுபாய்க்கு ஏற்றுமதி செய்ய முடிவு

(கொழும்பு)

ஒரு இலட்சம் தொன் அரிசியை டுபாய் நாட்டிற்கு ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இதுவரை 500 கொள்கலன்களில் அரிசி அனுப்பப்பட்டுள்ளதாகவும் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இலங்கை வரலாற்றில் முதற் தடவையாகவே இந்தளவு அரிசி ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் மேலும் பல நாடுகள் இலங்கையில் இருந்து அரிசியை கொள்வனவு செய்ய முன்வந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஐ.ம.சு.மு. ஏற்பாடுசெய்துள்ள ஊடகவியலாளர் மாநாட்டிலேயே கருத்து தெரிவித்த அவர்,

2 மாதத்தினுள் 4 ஆயிரம் கொள்கலன்களில் அரிசி அனுப்பத் திட்டமிடப்பட்டது. ஆனால் அரிசி ஆலைகளில் போதுமான நவீன தொழில்நுட்ப வசதிகள் இல்லாத நிலையில் துரிதமாக அவற்றை வழங்க முடியவில்லை. இதனால் அரிசி ஆலைகள் நவீன தொழில்நுட்பங்களுடன் முன்னேற்றப்பட்டுள்ளன. (அ-2)

# ஆஸி செல்ல முற்பட்ட 75 பேருக்கு 7 ஆம் திகதி வரை விளக்கமறியல்

படகுமூலம் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவிற்கு செல்ல முயன்றனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 75 பேரை செப்டெம்பர் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதவான் நேற்றையதினம் உத்தரவிட்டார்.

கடந்த 25 ஆம் திகதி நீர்கொழும்பிலிருந்து 27 மைல் தொலைவில் 27 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு குற்றப் புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் தொடர்பான விசாரணைகள் முடிவடையாததால் இவர்களை விளக்கமறியலில் வைக்க அனுமதிக்குமாறு குற்றப் புலனாய்வு பிரிவு அதிகாரிகளான டி.சேனாதீர மற்றும் வாசல விஜயரட்ன ஆகியோர் கோரினர்.

இறுதியில் 75 பேரை செப்டெம்பர் 7 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதவான் ரஷ்மி சிங்கப்புலி சிறார்கள் இருவரை 50 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார். (அ-2)

# விடுதலைப்புலி சந்தேகநபர்கள் 74 பேருக்கு புனர்வாழ்வு வழங்க முடிவு

## அமைச்சர் கஜதீர தெரிவிப்பு

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் இருக்கும் தமிழீழ விடுதலைப்புலி சந்தேகநபர்கள் 74 பேர் முதற்கட்டமாக புனர்வாழ்வளிக்கப்படவுள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

சிறை வைக்கப்பட்டிருக்கும் தமிழ் கைதிகளின் விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டு அவர்களை புனர்வாழ்வளிப்பதன் மூலம் விடுதலை செய்யவென முன்னெடுக்கப்பட்ட திட்டத்தினடிப்படையிலேயே முதற்கட்டமாக 74 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படவிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

இதன்படி நாட்டின் பல்வேறு சிறைச்சாலைகளிலுமிருந்த 48 தமிழ் சிறைக்கைதிகள் தமது வழக்குகளின் முடிவினடிப்படையில் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

இவர்களுக்கு மேலதிகமாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் பணிப்புரையின் பேரில் தமிழ் சிறைக்கைதிகள் 26 பேர் எவ்வித வழக்குகளுமின்றிய நிலையில் நேரடியாக புனர்வழ்வு நிலையத்திற்கு மாற்றம் செய்யப்படவிருப்பதாகவும் அமைச்சர் கஜதீர குறிப்பிட்டார்.

முதற்கட்டமாக இவர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்ட பின்னர் விரைவில் சமூகமயப்படுத்தப்படுவரெனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ-2)



ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயகர் ஐக்கிய நாணய சங்கத்தின் சர்வதேச கூட்டுறவு தின விழா அண்மையில் ஏழாலை முத்தமிழ் மன்ற மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர் ஒருவர் மங்கல விளக்கேற்றுவதையும் கௌரவிக்கப்பட்ட விருந்தினர்கள் மேடையில் நிற்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

(26)


## துட்டகாமினிக்குப் பின்னர்



செங்கை ஆழியான்


**பன்னிரண்டு மன்னர்கள்**

மகாதாடி மகாநாகனின் மரணத்தின் பின்னர் ஆமாண்டகாமினி அபயன் முடிசூடி, ஒன்பதாண்டுகள் எட்டு மாதங்கள் அரசாண்டான்.



அனுராதபுர ஆட்சிக்காலத்து பௌத்த தலம்

(கி.பி.78- கி.பி.88) அவனைக் கொன்று அனுராதபுரச் சிம்மாசனத்தில் அவனது தம்பி கனிராஜானுதீசன் என்பவன் அரியணை ஏறினான். அவனுடைய காலத்தில் சேத்திய பர்வத விகாரையில் (மிகிந்தலை) உள்ள உபோசத மண்டபத்தில் நீண்டகாலமாக நடக்காதிருந்த சமய விழாவொன்றினை நடாத்த விரும்பிய போது, அங்கு உள்ள பிக்குகளிடையே இருவித கருத்துநிலை ஏற்பட்டது. விரும்பாத பிக்குகள் அறுபது பேர் அரசனைச் சிறைப்பிடிக்க முயன்



பொலநறுவை ஆட்சிக்காலத்து பௌத்த தலம்

றனர். அவர்களிடம் இருந்து தப்பிய மன்னன் பின்னர் அந்த அறுபது பிக்குகளையும் சிறைப்பிடித்து, சேத்திய பர்வதத்திலுள்ள கணீரா என்ற செங்குத்துப் பாறையிலிருந்து தள்ளி வீழ்த்திக் கொன்றான். அவனுக்குப் பின்னர் ஆமாண்டகாமினி அபயனின் மகன் குளாபயன் ஓராண்டும், அதன்பின்னர் அவனது சகோதரி சீவலி நான்கு மாதங்களும் அரசாண்டனர்.

சிவிலியின் பின்னர் ஆமாண்டகாமினியின் மருமகனான இளநாகன் என்பவன் அனுராதபுரத்தின் சிம்மாசனத்தில் அமர்ந்தான். அவனது முடிசூட்டுவிழா ஊர்வலம் திஸ்ஸக் குளக்கரையோரமாகச் சென்றபோது, அங்கு குழுமி நின்ற இலம்பக்கர்ணர்கள் (ஒரு குழுமப் பிரிவு) மன்னனுக்கு நின்று மரியாதை செய்யாது தலைநகருக்குச் சென்றுவிட்டனர்.

இதனை அவதானித்த மன்னன் இலம்பக்கர்ணர்களைத் தண்டிக்கும் நோக்குடன், மகாதூபிக்குச் செல்கின்ற வீதியை சண்டாளர்களின் மேற்பார்வையிலிடுமாறு கட்டளை பிறப்பித்தான். இதனால் அவமானப்பட்ட இலம்புக்கர்ணர்கள் ஒன்று சேர்ந்து கலகம் செய்து, இளநாகனைக் கைது செய்து, சிறையிலிட்டு ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டனர். இளநாகன் சிறையிலிருந்து தப்பி மகாதீர்த்தத்தை அடைந்து இந்தியாவுக்குத் தப்பியோடி, அங்கு படை உதவி பெற்று உருகுணைக்கு வந்து அங்கும் படை திரட்டி, இலம்பக்கர்ணர்களின் மீது தண்டெடுத்து வெற்றிபெற்றான். இலம்பக்கர்ணத் தலைவர்களைக் கொல்ல எண்ணியும் அவ்வாறு செய்யாது, தனது தேரின் நுகத்தடியில் இருவரைப் பூட்டித் தேரை இழுக்குமாறு செய்தான். இன்னுமிருவரைத் தேரைத் தள்ளி வருமாறு பணித்து நகரத்துக்குள் நுழைந்தான். அரண்மனை வாயிலை அடைந்ததும் அத்தலைவர்களின் தலைகளைக் கொய்துவிடுமாறு சேவகர்களுக்குக் கட்டளை பிறப்பித்தான். தாயின் குறிக்கீட்டால் அவர்களின் மூக்குகளையும், கால் விரல்களையும் அரிந்து நீக்கித் தண்டனை வழங்கினான்.


இளநாகனுக்குப் பின்னர் அவனுடைய மகன் சந்தமுகசிவா எட்டாண்டுகளும் ஏழு மாதங்களும் (கி.பி101- கி.பி.110) அரசாண்டான். சந்த முகசிவாவின் பட்டத்து மகஷியின் பெயர் தமிழ்த் தேவி ஆகும். சந்தமுகசிவாவுக்குப் பின்னர் அவனுடைய சகோதரன் யசலாகதீசன் மணிமுடிதரித்தான் (கி.பி 110- 118). இவன் ஒரு விசித்திரமான வினை யான விளையாட்டினைப் புரிந்தான். தன்னைப் போலிருந்த சுபா என்ற வாயிற்காப்போனுக்கு தனது அரச ஆடையணிகளை அணிவித்துத் தன் சிம்மாசனத்தில் இருத்தியும், தான் சுபாவின் ஆடைகளையணிந்து வாயிற்காப்போனாக மாறி தன் அமைச்சர்களை ஏமாற்றி வந்தான். ஒருநாள் சிம்மாசனத்திலிருந்த சிவா, வாயிற்காப்போன் வேடத்திலிருந்த மன்னனைப் பிடித்துச் சிரச்சேதம் செய்துவிடுமாறு கட்டளையிட்டான். அவ்வாறே நடைபெற்று முடிந்தது. அதன் பின்னர் சுபராஜா என்ற நாமத்தோடு ஆறாண்டுகள் அரியாசனத்திலிருந்தான். (கி.பி.118-124) இந்த சுபராஜா மூன்று விகாரைகளைக் கட்டுவித்துள்ளான்.

சுபராஜாவின் ஆட்சிக் காலத்தில் சோதிடர்கள் அவனுக்குப் பின்னர் வசபன் என்பவன் மன்னனாவான் என அறிவிக்க, வசபன் என்ற பெயருடைய அனைவரையும் கொன்றுவிடுமாறு மன்னன் கட்டளை பிறப்பித்தான். இலம்பகர்ண மரபினைச் சேர்ந்த வசபன் என்றொருவன் உத்திரதேசத்தில் (இலங்கையின் வடபகுதி) தனது மாமனாரான படைத்தளபதி ஒருவனிடம் பணியாற்றி வந்தான். மன்னனின் அறிவித்தலைக்கேட்ட படைத் தளபதி தனது மருமகனை மன்னிடம் ஒப்படைப்பதன் மூலம் பரிசில்கள் பெற எண்ணங் கொண்டான். உடன் வசபனையும் தனது மனைவி பொத்தா என்பவளையும் அழைத்துக்கொண்டு அரண்மனைக்கு ஒரு நாள் வந்தான். இருவரையும் அரண்மனை வாயிலில் நிறுத்திவிட்டு, படைத் தளபதி உள்ளே சென்றதும் மனம்பொறுக்காத படைத் தளபதியின் மனைவி பொத்தா, ஆயிரம் பொற்காசுகளை வசபனிடம் கொடுத்து ஓடித்தப்புமாறு துரத்திவிட்டாள். தப்பியோடிய வசபன் மகா விகாரையில் தஞ்சம் புகுந்து, அங்குள்ள தேரர்களினால் உருகுணைக்கு அனுப்பப்பட்டான். அங்கு படை திரட்டிய வசபன், சுபராஜாவைப் போரில் வெற்றிகொண்டு, மாமனையும் கொன்றழித்தான். பின்னன் தனக்கு உதவிய தனது அத்தை முறையான பொத்தாவை பட்டத்து மகஷியாக்கி, பட்டம் சூடினான்.



பண்டுகாபயன் உட்பட்ட மிகப் பழைய மன்னர்களது சித்திரம்

வசபன் இலம்பகர்ண அரச பரம்பரையைச் சேர்ந்தவன். மீண்டும் ஒரு தடவை இலம்பகர்ணவம்சம் அரச கட்டிலேறியது. இவர்கள் அனுராதபுர அரச பரம்பரையைச் சேர்ந்தவர்கள் அல்லர். வசபனின் ஆட்சி அதிகாரம் தெற்கில் உருகுணையிலும் வடக்கில் நாகதீவிலும் நிலைத்திருந்தது. உருகுணையில் அகப்பட்ட கல்வெட்டுகளும் வடக்கில் வல்லிபுரத்தில் அகப்பட்ட பொற்சாசனமும் இதனை நிருபிக்கின்றன.



வசபன் காலத்தில் அமைக்கப்பட்ட நீர்நிலை

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி மாவட்ட விவசாயிகள் வங்கிக்கடனை மீள்செலுத்துவதை இரத்துச் செய்யுங்கள்

## செல்வம் எம்.பி. ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கிளிநொச்சி)

**வங்கியில் கடனைப்பெற்று விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள விவசாயிகள் தற்போது நாட்டில் நிலவும் வரட்சி காரணமாக பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதனால் விவசர்யிகள் பெற்ற கடன்களை இரத்துச் செய்யுமாறு அரசாங்கம் கோரியுள்ளது போன்று குறித்த கடன்களை பெற்று விவசாயம் மேற்கொண்ட வன்னி மாவட்ட விவசாயிகளுக்கும் குறித்த நடவடிக்கை அமுல்படுத்தப்பட வேண்டும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

விவசாயிகள் வங்கியில் இருந்து கடன்களை பெற்றும் தமது நகைகளை அடகு வைத்தும் குறித்த நெற்பயிர்ச்செய்கையினை மேற்கொண்டுள்ளனர்.

குறிப்பாக வன்னியிலும் விவசாயிகள் குறித்த நடவடிக்கைகள் மூலம் பணத்தை பல்வேறு நெற்பயிர்ச்செய்கையினை மேற்கொண்டுள்ளனர். இந்த நிலையில் நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சியின் காரணமாக நெற்பயிர்ச்செய்கைகள் அழிவடைந்த நிலையில் உள்ளன.

எனவே, பாதிக்கப்பட்ட தென்பகுதி விவசாயிகளின் வங்கிக்கடன்களை உடன் இரத்து செய்யுமாறு அவர்கள் அடகு வைத்துள்ள நகைகளின் வட்டியை குறைத்து பெரும்போக நெற்பயிர்ச் செய்கையின் போது அதனை பெற்றுக்கொள்வதற்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

குறித்த வரட்சியின் காரணமாக மன்னார் மாவட்டத்தில் ஆயிரத்து 250 ஏக்கர் நெற்பயிர்ச்செய்கையும் 350 ஏக்கர் ஏனைய பயிர்ச்செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் 926 ஏக்கர் நெற்பயிர்ச்செய்கையும் 185 ஏக்கர் ஏனைய நெற்பயிர்ச்செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 100 வீதம் 16 ஏக்கரும் 50 தொடக்கம் 75 வீதம் வரை 249 ஏக்கரும் 25 தொடக்கம் ஒரு வீதம் வரை 207 ஏக்கர் நெற்பயிர்ச்செய்கையும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# அமைச்சர் விமல் வீரவன்ச இருட்டடிப்பு செய்கிறார்

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

(எப்பாவல)

தனது தந்தையான முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் கம் உதாவ வீடமைப்புத் திட்டங்களுக்கு அமைச்சர் விமல்வீரவன்ச ஜனசெவன என்ற முத்திரையை ஒட்டியிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

எப்பாவல பிரதேசத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

கடந்த 2000 ஆம் ஆண்டு அனைவருக்கும் வீடுகளை வழங்க வேண்டும் என்பதே எனது தந்தையின் நோக்கம். தற்போது 11 இலட்சம் பேர் வீடுகள் இன்றி இருக்கின்றனர்.

மாகாண சபைகளின் ஆட்சி அதிகாரத்தை ஐக்கிய தேசியக்கட்சி கைப்பற்றிய பின்னர் எமது கட்சியின் கீழ் கிராமங்களில் வீடுகளை நிர்மாணிப்பதை ஆரம்பிப்போம் என்றார். (அ-2)

# லெபனானில் உள்நாட்டு போர் வெடிக்கும் நிலை

## இலங்கை தூதுவர் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை பணியாளர்களை லெபனானுக்கு அனுப்ப வேண்டாம் என அந்நாட்டுக்கான இலங்கை தூதுவர் ரஞ்சித் குணரட்ன தெரிவித்துள்ளார்.

லெபனானில் உள்நாட்டு போர் ஏற்படக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே தொழில் வாய்ப்புக்களுக்காக இலங்கையர்களை லெபனானுக்கு அனுப்பும் நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

ஆயுதக்குழுக்கள் தலைநகர் பெய்ரூட் விமான நிலையத்திற்கு செல்லும் பாதையை கூட மறைத்துள்ளனர். விமான சேவைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

லெபனானில் சுமார் 85 ஆயிரம் இலங்கையர்கள் பணியாற்றி வருகின்றனர். அவசர நிலைமை காரணமாக அவர்களை உடனடியாக இலங்கைக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# திவிநெகும சட்டமூல தீர்மானம் சபாநாயகருக்கு அனுப்பப்படும்

## உயர்நீதிமன்றம் தெரிவிப்பு

(கொழும்பு)

மூன்று மனுக்களால் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ள திவிநெகும சட்டமூலம் அரசியலமைப்புக்கு அமையும் தன்மைபற்றி நீதிமன்றம் தனது தீர்மானத்தை சபாநாயகருக்கு எதிர்வரும் செப்டெம்பர் 6 ஆம் திகதி அனுப்பிவைக்கவுள்ளது.

சமுர்த்தி அதிகாரசபை, தெற்கு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் உடரட்ட அபிவிருத்தி அதிகார சபை ஆகியன இணைந்து திவிநெகும அபிவிருத்தி திணைக்களம் எனும் புதிய திணைக்களத்தை அமைத்தல் மற்றும் திவிநெகும சமுதாய அடிப்படையிலான வங்கி சமூகங்களை நிறுவல் ஆகியவற்றுக்கு வழி செய்யும் இந்த சட்டமூலம் கடந்த 10 ஆம் திகதி நாடாளுமன்ற ஒழுங்கு பத்திரத்தில் இடம்பெற்றிருந்தது.

மாகாண சபையின் கீழுள்ள விடயங்களை திவிநெகும அபிவிருத்தி திணைக்களம் எடுத்துக்கொள்ளவுள்ளதால் இந்த சட்டமூலம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் நிறைவேற்ற வேண்டும்.

இதற்கு முன்னர் குறித்த சட்டமூலம் தொடர்பில் ஒவ்வொரு மாகாண சபையும் கருத்து கூறுவதற்காக அனுப்பப்பட வேண்டும் எனவும் மனுதாரர்கள் தெரிவித்தனர்.

திவிநெகும தேசிய குழுவின் அங்கத்தவர் நியமனம், திவிநெகும அபிவிருத்தி நிதி, பொது நிதி என்பவை தொடர்பாக இந்த சட்டமூலம் அமைச்சருக்கு வழங்கியுள்ள அதிகாரங்கள் அரசியலமைப்புக்கு முரணானவை எனவும் மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர். (அ-2)

# தேர்தலுக்கான எமது முடிவினால் அரசாங்கம் தடுமாறி போயுள்ளது

## அமைச்சர் பதவியை பணயம் வைத்துள்ளேன் - ஹக்கீம்

(திருகோணமலை)

கடந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தலினால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு போட்டியிடாத காரணத்தினால்தான் தமிழ்ப் பிரதேசங்களில் தேர்தல் மோசடிகளை செய்து அமைச்சர் அதாவுல்லாவினால் களமிறக்கிய மூன்று வேட்பாளர்களும் வெற்றி பெற முடிந்தது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசார கூட்டத்தில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

சர்வதேசத்துக்கு காட்ட வேண்டும் என்ற நோக்கத்திலேயே ஆணவத்தோடும் இறுமாப்போடும் கிழக்கு மாகாண சபைத்தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கு அரசு தீர்மானித்தது. ஆனால் அரசாங்கம் ஆரம்பித்த இந்த நாடகம் இன்று தலைகீழாக மாறுகின்றதொரு நிலை உருவாகியுள்ளது.

சென்றமுறை போன்று இம்முறை மோசடிகளுக்கு இடமிருக்காது இப்போது புதிய தேர்தல் ஆணையாளர் இறுக்கமான உத்தரவுகளை பிறப்பிக்கின்றார்.

அதேவேளை எனது அமைச்சுப் பதவியினை பணயம் வைத்து களமிறங்கியுள்ளதொரு தேர்தலாகதான் இது இருக்கின்றது. நாங்கள் இத்தேர்தல் தொடர்பாக எடுத்துள்ள முடிவினால் அரசாங்கம் தடுமாறிப்போயுள்ளது.

கிழக்கிலே முஸ்லிம் காங்கிரஸ் வெல்வதானது கிழக்கிலுள்ள முஸ்லிம்களுக்கு மட்டுமானதல்ல. வடக்கு கிழக்குக்கு வெளியே வாழ்கின்ற முஸ்லிம்களை பாதுகாப்பதற்காக அவர்கள் சந்திக்கின்ற சவால்களுக்கான அவர்களின் விமோசனத்திற்கான ஒரே மார்க்கம் கிழக்கிலே முஸ்லிம் காங்கிரஸ் வெல்ல வேண்டும் என்பதுதான் என்றார். (அ-2)



90 ஆவது சர்வதேச கூட்டுறவு தினவிழா அண்மையில் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச்சபை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் சிறந்த விற்பனை கிளையாக மெகா கோப்பிறட்டி சிற்றி தெரிவாகியது. மேற்படி தெரிவிற்கான பரிசில்களை கிளி.மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தலைவர் த.தர்மசிறியிடம் வழங்குவதை படத்தில் காணலாம். (படம்:- சிவநகர்ச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை. ஆசிரியர்களை விசேட பிரிவினராக வகைப்படுத்த அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

**பல்கலைக்கழக ஆசிரியர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் உயர் கல்வி சேவைத் துறையொன்றை உருவாக்குவதற்குமான அரசாங்கத்தின் கொள்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. இதனால் தற்போது நடைபெறும் பல்கலைக்கழக ஆசிரியர்களின் பகிஷ்கரிப்பு முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.**

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் உயர்கல்வி அமைச்சு முன்வைத்த கொள்கை ஆவணத்திற்கு அமைச்சரவை நேற்று முன்தினம் அங்கீகாரமளித்து இதன்படி பல்கலைக்கழக ஆசிரியர்களை பொதுச்சேவையில் விசேட பிரிவினராக வகைப்படுத்துவதற்கு அரசாங்கம் கொள்கையளவில் இணைங்கியுள்ளது.

பல்கலைக்கழக ஆசிரியர்களின் நீண்டகால கோரிக்கையாக இது விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக பல்கலைக்கழகத்துறை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய தரப்பினர் அடங்கிய குழுவொன்றை அரசாங்கம் நியமிக்கவுள்ளது.

பல்கலைக்கழக ஆசிரியர்களை விசேட பிரிவாக வகைப்படுத்துவதன்மூலம் உயர் கல்வித் தகைமை கொண்டவர்களை பல்கலைக்கழக அதிகாரிகளாக சேர்த்து அவர்களை சேவையில் தக்கவைத்துக் கொள்வதற்கும் தற்போது வெளிநாடுகளில் வசிக்கும் பல்கலைக்கழக ஆசிரியர்களை ஈர்ப்பதற்கும் முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை உயர்கல்வித் துறையில் அவசரமாக மேற்கொள்ளப்பட வேண்டிய மறுசீரமைப்புக்கள் குறித்து ஆராய்வதற்காக விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை நியமிப்பதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது. கல்வியாளர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக விசேட பட்டப்படிப்பு நிர்வாகமொன்றை ஐந்து வருடங்களுக்குள் நிறுவுவதற்கும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

பல்கலைக்கழக முறைமை சுமுகமாக இயங்குவதற்கு சுதந்திரம் மிக அவசியம் என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. பல்கலைக்கழக உள் விவகாரங்களில் அரசாங்கம் தலையிடுவதாக மாணவர்களும் விரிவுரையாளர்களும் முன்னர் குற்றம் சுமத்தியிருந்தனர்.

இதேவேளை இவ்விடயம் தொடர்பாக உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் நவரட்ணவிடம் கருத்து கேட்டபோது, பல்கலைக்கழக ஆசிரியர்களின் பகிஷ்கரிப்பு அடுத்த சில தினங்களில் முடிவடையும் எனக் கூறினார். இவ்விடயம் தொடர்பாக கொள்கை ஆவணமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதை பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் உப தலைவரான வண. தம்பர அமிலதேரர் ஒப்புக்கொண்டார்.

எனினும் இந்த அமைச்சரவை பத்திரத்தின் பிரதியொன்றை நாம் இன்னும் பெற்றுக்கொள்ளவில்லை. எம்முடன் இணைந்து தயாரிக்கப்பட்ட ஆவணத்தை அரசாங்கம் அங்கீகரித்ததா என்பது தெரியவில்லை. நாம் அதை பார்வையிட்ட பின்னர் அது குறித்து கருத்து கூற முடியும் என அவர் தெரிவித்தார். (அ-2)

# மூன்று இலட்சம் பேருக்கு வலிப்பு நோய் பாதிப்பு

## சுகாதார அமைச்சு தகவல்

இலங்கையில் சுமார் 3 இலட்சம் பேர் வரை வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் சவுதி அரேபிய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலையுடன் இணைந்ததாக வலிப்பு நோய்க்கான சிகிச்சை நிலையம் ஒன்று அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு அறிவித்துள்ளது.

30 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்படும் இந்த சிகிச்சை நிலைய அமைப்பு பணிகள் எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு நிறைவு செய்யப்பட வேண்டும் என்று சுகாதார அமைச்சு பணிப்புரை விடுத்துள்ளது. (அ-2)

# வவுனியா மாவட்டத்தில் அனர்த்த முகாமைத்துவக்குழு

(வவுனியா)


வவுனியா மாவட்டத்தில் அனர்த்தங்களின் போது அதனை எதிர்கொள்வதற்கு ஏற்ற வகையில் கிராமசேவகர் பிரிவு தோறும் அனர்த்த முகாமைத்துவ குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் வவுனியா கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்டுவரும் இவ் வேலைத்திட்டமானது 5 குழுக்களை கொண்டதாக 25பேரை உள்ளடக்கி அமைக்கப்பட்டு வருகின்றது.

வவுனியா பூந்தோட்டம் கிராமசேவகர் பிரிவில் நேற்றுமுன்தினம் இவ்வாறான குழுக்கள் அமைக்கப்பட்டன.

ஆண்கள் மற்றும் பெண்களை உள்ளடக்கி அமைக்கப்படும் இக் குழுக்களின் ஊடாக அனர்த்தங்களின் போது முன்னெச்சரிக்கை செய்வதற்கும் மீட்பு நடவடிக்கை மற்றும் நிவாரண உதவிகள், முதலுதவி குழுக்கள் உட்பட 5 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை தொடர்ச்சியாக இவ்வாறான குழுக்கள் வவுனியா மாவட்டத்தில் அமைக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ-9)



வெற்றிலைக் கேணி பிரதேசத்தின் 55 ஆவது படைப்பிரிவினரால் அப்பகுதியில் தெரிவு செய்யப்பட்ட 6 பாடசாலைகளுக்கான குழந்தைகளின் ஊட்டச்சத்து தொடர்பான பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு அண்மையில் புலோப்பளை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற்றது. இந்நிகழ்வின்போது...

# சிறுமி வல்லுறவு; படைவீரர் கைது

சிறுமி ஒருவரை பல தடவைகள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய சம்பவத்தில் தொடர்புடைய இராணுவ வீரர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கல்கிரியாகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, பதின் மூன்று வயதுடைய மாணவி ஒருவரை பல சந்தர்ப்பங்களில் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி கர்ப்பமாக்கிய குற்றத்திற்காக இராணுவ வீரர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-2)

# குளியலறையில் இஸ்லாமிய சமய சின்னங்கள் பதிப்பு

## முஸ்லிம்கள் கவலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் குளியலறைகள் பலவற்றில் இஸ்லாமிய சின்னங்கள் பொறிக்கப்பட்ட தரையோடுகள் பொருத்தப்பட்டமை குறித்து அப்பிரதேச முஸ்லிம்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பிலுள்ள இஸ்லாமிய வர்த்தகர்களின் நலன்புரி சங்கத்தின் தலைவ ரான மொஹமட் கலீல் கூறுகையில், அல்லா பிஸ்மி என அரபு எழுத்துக்களில் எழுதப்பட்ட சமய சின்னங்களைக் கொண்ட தரையோடு காணப்பட்டதாக தெரிவித்தார்.

இவ்விடயம் குறித்து வைத்தியசாலை அதிகாரிகளுக்கு தெரிவித்தோம். சீன ஒப்பந்தகாரர் ஒருவர் இந்த தரையோடுகளை நாட்டிற்கு இறக்குமதி செய்துள்ளதாக தெரிகிறது.

எவரும் வேண்டுமென்றே இதைச் செய்யவில்லை. பின்னர் நாம் இந்த தரையோடுகளை அகற்றுவதற்காக ஆயிரம் தரையோடுகளை வைத்தியசாலைக்கு அன்பளிப்புச் செய்ய தீர்மானித்தோம் என்றார். (அ-2)

# மு.கா.வின் இனவாத பிரச்சினைகள் குறித்து கேள்வியெழுப்பப்படும்

## அமைச்சர் டளஸ் தெரிவிப்பு

ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரசின் இனவாத பிரசாரங்கள் குறித்து கேள்வி எழுப்பப்படும் என இளைஞர் விவகார அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

கொழும்பு மஹாவலி கேந்திர நிலையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

முஸ்லிம் காங்கிரஸின் ஒரு சில சிரேஷ்ட உறுப்பினர்கள் கிழக்கு மாகாணத் தேர்தல் பிரசார நடவடிக்கையின் போது இனவாத அடிப்படையில் செயற்பட்டு வருகின்றனர்.

இந்த விவகாரம் தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கட்சித் தலைவர் கூட்டத்தில் கேள்வி எழுப்பப்படும் சில முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் இனவாத கருத்துக்களை வெளியிடுகின்றனர்.

இவ்வாறான நடவடிக்கைகள் ஆளும் கட்சியை நெருக்கடிக்குள் ஆழ்த்தும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# ஆயுர்வேத வைத்தியர்களை பதிவு செய்யுமாறு கோரிக்கை

(பூந்தோட்டம்)

வவுனியா மாவட்ட ஆயுர்வேத வைத்தியர்களை வவுனியா மாவட்ட ஆயுர்வேத பாதுகாப்பு சபையில் பதிவு செய்து கொள்ளுமாறு பாதுகாப்பு தலைவர் க.சிவராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

செட்டிக்குளம் அடங்கலாக வவுனியா மாவட்ட ஆயுர்வேத வைத்தியத்துறையில் ஈடுபடும் பதிவு செய்த, பதிவு செய்யாத மற்றும் பாரம்பரிய வைத்தியர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னராக தங்களது முழு விபரங்கள் அடங்கிய ஆவணத்தினை வன்னிப் பிளாசா, இல.8, கித்துள் வீதி, குடியிருப்பு, வவுனியா என்ற முகவரிக்கு அனுப்பி தங்களை வவுனியா மாவட்ட ஆயுர்வேத பாதுகாப்பு சபையில் பதிவு செய்துகொள்ளுமாறு தெரிவித்தனர். (அ-9-266)

# ஆஸி.செல்ல முற்பட்ட 39 பேருக்கு ஒருகோடியே 95 இலட்சம் ரூபா பிணையில் செல்ல அனுமதி

(நீர்கொழும்பு)

சட்டவிரோத முறையில் படகுகள் மூலமாக அவுஸ்திரேலியா செல்லமுற்பட்ட போது கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட 43 பேரில் 39 பேரை நீர்கொழும்பு பிரதான நீதிவான் ஏ.எம்.என்.பி அமரசிங்க தலா ஐந்து இலட்சம் ரூபா சரீரப்பிணையில் விடுதலை செய்ய நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

பிணையில் விடுதலை செய்ய உத்தரவிடப்பட்டவர்களை சட்டவிரோதமாக வெளிநாடுக்கு அனுப்ப உதவி ஒத்தாசை புரிந்த குற்றச்சாட்டில் ஏனைய நால்வருக்கும் பிணை வழங்க மறுத்த நீதவான் அவர்களைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு பணித்தார்.

நாட்டின் பல்வேறு பிரதேசங்களையும் சேர்ந்தவர்களே பிணையில் விடுதலை செய்ய உத்தரவிடப்பட்டவர்களாவர்.

39 பேருக்கு வழங்கப்பட்ட சரீரப் பிணைகளின் மொத்தப் பெறுமதி ஒரு கோடியே 95 இலட்சம் ரூபாவாகும். இந்த வழக்கை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 24 ஆம் திகதிக்கு நீதவான் ஒத்திவைத்தார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூகோளமயமாக்கலுக்குள் இழுத்துச் செல்லப்படும் தமிழக அரசியலும் ஈழத்தமிழர் பிரச்சினையும்

தெற்காசியாவிலேயே இந்தியத் துணைக்கண்டத்திலே அமைந்துள்ள தமிழ்நாடு அடுத்த 20 ஆண்டுகளுக்கு மிக முக்கியமான இடத்தை வகிக்க இருப்பதை பல்வேறுவகைக் காரணிகள் எடுத்துக்கூறுகின்றன.

இதில் முக்கியமாக ஈழத்தமிழர்களது பிரச்சினை மிக முக்கிய பங்கை வகிப்பதை அண்மையிலே வோசிங்டனிலிருந்தும் தெற்காசியாவிலிருந்தும் வெளிவரும் அறிக்கைகளும் அறிஞர்களது உரைகளும் குறிப்பிடுகின்றன.

கடந்த 2009 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் இந்திய மத்திய அரசை ஆளும் காங்கிரஸ் கட்சியும் அன்று தமிழ்நாடு மாநில ஆட்சியிலிருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சித் தலைமையும் தமது வெற்றியை தக்கவைத்துக்கொள்ளும் கபட நோக்குடன் செயற்பட்டனர்.

தேர்தலில் கவிழ்த்தனர். தமிழர்களைக் கொன்றொழித்துவிட்டு தமிழுக்கு மாநாடு எடுப்பது எந்த வகையில் நியாயம் என்பது தமிழ்நாடு ஈழ ஆதரவாளர்களது கேள்வியாக இருந்தது.

இதனால், தமிழ்நாடு தமிழர்களை திருப்திப்படுத்த வேண்டிய அதிகப்படியான தேவை தற்போது தி.மு.க. தலைமைக்கு ஏற்பட்டுள்ளது. இதற்கு ஏற்றாற்போல் ஈழத்தமிழர்கள் குறித்த சில முன்னகர்வுகளை தமிழ்நாட்டு மக்களிடையே கொண்டு செல்ல வேண்டிய தேவை தி.மு.க. தலைமைக்கு ஏற்பட்டுள்ளது.

ஈழத்தமிழர்கள் வாழ்வுரிமை மகாநாடு என்ற பெயரில் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக சற்று இறுக்கமாக தீர்மானங்களை போட வேண்டிய நிலைக்கு வந்துள்ளதை இந்த மகா

டெசோ மாநாட்டுத் தீர்மானம் அ.தி.மு.க. அரச தீர்மானத்தைப் போல் அந்த அளவிற்கு புகழ் பெறாதமைக்கு அதன் காலத்திற்கு தகுந்தவாறு உறுதியான நிலை எடுக்காததே முக்கிய காரணமாகத் தெரிகிறது.

அதாவது ஐ.நா. சபையின் வேண்டுகோளுக்கு அமைய வரையப்பட்ட தீர்மானம் வெளிவந்ததன் காலப் பகுதியிலேயே தமிழ்நாட்டு அரசின் தீர்மானமும் வந்திருந்தது. ஆனால், டெசோ மாநாட்டில் தி.மு.க.வின் தீர்மானம், பொதுஜன வாக்கெடுப்பிற்கும் அனைத்துலக விசாரணைக்கும் அழைப்பு விடுத்தாலும் தி.மு.கா.வின் மீதான மக்களின் முன்னைய அனுபவம் அத்தீர்மானத்தின் மீது எவ்வித வியப்பையும் ஏற்படுத்தவில்லையென்றே கொள்ளலாம்.

தி.மு.க., இன்னமும் காங்கிரஸ்

களை நாடி நிற்கும் தமிழ்நாட்டு வேலை வாய்ப்புகள், தமிழ்நாட்டின் சமூகப்பொருளாதார அரசியல் வாழ்வு, தொழில்நுட்பம், பயிற்சிநுட்பம் ஆகியவற்றை வேகமாக மாற்றிவருகின்றன. ஏனைய வட மாநிலங்களுடன் தமிழ் பொருளாதார முதலீட்டு வாய்ப்புகள் கடும் போட்டியிலுள்ளது. சாதாரண மக்களின் வாழ்க்கைத்தரம் வேகமாக முன்னேறி வருகிறது.

ஒருசில துறைகள் ஒரு சில மாவட்டங்களில் வளர்ந்துவரும் பொருளாதாரத்துடன் ஈடுகொடுத்து வளர முடியாதிருந்தாலும் முதலாளித்துவப் பொருளாதார பொறிமுறைக்குள் அவையாவும் சிக்கி தமது இடத்தை நிரப்பவேண்டிய நிலை ஏற்படும் என்பது பல பொருளியல் ஆய்வாளர்களின் கருத்தாக இருக்கிறது.


சில பத்து கடல் மைல்களுக்கப்பால் தமது சொந்த தமிழ் சகோதரர்கள் இனப்படுகொலைக்குள்ளாவதை நயவஞ்சகமாக இவர்கள் மறைத்துவிட்டதாக தமிழ்நாட்டு மக்கள் மனக்கோபம் கொண்டிருந்தனர்.

இதன் பக்கவிளைவாக கடந்த தமிழ்நாட்டு சட்டமன்ற தேர்தலில் திராவிட முன்னேற்றக்கழக ஆட்சி எதிர்கட்சி நிலைக்கே வர முடியாதபடி துடைத்தெறியப்பட்டது. இதனைத் தொடர்ந்து அதன் எதிராளிக் கட்சியான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பெருவெற்றி பெற்றுக் கொண்டது.

இவ்வேளையில் இன்னும் பதினெட்டு மாதங்களில் மீண்டும் இந்திய நாடாளுமன்றத்திற்கான தேர்தல் வரவுள்ளது என்பதை சொல்லப்படாத மறைமுக ஆயத்தப்படுத்தல்களின் ஆரம்பமும் விழாக்களும் விவாதங்களும் ஊக்குவிப்புத் திட்டங்களும் கட்டியம் கூறி நிற்கின்றன.

இந்த மறைமுக ஆயத்தப்படுத்தல்களில் தமிழ் மக்களை இன உணர்வுச் சூட்டிலிருந்து தணியவைப்பது, திசை திருப்புவது, அல்லது அதே சூட்டை சாதகமாக்கிக்கொள்வது என்பதே தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளின் எதிர்கால தந்திரங்களாக இருக்க முடியும்.

இந்த மூன்று வகை



அதேவேளை தமிழ்நாட்டு மக்களின் வளர்ச்சியும் தொழில்நுட்பமும் தொலைத்தொடர்பு வளர்ச்சியும் இந்தியாவின் மொழிசார் மாநிலங்களுக்கிடையிலான பொருளாதார வளர்ச்சிப் போட்டிநிலையும் சேர்ந்து ஈழத்தமிழர் நிலைக்கு அப்பால், இன உணர்வையும் இழுத்துக்கொண்டே செல்கிறது என்பது சமூகவியலாளர்களின் கருத்தாகவுள்ளது.

இந்த இரு ஆய்வறிக்கைகளின் அடிப்படையில் கடந்த சட்டமன்றத் தேர்தல்களில் ஏற்பட்ட பாரிய மாற்றம் சில உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளதாகவே தெரிகிறது.

தனது அயல் நாடுகளுடனான சவால் குறித்த போக்கில் மாற்றங்களைக் கொண்டு வரவேண்டிய நிலையை வெளியுறவுத்துறை ஆலோசகர்கள் வலியுறுத்துகின்றனர் என்றால், அல்லது ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு ஏற்றாற்போல் அல்லாமல் இந்தியா ஒரு முக்கிய மாறுபட்ட நிலையை எடுக்க வேண்டி ஏற்பட்டது என்றால், இதற்கு இந்திரா காங்கிரஸ் தமிழ் நாட்டில் கண்ட பின்னடைவு முக்கிய காரணம் எனலாம்.

கொழும்பிலே, இந்திய-அமெரிக்க நாடுகளின் அண்மையபோக்குகள் குறித்து பல்வேறு ஆய்வுகள் செய்யப்பட்டு வருகின்றன. பல

தந்திரங்களையும் கொண்ட சந்தர்ப்பவாதக் கட்சிகள் கூட்டணி அமைத்து தமிழ்நாட்டு மக்களால் உருவாக்கக்கூடிய பல்வேறு தாக்கங்களை கையாளும் நிலைக்குச் செல்லலாம். தமிழ்நாட்டை நோக்கியதான மத்திய மாநில கட்சிகளின் கையாள்கைகள் தமிழ்நாட்டின் முக்கியத்துவத்தை மேலைத்தேயங்கள் கண்டுகொள்ள உதவியாக உள்ளன. முன்பு ஈழத் தமிழர்களுக்கெதிராக தனது சுய நலன்களை மையமாக வைத்து, செய்த பிழைகளை மறைக்க இதுவரை இரண்டு மாநாடுகளை திராவிட முன்னேற்றக்கழக கட்சியும் அதன் தலைமையும் நடத்திவிட்டன.

கடந்தமுறை பதவியிலிருந்த காலத்தில் ஜூன் 2010 இல் உலகத் தமிழ் செம்மொழி மாநாடு என்ற பெயரில் நடாத்திய மாநாட்டிற்குப் பிற்பாடு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை, தமிழ்நாட்டு மக்கள்

நாட்டுத் தீர்மானங்கள் கோடிட்டுக் காட்டுகின்றன.

ஆனால், ஏற்கனவே தமிழ்நாட்டு சட்ட சபையில் முதலமைச்சர் செல்வி ஜெயலிதாவினால் நிறைவேற்றப்பட்ட இலங்கை அரசு மீது அனைத்துலக நாடுகள் விசாரணை நடத்த வேண்டும், இலங்கை அரசு மீது உலக நாடுகள் பொருளாதாரத்தடை விதிக்கவேண்டும் என்ற தீர்மானங்கள் இன்னமும் தி.மு.க.வின் டெசோ மாநாட்டினை விடவும் சக்திவாய்ந்ததாகவே உள்ளன.

தமிழ் நாட்டிலே ஓர் அரசியல் ஆளும் உரிமை கொண்ட சக்தி ஒன்றினால் கொண்டுவரப்பட்ட அந்த தீர்மானமானது ஈழ ஆதரவுச் சக்திகளைக் கூட ஒருவகை ஆச்சரியத்தில் ஆழ்த்திவிட்டிருந்தது. இதனை பல்வேறு பேட்டிகளிலேயே அந்தந்த இயக்கத் தலைவர்கள் வெளிப்படுத்தியிருந்தனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின்

கட்சி மற்றும் இலங்கை அரசு இணைந்த கூட்டுக்குள் சிக்கிக் கொண்டுள்ளதாகவே மக்கள் எண்ணுவதும் அவர்களின் தீர்மானம் முக்கியத்துவம் பெறாமைக்கான காரணமாகும்.

ஏனெனில் தமிழ் நாட்டிலொரு மாநாட்டை தி.மு.க. நடாத்துவதும் இதற்கு எதிராக கொழும்பிலே அரச தொண்டர்கள் கருணாநிதிக்கு கொடும்பாவி எரிப்பதும் கொழும்புப் பத்திரிகைகள் ஆரவாரிப்பதும் தொடர்ந்து இந்திய மத்திய அரசு, தமிழ் நாட்டு நடவடிக்கைகள் இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடுவதாக உள்ளது என்று மிரட்டுவதும் அடுத்து கருணாநிதியை, அவரது வாரிசுகளின் தொலைக்காட்சியிலும் பத்திரிகைகளிலும் மாவீரனாக்குவதும் எல்லாம் முன்னைய அரசியல் நாடகங்களில் கண்ட காட்சிகளும் வசனங்களும் தான்.

மேலைத்தேய நாடுகளின் முதலீடு

நாட்டு இராஜதந்திரிகள் வரவழைக்கப்பட்டு புதிய சிந்தனைக்குழுக்கள் உருவாக்கப்பட்டு இவ் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இங்கே பொதுவாக எல்லா ஆய்வாளர்களும் இலங்கைக்கு பரிந்துரை செய்யும் விடயம் என்னவெனில் "இலங்கை அரசு தற்போது மிகக் கவனத்தில் கொள்ளவேண்டியது, தனி ஈழச் சிந்தனைக் கட்டுமானங்களை உடைப்பதும் தமிழ் நாட்டு மக்களை ஈழத்தமிழர் விடயங்களில் தலையிடாது கண்காணிப்பதும் தான்" என்பதாகும்.

கடந்தகால அனுபவங்களில் இருந்து நோக்குவோமானால், தமிழ் நாட்டு மக்களை, ஈழத்தமிழர் பிரச்சினைகளிலிருந்து திசைதிருப்புவதாகவே இனிவரும் காலங்கள் அமையவுள்ளது என்பதுதான் உண்மை.

லோ. பரமசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவைச் சேர்ந்த பலருக்கு டெங்கு தொற்று காணப்படுகிறது

## வவு.சுகாதார வைத்திய அதிகாரி அதிர்ச்சித்தகவல்

(பூந்தோட்டம்)

வவுனியா நகர கடை வீதியில் பல இடங்களில் நுளம்பு பரவக்கூடிய இடங்கள் காணப்படுவதாகவும் இதனூடாக டெங்கு அபாயம் உள்ளதெனவும் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி துண்டுப்பிரசுரம் மூலமாக மக்களுக்கு அறிவித்தலொன்றினை நேற்று முன்தினம் விடுத்துள்ளார்.

இத்துண்டு பிரசுரத்தில் அவர் தெரிவித்துள்ளதாவது,

டெங்கு உயிர்க்கொல்லி நோயானது கடந்த காலங்களில் பல உயிர்களை பறித்திருந்ததுடன் பலர் நோயினால் பாதிக்கப்பட்டமை நகர மக்கள் அறிந்திருந்த விடயமாகும்.

இந்த வகையில் கடந்த சில நாட்களாக வவுனியா பஜார் வீதியில் உள்ள கடைகளில் பணிபுரியும் வவுனியா மாவட்டத்தை சேர்ந்த பலர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் டெங்கு நோயை பரப்பும் நுளம்புகள் பெருகும் இடங்கள் பெருமளவில் நகர்ப் பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

நகர மக்களுக்கு கடை உரிமையாளர்களும் பின்பற்ற வேண்டியதாக அறிவித்துள்ள நடைமுறைகளை பின்பற்றாத இடத்து டெங்கு தடுப்பு சட்டத்தின் பிரகாரம் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

இத் துண்டுப்பிரசுரத்தின் மூலமாக மக்கள் பின்பற்ற வேண்டியதாக குறிப்பிட்டுள்ள நடைமுறைகளாக எந்தவொரு நுளம்பும் பெருகக்கூடிய பொருட்கள், நீர்த்தேக்கங்கள் தங்களது ஆளுகைக்குட்பட்ட பகுதியில் இருத்தல் கூடாது, தங்களது ஆளுகைக்குட்பட்ட பிரதேசத்திற்கு வெளியில் உள்ள பகுதிகள், வடிகால்கள், வீதியோரங்கள் மற்றும் ஏனைய இடங்கள் முழுமையாக சுத்தப்படுத்தப்பட்டு நுளம்பு பெருக்கம் ஏற்படாது தடுத்திருத்தல், உங்களது தேவைக்கு பயன்படுத்தப்படும் நீர் தாங்கிகள், தொட்டிகள் நுளம்பு பெருக்கம் ஏற்படாதவாறு உரிய வகை மூடிகள் பயன்படுத்தப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும், கூரைகளில் காணப்படும் ரயர்கள், நீர் தேங்கக்கூடிய ஏனைய பொருட்கள் உடனடியாக அகற்றப்பட வேண்டும், வேலைத்தளங்கள் மற்றும் தங்குமிடங்கள் நுளம்பு கடிக்காதவாறு முன்னேற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் நகரப் பகுதியில் உள்ளவர்கள் காய்ச்சல் ஏற்படுமிடத்து உடனடியாக அரச மற்றும் தகுதி வாய்ந்த வைத்தியர்களை நாடுமாறும் கோரியுள்ளார். (அ-9-266)

# சரியான நிறையை பேணாத சில நடைபாதை பழக்கடைகள்

## பாதிக்கப்பட்ட மக்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர்ப்பகுதிகளில் நடைபாதை பழக்கடைகளில் பழங்களின் விற்பனை நடைபெறுகின்றது. இப்பழக்கடைகளில் கொள்வனவு செய்யும் பழங்களின் நிறைகள் குறைவாக காணப்படுவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.நகர்ப்பகுதிகளில் தற்போது நடைபாதை பழக்கடைகளின் வியாபாரம் நன்கு சூடுபிடித்துள்ளது.

இவ்வியாபாரத்தில் தென்பகுதி வர்த்தகர்களும் வடபகுதி வர்த்தகர்களுமே முழுமூச்சில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வியாபார நிலையங்களில் பழங்களை கொள்வனவு செய்கின்ற நுகர்வோரின் தொகையும் அதிகமாகவே உள்ளது.

இது இவ்வாறு இருக்க அவ்வியாபாரிகள் பயன்படுத்தும் நிறுவைத்தராசுகளில் குறைபாடுகள் காணப்படுவதாக பழங்களை கொள்வனவு செய்வோர் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த வியாபார நிலையங்களில் பழங்களை கொள்வனவு செய்துவிட்டு அவற்றின் நிறைகளில் ஏற்பட்ட சந்தேகத்தின் பொருட்டு வேறு கடைகளில் அதனை நிறுத்துப் பார்க்கும் போது அளவுகளில் குறைவு தன்மை ஏற்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இவ்விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனமெடுத்து இவ் அளத்தல் கருவிகளினை சீர்செய்து உரிய நிறையில் பழங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-9)

# புனிதப்பொருள் காட்சிப்படுத்தல் காலத்தில் பலி பூஜை நடத்த வேண்டாம்

## ஜனாதிபதி கோரிக்கை

(கொழும்பு)

புனிதப்பொருள் காட்சிப்படுத்தப்படும் காலத்தில் பலி பூஜைகள் நடத்த வேண்டாம் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளதாக ஜனாதிபதியின் ஊடக பணிப்பாளர் பந்துல ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

புத்தரின் தந்ததாதுக்கள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 10 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் திஸ்ஸ மஹாராம, கொழும்பு, களனி போன்ற பகுதிகளில் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

எனவே, இந்த காலப்பகுதியில் குறித்த பூஜையை நடத்த வேண்டாம் என்று ஜனாதிபதி கோரியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். முன்னேஸ்வரம் காளி கோயிலில் இடம்பெறும் பலி பூஜையை தடுக்குமாறு ஜாதிக ஹெல உறுமய கட்சி மீண்டும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ள நிலையிலேயே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, முன்னேஸ்வரம் காளி கோயில் மிருக பலி பூஜையை ஜனாதிபதி நிறுத்துமாறு உத்தரவிட்டால் தாம் அதை நிறுத்த முடியும் என ஆலய பிரதான குருவான காளிமுத்து சிவபாதசுந்தரம் தெரிவித்திருந்தமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. (அ-2)

# நான் புலி அல்ல; உரிமைக்காக குரல் கொடுக்கும் அரசியல்வாதி

## ஹிஸ்புல்லாவின் கேள்விக்கு அரியநேத்திரன் பதிலடி

நான் புலி அல்ல. தமிழ் மக்களின் உரிமைக்காக குரல்கொடுக்கும் கட்சிவிட்டு கட்சி தாவாத கொள்கைவாதி என்று பா.அரியநேத்திரன் எம்.பி.கூறியுள்ளார்.

தேர்தலுக்காக மேடைகளில் பொய்த்தகவல்களை கூறுவது சிறந்ததல்ல. அரியநேத்திரன் எம்.பி. புலிகளை விட கூடிய பயங்கரவாதி எனவும் அவர் பெரிய புலி எனவும் ஹிஸ்புல்லா கூறியுள்ளார்.

நான் அவருக்கு ஒன்றைக்கூற விரும்புகிறேன். நான் புலி அல்ல. தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுக்கும் கட்சியை விட்டு கட்சி தாவாத கொள்கைவாதி.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் கிளைக் காரியாலயமொன்று பழுகாமத்தில் வேட்பாளர் வெள்ளிமலை தலைமையில் திறந்து வைக்கப்பட்டபோது அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

இனம் நசுக்கப்படும் போது குரல் கொடுக்கும் அரசியல்வாதி நான். நான் இறந்தால் என்னைப் போல் இன்னுமொருவன் இம்மண்ணில் பிறப்பான் என்பதை ஹிஸ்புல்லா புரிந்துகொள்ள வேண்டும். மனிதனுக்கு தலைவிதி உண்டா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் தமிழனுக்கு தலைவிதி உண்டு. அது அ என்கின்ற அகிம்சை போராட்டம். இது தோல்வி கண்டது. இது தந்தை செல்வாவினால் எடுத்துச் செல்லப்பட்டது.


இதன் பின் ஆ என்கின்ற ஆயுதப் போராட்டம். இது முள்ளிவாய்க்காலுடன் முடிவு பெற்றது. தற்போது நடப்பது இ என்கின்ற இராஜதந்திர போராட்டம். இது சர்வதேசமயப்படுத்தப்பட்டுள்ளது.

அடுத்து ஈ என்கின்ற ஈழம். அடுத்து உ என்கின்ற உலகம் அங்கீகரிக்கும். பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் வெற்றிலைச் சின்னத்தில் மூன்று முஸ்லிம்கள் தெரிவு செய்யப்படுவர் என தெரிவித்திருக்கின்ற நிலையிலும் முஸ்லிம் ஒருவர்தான் முதலமைச்சர் என தெரிவித்திருக்கின்ற நிலையிலும் எவ்வாறு தமிழ் வேட்பாளர்கள் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்று முதலமைச்சராக வர முடியும்? என்றார். (அ-2)

# யாழ்.போதனா வைத்தியசாலை

# விபத்து சிகிச்சை பிரிவில் இடப்பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)



யாழ்.போதனா வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடியால் நோயாளர்கள் நடைபாதைகளில் படுத்துறங்கி சிகிச்சை பெற வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இடவசதி பிரச்சினை அதிகளவாக விபத்துப்பிரிவு விடுதிகளிலேயே காணப்படுகின்றது. இப்பிரச்சினை தொடர்பாக சென்ற வார அபிவிருத்திக்குழு கூட்டத்தில் யாழ்.போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் பவானந்தராஜா சுட்டிக்காட்டியிருந்ததோடு மேலதிகமாக 2 ஆயிரம் வரையிலான நோயாளர்களுக்கு கட்டில்கள் தேவைப்படுவதாகவும் சுட்டிக்காட்டியிருந்தார். இதனால் நோயாளர்கள் பல்வேறு சிரமங்களையும் எதிர்கொண்டு வருகின்றனர். (அ-4)



தனங்கிளப்பு 18 ஆவது படைப்பிரிவினரின் உதவியுடன் சேதமடைந்த கோவிலாக்கண்டி,நாவற்குழி வீதிகள் புனரமைப்புச் செய்யும் பணி அண்மையில் நடைபெற்றது. இப்பாதை புனரமைப்புப் பணியில் பொதுமக்களும் படையினரும் ஈடுபட்டுள்ளதைப் படத்தில் காணலாம்.

# ஸ்ரீ.சு.கட்சியின் மாநாடு செப்டெம்பர் 10 ஆம் திகதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் எதிர்வரும் செப்டெம்பர் 10 ஆம் திகதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாடு நடைபெறவுள்ள நிலையில் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு பல்வேறு தரப்பினர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்ட சுதந்திரக் கட்சி அமைப்பாளர் இராமநாதன் அங்கயனின் ஏற்பாட்டில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

சுதந்திரக்கட்சியின் யாழ்.மாவட்டப் பொறுப்புகளை தான் பெற்று 2 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு இந்த மாநாடு நடைபெறவுள்ளதாக யாழ்.மாவட்ட சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் யாழ்.மாவட்டத்தில் சுதந்திரக் கட்சியால் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பில் இந்த மாநாட்டின் போது தீர்மானிக்கப்படவுள்ளதாக அவர் கூறினார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நாட்டார் கதைகள்

## காகமும் அடைக்கலாங்குருவியும்

ஒருநாள் காலைநேரம்.ஒரு காகமும் அடைக்கலாங்குருவியும் உணவு தேடிப் பறந்து கொண்டிருந்தன. அவை இரண்டுமே ஒரு மிளகாய்ச் செடித் தோட்டத்திலே சந்தித்தன. அந்தத் தோட்டத்திற்குக் காகம் முதலில் வந்தது. அது அடைக்கலாங் குரு வியைப்பார்த்து சின்னப் பறவையே நீ இங்கே என்ன செய்கிறாய்? என்று கேட்டது.

அதற்கு அடைக்கலாங்குருவி உன்னைப்போல நானும் எனது இரையைத் தேடுகின்றேன் என்றது. அடைக்கலாங்குருவி காகத்திலும் பார்க்கச் சிறிய உருவமுள்ளது. காகத்திற்குச் சிறியவர்களைக் கொடுமைப் படுத்தும் குணம் உண்டானது. சின்னப்பறவையே நீ இங்கே உணவு தேட வந்ததும் எனது நன்மைக்கே. எனக்கு இப்போது நல்ல பசி; நான் உன்னை எனது இரையாக்கப் போகின்றேன் என்றது.

காகத்தின் பேச்சைக்கேட்ட அடைக்கலாங்குருவி திகைத்துப் போனது. காகம் தன்னைக் கொன்றுவிடும் என்று அது பயந்தது. அது காகத்தைப் பார்த்து நீயோ சிறிய பிராணி, என்னைப்போன்ற சிறிய பிராணியை ஏன் வருத்த வேண்டும் என்றது.

ஆனால், காகமோ அடைக்கலாங்குருவியின் பேச்சைக் கேட்கவில்லை. காகம் அடைக்கலாங்குருவியைக் கொன்று தின்பதற்காக அதன்மேல் பாய்ந்தது. காகத்திடமிருந்து தப்புவதற்கு அடைக்கலாங்குருவி வட்ட வடிவமாகச் சுழன்று பறந்தது. அது கத்திக்கொண்டே பறந்தது. நீ என்னைப் பிடித்துத் தின்ன வேண்டுமானால் முதலில் ஒரு பந்தயம் பிடிப்போம் என்றது அடைக்கலாங்குருவி.

காகமும் ஒரு காரணமும் இல்லாமல் அடைக்கலாங்குருவியைக் கொல்லச் சிறிது வெட்கம் அடைந்தது. பந்தயம் பிடித்தால் நானே வெல்லுவேன்; அப்போது அடைக்கலாங்குருவியை இலேசாகச் சாப்பிடலாம் என்று காகம் நினைத்தது. எனவே, காகம் சின்ன அடைக்கலாங் குருவியே, என்ன பந்தயம், விரைவாகச் சொல் என்றது.

இந்தத் தோட்டத்திலே மிளகாய்ப் பழங்கள் இருக்கின்றன. முதலாவதாக நாங்கள் ஒவ்வொருவரும் பத்துப்பத்து மிளகாய்ப் பழங்களைக் கொத்தி எடுத்துக் கொண்டு வருவோம். அதன் பின்பு நாங்கள் பந்தயம் போடுவோம். எப்படி அந்த யோசனை? என்று அடைக்கலாங்குருவி கேட்டது.



நல்ல யோசனைதான்; அது எனக்கும் சம்மதந்தான் என்றது காகம். உடனே ஒவ்வொன்றும் பத்துப்பத்து மிளகாய்ப் பழங்களைக் கொத்திக்கொண்டு வந்தன. அடைக்கலாங்குருவி காகத்தைப்பார்த்து, இப்போது இந்த மிளகாய்ப் பழங்களைச் சாப்பிடுவதிலே போட்டி போடுவோம்; நீ முதலில் இந்தப் பழங்களைத் தின்று முடித்தால் என்னைக் கொன்று தின்னலாம் என்றது.

இரண்டு பறவைகளும் தாங்கள் கொண்டு வந்த மிளகாய்ப் பழங்களை ஒரே நேரத்திலே தின்னத் தொடங்கின. காகம் முதலில் தின்று முடித்தது. ஆகவே, அது அடைக்கலாங்குருவியை பிடித்துத் தின்ன விரைவாகக் கிட்டப் போனது.

ஆனால், அடைக்கலாங்குருவி அந்தக்காகத்தைக் தடுத்து நிறுத்தி ஒரு நிமிடம் பொறு; நீ! என்னைக்கொன்று தின்னவேண்டுமானால் உனதுவாய் அழுக்காக இருக்கிறதே! அந்த வாயை முதலில் கழுவிக்கொண்டு வா என்று கூறியது.

காகம் தனது வாயைக் கழுவுவதற்காக ஓர் ஆற்றங்கரைக்குப் பறந்து சென்றது. அப்போது அந்த ஆறு காகத்திடம் கரிய காகமே நீ இங்கே என்ன செய்கிறாய்? என்று கேட்டது.

ஆறு காகத்தைப்பார்த்து, இங்கே தண்ணீர் குடிக்க உன்னை விடமாட்டேன். உனது அழுக்கான வாயை இந்தத் தண்ணீருக்குள் அலசாதே! நீ தண்ணீர் குடிக்க வேண்டுமானால் உனது வாயைச் சுத்தம் செய்துகொள்; அதற்குத் தண்ணீர் மொண்டு செல்ல ஒரு பானையை எடுத்துவா என்றது.

காகம் பானை செய்யும் குயவன் ஒருவனிடம் பறந்து சென்றது. என்ன சங்கதி? நீ இங்கே வந்த காரணம் என்ன? என்று குயவன் கேட்டான். அந்தக்காகம் நடந்த சம்பவம் முழுவதையும் குயவனிடம் சொல்லியது.

அப்போது குயவன், இப்போது என்னிடம் ஒரு பானையும் இல்லை. உனக்கு அவசியம் ஒரு பானை தேவையென்றால் நீதான் கொஞ்சம் களிமண் தேடி எடுத்துக் கொண்டு வரவேண்டும்.

அப்போதுதான் நான் விரைவாக உனக்கு ஒருபானை செய்து தருவேன் என்றான். எனவே காகம் கொஞ்சம் களிமண் எடுத்து வருவதற்காகப் பறந்து சென்றது. களிமண் காகத்தைப் பார்த்து என்னைத் தேடிவந்தகாரணம் என்ன என்று கேட்டது.

காகம் தான்வந்த காரணத்தைக்கூறியது. அப்போது களிமண் நிலத்தைக்கிண்டித்தான் என்னை எடுக்கவேண்டும். நீ போய் ஒரு மண்வெட்டி எடுத்துக் கொண்டுவா என்றது.

காகம் மண்வெட்டி செய்யும் கொல்லனிடம் போனது. அவன் கரிய காகமே என்ன சங்கதி? நீ இங்கே வந்த காரணம் என்ன? என்று கொல்ல வேலை செய்பவன் கேட்டான்.

காகம் நடந்த சம்பவம் முழுவதையும் கொல்ல வேலை செய்பவனுக்குச் சொல்லி முடித்தது. கொல்லவேலை செய்பவன் காகத்திடம் விறகு கொஞ்சம் பொறுக்கிவரச் சொன்னான். காகம் அதற்கு இணங்கியது. அது விறகுகளைப் பொறுக்கி வந்து அடுக்கியது.

பின்பு கொல்ல வேலை செய்பவன் இரும்புத்துண்டை எடுத்துவந்தான். அதைக் காகத்திற்குக் காட்டி இந்த இரும்புத்துண்டை விறகுள் வைத்து நெருப்புமூட்டுவேன். இரும்புத்துண்டு நன்றாகச்சூடாகிச் சிவப்பு நிறமாக வரும்; அந்தக் காய்ச்சிய இரும்பை அடித்து அடித்து மண்வெட்டியைச் செய்வேன் என்றான்.


மண்வெட்டி செய்வது எப்படி? என்பதைக் காகம் அறிய விரும்பியது. கொல்லவேலை செய்பவன் அதை விளக்கிக் கூறினான். மேலும் அவன் இரும்புத்துண்டை அடிக்கும் போது அதனைப் பிடித்துக் கொள்ளவேண்டும் என்று காகத்துக்குச் சொன்னான்.

இரும்புத்துண்டு சூடாகிச் சிவப்பு நிறமாக மாறியது. கொல்லவேலை செய்பவன் காகத்திடம் இப்போது நெருப்பிலிருந்து இரும்புத்துண்டை வெளியே எடுத்துஎடு என்று கூறினான். காகமும் அவன் சொன்னவாறு செய்தது.

உடனே காகம் நெருப்புச் சூடுபட்டு எரிந்தது. அது துடிதுடித்து நெருப்பில் விழுந்து இறந்தது.

காகம் அடைக்கலாங்குருவியைக் கொன்று தின்னவும் முடியவில்லை.தன்னாலே தான் கொல்லப்பட்டு இறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்புமிக்க செல்வச்சந்நிதி ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா நேற்றுக்காலை 9.30 மணிக்கு இடம்பெற்றது. இந்நிகழ்வில் முருகப் பெருமானின் ஆயுதமான வேல் மற்றும் விநாயகப் பெருமான் சகிதம் முருகன் வள்ளி தெய்வயானையுடன் உள்வீதி வலம் வருவதையும் இரதத்தில் எழுந்தருளி அடியவர்களுக்கு அருள்பாலிப்பதையும் பக்தர்கள் அங்கப்பிரதட்சணம் செய்வதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலக செய்தியாளர்)

# அரச திணைக்களங்களின் சொத்து மதிப்பீடு இடம்பெற்று வருகின்றது

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திலுள்ள அரச திணைக்கங்களின் சொத்து மதிப்பீட்டு பணிகள் இடம்பெற்று வருவதாக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் வடக்கு பிராந்தியக் காரியாலயத்தின் பிரதம மதிப்பீட்டாளர் எஸ். ஜெயச்சந்திரன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள அரச திணைக்களங்கள் மற்றும் காணிகளின் சொத்துக்களை மதிப்பீடு செய்து வந்த யாழ். பிராந்திய விலை மதிப்பீட்டுத் திணைக்களம் தற்போது வடக்கு பிராந்திய காரியாலயமாக தரமுயர்த்தப்பட்டுள்ளதோடு வடமாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் உள்ள அரச திணைக்களங்கள் மற்றும் காணிகளின் சொத்துவிலை மதிப்பீட்டு பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்த ஐந்து மாவட்டங்களிலும் உள்ள பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் உள்ளிட்ட திணைக்களங்களின் சொத்து மதிப்பீட்டு பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதுதவிர வடக்கில் தற்போது நிலைகொண்டுள்ள முப்படைகளினால் சுவீகரிக்கப்பட்டுள்ள தனியாரின் காணிகளின் சொத்து மதிப்பீட்டுப்பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன்மூலம் காணி உரிமையாளர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது. அரசாங்கமே இந்த நஷ்ட ஈட்டை வழங்கவுள்ளது.மேலும் யாழ். மாவட்டத்தில் மட்டும் மாதாந்தம் சுமார் 600 இற்கு மேற்பட்ட காணி உறுதிகள் பெயர் மாற்றம், விலை மதிப்பீடு (வரி ) என்பனவற்றுக்காக பிரதேச சபைகளினாலும் நகர சபைகளினாலும் அனுப்பி வைக்கப்பட்டுக் கொண்டுள்ளது.

எமது திணைக்களத்தை பொறுத்தவரை ஆளணிப்பற்றாக்குறை தொடர்ந்து இருந்து கொண்டேயுள்ளது.

24 உத்தியோகத்தர்கள் இருக்க வேண்டிய இடத்தில் 19 பேரே தற்போது உள்ளனர். அதுமட்டுமன்றி வெளிக்கள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையும் குறைவாகவுள்ளது. இருப்பினும் தொடர்ந்தும் எமது பணியை முன்னெடுத்து வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## பரீட்சை ஆணையாளரிடம் புலனாய்வு பிரிவினர் விசாரணை

(கொழும்பு)

பரீட்சை ஆணையாளர் என்.ஜே.புஸ்பகுமாரவிடம் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக பெற்றோர் உள்ளிட்ட தரப்பினர் முறைப்பாடு செய்துள்ளனர்.

பரீட்சை வினாத்தாள் மற்றும் பரீட்சை தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் என். ஜே. புஸ்பகுமாரவிடம் புலனாய்வு பிரிவினர் விசாரணை நடத்தி வாக்குமூலமொன்றை பெற்றுக்கொண்டுள்ளனர்.

சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படும் பிரதேசங்களுக்கு புலனாய்வுப் பிரிவின் விசேட குழுக்கள் நேரில் சென்று விசாரணை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.(அ-2)

# இலங்கைப்படையை வெளியேற்றக்கோரி தமிழகம் தழுவியரீதியில் போராட்டம்

## திருமாவளவன் அழைப்பு

இலங்கைப் படையினருக்கு இந்திய அரசு தமிழகத்திலோ அல்லது இந்தியாவின் பிற பகுதிகளிலோ பயிற்சி அளிக்கக் கூடாது என்று தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளும் கட்சி சாராத அமைப்புக்களும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.

ஆனால் இந்திய அரசு தமிழக மக்களின் உணர்வுகளை ஒரு பொருட்டாக மதிக்காமல் இலங்கைப் படையினருக்கு இராணுவப் பயிற்சி அளித்து வருகிறது என தொல். திருமாவளவன் தெரிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு, தற்போது தமிழகத்தில் நீலகிரி மாவட்டம் வெலிங்டனில் உள்ள இராணுவப் பயிற்சிப் பள்ளியில் 2 சிங்களப் படை அதிகாரிகளுக்கு இந்திய அரசு பயிற்சி அளித்து வருகிறது.

அமைச்சரின் இந்த ஆணவம் மிகுந்த பேச்சு இனமானமுள்ள ஒவ்வொரு தமிழரையும் கடுமையாக காயப்படுத்துகிறது.

தமிழினத்தின் உணர்வுகளை அவமதித்து இழிவுபடுத்தியுள்ள அமைச்சரின் இத்தகைய போக்கை விடுதலைச் சிறுத்தைகள் மிக வன்மையாகக் கண்டிக்கிறது. அமைச்சரைக் கண்டித்து ஆங்காங்கே விடுதலைச் சிறுத்தைகள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனா.

இந்த நிலையில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 4 ஆம் நாள் தமிழகம் தழுவிய அளவில் கண்டன ஆர்ப்பாட்டங்களை விடுதலைச் சிறுத்தைகள் நடத்தவுள்ளது. (அ-2)

# கூடங்குள அணுமின் நிலையத்தால் இலங்கைக்கு பாரிய பாதிப்பு

## சூழலியலாளர்கள் மீண்டும் சுட்டிக்காட்டு

தமிழகத்தின் கூடங்குளம் அணுமின்சார நிலையம் இலங்கைக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்று இலங்கையின் சூழலியலாளர்கள் மீண்டும் எச்சரித்துள்ளனர்.

எனவே இலங்கையின் வெளியுறவு அமைச்சு இந்த விடயத்தை இந்திய அரசாங்கத்தின் கவனத்துக்கு கொண்டு செல்ல வேண்டும் என்று அவர்கள் கோரியுள்ளனர்.

இது தொடர்பில் இலங்கையின் சூழலியலாளர்களின் சட்டத்தரணி ஜெகத் குணவர்த்தன கருத்துரைக்கையில்,

அணுமின்சார உற்பத்தியை மேற்கொள்ளும் முன்னர் இந்திய அரசாங்கம் அருகில் உள்ள நாடுகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுள்ளார்.

இந்தநிலையில் கூடங்குளம் அணுமின்சார உற்பத்தி மையத்தை அடிப்படையாக கொண்டு இலங்கை அரசாங்கம் முன்னெச்சரிக்கை கோபுரங்களை அமைக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

கூடங்குளம் அனுமின்சார மையம் இலங்கையின் புத்தளத்தில் இருந்து 240 கிலோ மீற்றர் தூரத்திலேயே அமைந்துள்ளது என்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.(அ-2)

# கிராண்ட்பாஸ் பகுதியில் ஆணின் சடலம் மீட்கப்பட்டது

கொழும்பு கிராண்ட்பாஸ் பிரதேசத்தின் கறுத்தபாலம் அருகில் தொடரூந்து பாதையில் இருந்து அடையாளம் தெரியாத ஆணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

வலதுகாலில் தொடைப்பகுதிக்குக்கீழே செயற்கை கால் ஒன்றை பொருத்திக் கொண்டுள்ள இந்த நபர் சுமார் 30 தொடக்கம் 40 வயது மதிக்கத்தக்கவர் எனவும் 5 அடி இரண்டு அங்குலம் உயரமானவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் சடலமாக மீட்கப்பட்டவர் மஞ்சள் நிற காற்சட்டையை அணிந்துள்ளதுடன் அதில் 7 என்ற இலக்கம் காணப்படுகின்றது. பச்சைநிற சட்டை அணிந்துள்ளார்.

மீட்கப்பட்ட சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் உள்ள பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவம் குறித்து கிராண்ட்பாஸ் பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (அ-2)

# ஜனாதிபதிக்கு நலன் வேண்டியே முன்னேஸ்வரத்தில் பலி பூஜை

## ஆலய பிரதமகுரு கூறுகிறார்

ஜனாதிபதி மற்றும் நாட்டுக்கு நலன் வேண்டி முன்னேஸ்வரம் ஸ்ரீபத்திரகாளி அம்மன் ஆலயத்தில் பலிபூஜை நடத்தப்படவுள்ளதாக ஆலயத்தின் பிரதான பூசகர் காளிமுத்து சிவபாதசுந்தரம் தெரிவித்துள்ளார்.

ஆலயத்தில் நடாத்தப்படும் பலி பூஜையானது எவ்வித அரசியல் நோக்கமும் கொண்டு நடத்தப்படுவதில்லை. பக்தர்கள் தாம் விரும்பி இந்த பலி பூஜையை நடத்துவதாகவும் ஆனால் சிலர் தமது தனிப்பட்ட தேவைக்காக இதற்கு எதிர்ப்புகளை வெளியிட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

நாட்டுக்கும் நாட்டை ஆளும் ஜனாதிபதிக்கும் அமைதி வேண்டி 500 இற்கும் அதிகமான விலங்குகள் ஆலயத்தில் பலி பூஜை நடத்தப்படுகிறது. ஆனால் 500 இற்கும் அதிகமான விலங்குகள் பலியிடப்படுவதாக பிரசாரம் செய்யப்படுவது உண்மைக்கு புறம்பானது. ஆடுகளும் கோழிகளும் மாத்திரமே ஆலயத்தில் பலியிடப்படுகின்றன என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற முடக்கத்தை கண்டித்து சமாஜ்வாடிகட்சி இன்று போராட்டம்

(புதுடில்லி)

பாராளுமன்ற முடக்கத்தை நீக்கி அவைகள் நடத்த வழிவகுக்க வேண்டும் என வலியுறுத்தி பாராளுமன்றம் முன்பாக தர்ணா போராட்டம் நடத்த சமாஜ்வாடி கட்சி தலைவர் முலாயம் சிங் முடிபு செய்துள்ளார்.

இதன்மூலம் தேசிய அரசியலில் தனக்கென ஒரு இடத்தை பிடித்து எதிர்காலத்தில் 3 ஆவது அணியை உருவாக்கவும் திட்டமிட்டுள்ளார்.

பாராளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் ஆரம்பமாகியது முதல் நிலக்கரி சுரங்க முறைகேடு புகார் காரணமாக இரு அவைகளும் தொடர்ந்து முடங்கி வருகிறது. பிரதமர் இராஜினாமா செய்ய வேண்டும் என பா.ஜ., விடாப்படியாக இருப்பதால் அவையில் கூச்சல்-குழப்பம் நிலவி ஒருநாள் கூட ஒழுங்காக நடக்கவில்லை.

பிரதமர் விளக்கம் அளிக்க தயார் என்றாலும் விவாதம் நடத்த தயார் என்று அரசு தரப்பில் கூறினாலும் இதனை பா.ஜ, ஏற்க மறுத்து வருகிறது.

எதிர்வரும் 2014 தேர்தலில் எந்தவொரு கட்சிக்கும் அறுதி பெரும்பான்மை கிடைக்காமல் போகும்போது காங். மற்றும் பா.ஜ. கூட்டணியில் இல்லாத கட்சியினரை சேர்த்து 3 ஆவது அணியை உருவாக்க திட்டமிட்டுள்ளார்.

இவரது செல்வாக்கை பயன்படுத்தி பிரதமர் பதவியை பிடிக்க வழி தேடுவதாக உ.பி. வட்டாரம் தெரிவிக்கிறது.

இதன் முதற்கட்டமாக இன்று பாராளுமன்ற முடக்கத்தை கண்டித்து தர்ணா போராட்டம் நடத்துகிறார். இந்த போராட்டத்தில் இடதுசாரிகள் மற்றும் தெலுங்கு தேசம் உள்ளிட்ட கட்சி எம்.பி.க்கள் உட்பட பலர் பங்கேற்கின்றனர்.

இது குறித்து முலாயம்சிங் நேற்று நிருபர்களிடம் கருத்து வெளியிடுகையில், எந்தவொரு பிரச்சினையானாலும் சபையில் விவாதிக்க வேண்டும். இதற்கு தடை போடுவது ஜனநாயகத்திற்கு உகந்தது அல்ல. நிலக்கரி சுரங்க புகார் தொடர்பாக சுப்ரீம் கோர்ட் நீதிபதியை கொண்டு விசாரணை நடத்தப்பட வேண்டும். மேலும் தவறு நடந்திருந்தால் சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும். ஊழல்வாதிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் எங்களுக்கு மாற்றுக்கருத்து இல்லை. இன்று போராட்டத்தில் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்றார். (அ-2)

## எம்.எஸ்.விஸ்வநாதனுக்கு இசை சக்கரவர்த்தி விருது


(சென்னை)

ஜெயா டி.வி.யின் 14 ஆவது ஆண்டு விழாவில் மெல்லிசை மன்னர் எம்.எஸ். விஸ்வநாதனுக்கு இசை சக்கரவர்த்தி பட்டத்தை முதல்வர் ஜெயலலிதா வழங்கியுள்ளார்.

விஸ்வநாதன் ராமமூர்த்திக்குவிலையுயர்ந்த கார்களையும் 60 பொற்காசுகள் அடங்கிய பொற்கிழியையும் முதல்வர் ஜெயலலிதா பரிசாக வழங்கினார். மூத்த கலைஞர்களான பி.சுசிலா, பி.பி.சீனிவாஸ், ஏ.எல். ராகவன், எஸ்.பி.பாலசுப்பிரமணியம் உட்பட கலைஞர்களுக்கு தங்கப் பதக்கங்களையும் வழங்கி கௌரவித்தார். தமிழக அமைச்சர்கள் உட்பட ஏராளமானோர் இதில் கலந்து கொண்டனர். (அ-2)

## 2 ஆம் உலகப்போர் குண்டு 3 நாட்களாக எரிகிறது

(பிரதிமுனிச்)




இரண்டாம் உலக போருக்கு காரணமான ஜேர்மனியில் அந்த போரின் போது பயன்படுத்த வைத்திருந்த குண்டுகள் பல இடங்களில் புதைந்து கிடக்கின்றன. இவற்றை கண்டுபிடித்து செயலிழக்க செய்யும் முயற்சிகள் தொடர்ந்து நடந்து வருகின்றன.

இதற்கிடையே ஸ்க்வா பிங் மாவட்டத்தில் 250 கிலோ எடை கொண்ட குண்டு புதைந்து கிடப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதை செயவிழக்கச் செய்யும் முயற்சி தோல்வியடைந்தது.

இதையடுத்து இந்த குண்டு முனிச் நகரத்துக்கு கொண்டு செல்லப்பட்டு வெடிக்கச் செய்யப்பட்டது. இந்த சக்திவாய்ந்த வெடிகுண்டை வெடிக்க செய்வதற்கு முன்னதாக அந்த பகுதியில் இருந்த 3 ஆயிரம் மக்கள் வெளியேற்றப்பட்டனர். குண்டு வெடித்த இடத்தில் பெரும் பள்ளம் ஏற்பட்டது. அந்த பகுதி முழுவதும் நிலநடுக்கம் ஏற்பட்டதுபோல குலுங்கியது. இதன் சத்தம் பல கிலோமீற்றர் தூரத்துக்கு கேட்டது. குண்டு வெடித்ததால் எழுந்த தீ கடந்த 3 நாட்களாக எரிந்து கொண்டிருக்கிறது. (அ-2)

## காற்றிலிருந்து தண்ணீர் உற்பத்தி செய்யும் இயந்திரம் கண்டுபிடிப்பு




காற்றில் இருந்து மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இதே தத்துவத்தை கொண்டு தண்ணீரை உற்பத்தி செய்யும் இயந்திரம் ஒன்றை பிரான்ஸ் நாட்டை சேர்ந்த ஒருவர் கண்டுபிடித்திருக்கிறார்.

மார்க் பார்ன்ட் என்பவர் இதற்காக காற்றை கொண்டு இயங்கும் இயந்திரத்தை (விண்ட் டர்பண்) வடிவமைத்து இருக்கிறார். இந்த இயந்திரத்தின் வழியாக காற்றை செலுத்தி சுத்தமான தண்ணீர் பெற முடியும் என்று அவர் கூறுகிறார். (அ)

## ஈரானில் சொத்துக்கள் வாங்கும் உரிமை இல்லை

### ஈரான்வாழ் இந்தியர்கள் குமுறல்

சொத்துக்கள் வாங்கும் உரிமை, திருமணத்துக்கு அங்கீகாரம் போன்ற பிரச்சினைகள் தீர்க்க வழி செய்யும்படி பிரதமர் மன்மோகன் சிங்கிடம் ஈரானில் வசிக்கும் இந்தியர்கள் கோரியுள்ளனர்.

ஈரான் தலைநகர் டெஹ்ரானில் நேற்று தொடங்கிய அணிசேரா நாடுகள் மாநாட்டில் பிரதமர் மன்மோகன் சிங் பங்கேற்கிறார். ஈரானில் வசிக்கும் இந்தியர்கள், பிரதமர் மன்மோகன் சிங்கை டெஹ்ரானில் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினர். அப்போது அவர்கள் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவை அளித்தனர்.

கோரிக்கை மனுவில் கூறியுள்ளதாவது, ஈரானில் நீண்ட காலத்துக்க முன்பே இந்தியர்கள் எண்ணிக்கை பெருமளவில் குறைந்து விட்டது. புதிய தலைமுறையினர். பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளனர். ஈரானில் சொத்துக்கள் வாங்கும் உரிமை இல்லை. ஆண்டுதோறும் குடியிருக்கும் உரிமத்தை புதுப்பிக்க வேண்டியுள்ளது. சட்டபூர்வமான திருமணங்களை அங்கீகரிப்பதில்லை. இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.

இந்த கோரிக்கைகள் குறித்து ஈரான் நிர்வாகத்திடம் விவாதிப்பதாக பிரதமர் மன்மோகன் சிங் உறுதியளித்தார். ஈரானில் உள்ள கேந்திரிய வித்யாலயா பள்ளிக்கு 2 கோடி ரூபாவும் சாகிதானில் உள்ள இந்திய பள்ளிக்கு 20 இலட்சம் ரூபாயும் பிரதமர் மன்மோகன் சிங் மானியமாக வழங்கினார். (அ-2)



அணிசேரா நாடுகளின் உச்சி மாநாடு ஈரான் தலைநகர் டெஹ்ரானில் ஆரம்பமானது. இதில் கலந்துகொள்ள சென்ற பிரதமர் மன்மோகன்சிங்கை ஜனாதிபதி முகமது அகமது நிஜாத் வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

## பாக்.இல் தலிபான்கள் தாக்குதல்; 19 பேர் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் பழங்குடியின மக்கள் அதிகம் வசிக்கும் வசிரிஸ்தான் பகுதியில் உள்ள பர்ஹங் பாபா சோதனைச் சாவடியில் தலிபான் தீவிரவாதிகள் பெரும் படையுடன் வந்து தாக்குதல் நடத்தினர்.

சோதனைச் சாவடியை நோக்கி கண்மூடித்தனமாக துப்பாக்கியால் சுட்டனர். பாதுகாப்புப் படையினரும் பதில் தாக்குதல் நடத்தினர்.

இந்த மோதலில் 9 பாதுகாப்புப் படையினர், 10 தீவிரவாதிகள் என மொத்தம் 19 பேர் பலியாகினர். பலர் படுகாயம் அடைந்தனர். இந்த தாக்குதலையடுத்து அப்பகுதியில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேபோல் நேற்று பத்வார் பகுதியில் நடந்த மோதலில் 3 பாதுகாப்பு படை வீரர்கள் மற்றும் 11 தீவிரவாதிகள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## பின்லேடன் கொலை குறித்து முரணான தகவல் வெளியீடு

(நியூயோர்க்)

தனது படுக்கை அறையின் கதவைத் திறந்து கொண்டு வெளியே எட்டிப் பார்த்த போதுதான் ஒசாமா பின்லேடனை சுட்டோம் என்று அவரைக் கொன்ற அமெரிக்க சீல் படையைச் சேர்ந்த வீரர் தனது புத்தகத்தில் எழுதியுள்ளார்.

முன்னதாக ஒசாமா பின்லேடனைத் தேடிக் கொண்டு அவரது அறைக்குள் நுழைந்த போது அவர் துப்பாக்கியை எடுக்க முயன்றதாகவும் இதையடுத்தே அவரை சுட்டதாகவும் அமெரிக்கா கூறியிருந்தது.

ஆனால், இந்தத் தாக்குதலை நடத்திய சீல் படையின் வீரர்களில் ஒருவரான மெட் பிஸோனெட் எழுதியுள்ள புத்தகம் ஒன்று அடுத்த வாரம் வெளியாகவுள்ளது. இந்தப் புத்தகத்தை அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனம் நேற்று முன்தினம் பெற்றுள்ளது.

அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தியில் ஒசாமா பின்லேடன் தனது அறையின் கதவைத் திறந்து கொண்டு வெளியே எட்டிப் பார்த்தார். இதையடுத்து அவரை உடனே தலையில் சுட்டோம் என்று பிஸோனெட் எழுதியுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இதன்மூலம் ஒசாமா கொல்லப்பட்ட விதம் குறித்து மாறுபட்ட கருத்துகள் வெளியாகியுள்ளன. மேலும் ஒசாமா சரணடைந்தால் அவரை உயிரோடு பிடிக்குமாறு தங்களுக்கு உத்தரவிடப்பட்டிருந்ததாகவும் பிஸோனெட் எழுதியுள்ளார்.

ஒசாமா சுடப்பட்ட விதம் குறித்து எழுந்துள்ள இருவேறு கருத்துக்கள் குறித்து வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் டாமி வெடோர் கருத்துத் தெரிவிக்க மறுத்துவிட்டார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை மட்டும் இருந்தால் போதாது;
சிந்திக்கவும் தெரிய வேண்டும்.
– சாக்கிரட்டீஸ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## குழப்பத்தில் மட்டும் குழப்பம் இல்லை மற்றையதெல்லாம் குழப்பமே

அரசு, ஆட்சி, நிர்வாகம், சட்டம் ஒழுங்கு இவையெல்லாம் எப்படி இருக்க வேண்டும்? எப்படி இயங்கவேண்டும்? என்பதைத் தெரிந்து கொள்ளாதவர்கள் – புரிந்துகொள்ளாதவர்கள் உயர் பதவிகளில் இருந்துவிட்டால் எல்லாம் சின்னாபின்னமாகிப் போய்விடும்.

தனித்து சண்டித்தனமும் கோபாவேசமும் ஆட்சி செய்ய முடியாது. இவை நல்லாட்சிக்கு குந்தகமானவை.

இது தவிர, ஆரோக்கியமான விமர்சனங்களுக்கு உரிய மதிப்பும் மரியாதையும் கொடுப்பது கூட சிறந்த நிர்வாகத்திற்கும் சுமுகமான சூழ்நிலைக்கும் அத்தியாவசியமானவை என்பது புரிதற்குரியது.

இப்போது எங்கள் நாடு எப்படி இருக்கிறது என்று ஒருகணம் சிந்தித்துப் பாருங்கள்.

நீண்டகாலமாக சிறைகளில் அடைபட்டு வதைபட்டு வாழும் தமிழ் இளைஞர்கள் தங்கள் விடுதலைக்காக உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

எனினும் இதுவரை சட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுவதாக இல்லை.

இதேபோல் மீள் குடியமர்ந்த மக்கள் தறப்பாளுக்குள் தங்கள் சீவியத்தை கழிக்கின்றனர்.

அமைச்சர்கள், அரசியல் பிரமுகர்கள் வருகிறார்கள் என்றால் அவர்கள் வருகின்ற வீதிகள் அவசர அவசரமாகத் திருத்தப்படுகின்ற இன்றைய போலித்தனமான நிர்வாகத்தில் தறப்பாளுக்குள் தன் குழந்தையோடு வாழுகின்ற அபலைத் தாயின் பரிதாபத்தை புரிந்துகொள்வதற்கு யாரும் இல்லை.

சரிந்து கிடந்த முல்லைக்காக தன் தேரை தானமாக்கிய பாரி மன்னனின் வரலாறுக்கள் இன்றைக்கு இனிமையான கதைகள் என்றாகி விட்டனவே தவிர அந்தக் கதைகளுக்குள் இருக்கக் கூடிய அரச தர்மங்கள், மன்னர்களின் இயல்புகள், அரச நீதிகள் பற்றி எவரும் சிந்திப்பதாக இல்லை.

இதன் விளைவாகத்தான் பல்கலைக்கழகங்கள் இன்று மூடப்பட்டுக் கிடக்கின்றன.

உயர்தர விடைத்தாள்கள் திருத்துவாரின்றி தேங்கியுள்ளன.

உயர்தரப் பரீட்சை எழுதி பெறுபேற்றை கண்ணுற்று என் பிள்ளைக்கு பல்கலைக்கழகம் கிடைக்கின்றது என்ற ஆனந்தம் இசற் ஸ்கோர் சிக்கலில் கவிழ்ந்து போகிறது.

அந்தோ பரிதாபம் பச்சிளம் பாலகர்களின் புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள்கள் கூட அவுட்டாகி விடுகின்றன.

கடவுளே! எதுதான் இந்த நாட்டில் ஒழுங்காக நடக்கிறது? எதுவுமே இல்லை.

குழப்பத்தில் குழப்பம் இல்லையே தவிர மற்றெல்லாவற்றிலும் குழப்பம்தான்.

## 7ஆவது நாளாக நேற்றும் இந்.பாராளுமன்றம் முடக்கம்

(புதுடில்லி)

நிலக்கரி ஊழல் பிரச்சினைக்கு தார்மீகப் பொறுப்பேற்று பிரதமர் பதவி விலகக் கோரி பாரதிய ஜனதா உறுப்பினர்கள் நேற்று அமளியில் ஈடுபட்டதால் ஏழாவது நாளாக பாராளுமன்றத்தின் நடவடிக்கைகள் முடங்கின.

இலங்கைப் பாதுகாப்புப் படையினருக்கு மத்திய அரசு பயிற்சி அளிப்பதைக் கண்டித்து அ.தி.மு.க சார்பில் மக்களவையில் கோசம் எழுப்பப்பட்டது.

நேற்று மக்களவை கூடியதும் சபாநாயகர் மீரா குமார் கேள்வி நேரத்தை எடுத்துக் கொள்ள முயன்றார்.

இலங்கைப் பாதுகாப்பு படையினருக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்கக் கூடாது என்று தமிழக முதலமைச்சர் பலமுறை கேட்டுக் கொண்டும் மத்திய அரசு தமிழ் மக்களின் உணர்வுகளை மதிக்காமல் தொடர்ந்து ஊட்டியில் இலங்கைப் படையினருக்கு பயிற்சி அளித்து வருகிறார்கள்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அ.தி.மு.க உறுப்பினர்கள் கோஷங்களை எழுப்பினார்கள். இதே கோரிக்கைக் காக தி.மு.க. உறுப்பினர்களும் கோஷமிட்டனர்.

உறுப்பினர்களின் கூச்சல், குழப்பம் காரணமாக அவை நடவடிக்கைகளை சபாநாயகர் ஒத்திவைத்தார்.

(எ–11)

## புதிய கட்டிட திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பொற்பதி சனசமூக நிலைய புதிய கட்டிடத் திறப்பு விழா இன்று நண்பகல் 12 மணிக்கு நடைபெறும்.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் கலந்துகொள்கிறார்.

சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச சபையின் எதிர்க் கட்சித் தலைவர் அம்பலம் ரவீந்திரதாசன், கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வைத்தியரட்ண ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

(எ)

## ஐ.நாவுக்கு அடுத்த மாத இறுதியில் டெசோ தீர்மானம் சமர்ப்பிப்பு

டெசோ மாநாட்டின் தீர்மானங் களை ஐ.நா சபையிடம் சமர்ப்பிக்க தி.மு.க. பொருளாளர் ஸ்ராலின் தலைமையில் அமைக்கப்பட்ட குழு அடுத்த மாத இறுதியில் நியூயோர்க் செல்ல திட்டமிட்டுள்ளது.

இளைஞர் அணி நிர்வாகிகள் நேர்காணல் மற்றும் தி.மு.க. முப்பெரும் விழா முடிந்தபின் டெசோ மாநாட்டின் தீர்மானங்களை ஐ.நா. சபையிடம் சமர்ப்பிக்க தி.மு.க. பொருளாளர் ஸ்ராலின் தலைமையில் அமைக்கப்பட்ட குழு அடுத்த மாத இறுதியில் நியூயோர்க் செல்லத் திட்டமிட்டுள்ளது.

மக்களவை தேர்தலை சந்திப்பதற்கு தயாராகும் வகையில் தி.மு.க. இளைஞரணியை பலப்படுத்தும் முயற்சியில் அக் கட்சியின் பொருளாளர் ஸ்ராலின் தீவிரம் காட்டி வருகிறார்.

வரும் 15–ம் திகதி அறிஞர் அண்ணாதுரை பிறந்தநாளை ஒட்டி தி.மு.க. முப்பெரும் விழா விழுப்புரத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழா முடிபடைந்ததும் டெசோ மாநாட்டின் தீர்மானங்களை ஸ்ராலின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழு நியூயோர்க் சென்று ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூனிடம் நேரில் வழங்கத் திட்டமிட்டுள்ளது.

நியூயோர்க்கில் வசித்து வரும் பான் கீ மூனைச் சந்திப்பதற்கு திகதியும் நேரமும் தி.மு.க. சார்பில் கோரப்பட்டுள்ளது.

அவரைச் சந்திக்க திகதி கிடைக்கவில்லை என்றால் அங்குள்ள உயர் அதிகாரியிடம் தீர்மானம் வழங்கப்படும் என அக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன(எ–11)

## அளவு குறைந்த போத்தல்களை பயன்படுத்தி எரிபொருள் அளப்பு

### பாதிக்கப்பட்டவர்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அளவு குறைந்த போத்தல்கள் பயன்படுத்தி எரிபொருள் அளக்கப்படுவதாக பாதிக்கப்பட்ட மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

குறிப்பாக வாகனத்தின் பயன்பாட்டுக்கென பெற்றோலுடன் ஒயிலும் கலக்கவேண்டிய தேவையுள்ளது. இந்நிலையில் சில எரிபொருள் நிரப்பு நிலையங்கள் அளவு குறைந்த போத்தல்களை பயன்படுத்துவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சரியான அளவைத்தரக்கூடிய கண்ணாடிப் போத்தல்களை பயன்படுத்தாது பிளாஸ்ரிக் போத்தல்களை பயன்படுத்துகின்றனர். இப்போத்தல்கள் சரியான அளவிலும் 5 மில்லிலீற்றர் குறைவாகவே காணப்படுகின்றது.

அவ்வாறு பயன்படுத்தப்படுகின்ற பிளாஸ்ரிக் போத்தல்களும் நெளிவடைந்த நிலையில் அளவிலும் குறைந்த அளவுகளிலேயே ஒயில் அளக்கப்படுவதாக குறிப்பிடுகின்றனர். எனவே உரிய அதிகாரிகள் இவ்விடயத்தினைக் கருத்தில் எடுத்து ஒரே அளவீடுகளை பயன்படுத்த ஆவன செய்ய வேண்டுமென பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(அ–9)




விரும்பிய பொருளை அடைவதற்குச் சிலர் எந்த முயற்சியும் செய்யாமல் அழுது கொண்டிருப்பார்கள். இறைவன்மீது அன்பு கொண்டவரும் மனம் உருகி அழுவார்கள். அன்பால் மனம் அளவில் பட்ட மெழுகுபோல உருகி இறைவன் திருவடியைத் தரிசித்து நிற்பவரும் உளர். கைதொழுது வணங்கி இறைவனைத் தொடர்ந்து வழிபடுவோரும் உளர். இது திருக்கோயில் வழிபாட்டில் நாம் காணும் காட்சிகள். பக்தி என்னும் கனல் பட்டதும் உள்ளம் உருகிக் குழையும் அனுபவம் அற்புதமானது. பொன்போல ஒளிரும் கழல் அணிந்த மின்னல் போல ஒளிரும் திருவடியைப் பார்க்கும் போது மனதுள் பொங்கிவரும் கசிவு. அதுவே பக்தி ஊற்றெடுக்கும் வேளையாகும்.

தொடர்ச்சியான வழிபாட்டால் இந்த உணர்வு ஏற்படும். மனம் ஒன்றிய நிலையில் திருவடிகளில் போய்ச்சேர வேண்டும் என மனம் வேண்டி நிற்கும் கரங்கள் குவிய உள்ளம் குழைய கண்களில் நீர்வார நிற்கும் மனிதக்கோலம் கண்டவர் வியந்து நிற்பர். காதலாகிக் கசிந்து நிற்றல் எல்லோருக்கும் கைகூடாது. இத்தகைய பக்தியனுபவம் அறியாதவர் பயனின்றிப் பிறந்தவராவார். இந்தநிலையை எல்லோரும் எய்த வேண்டுமென்பதை மணிவாசகர் பாடலில் காட்டியுள்ளார். எனவே ஒருவர் பிறவிப் பயனை அடையவேண்டும் எனில் பக்திக்கோலம் பூணவேண்டும்.

மணிவாசகர்பக்தியின்பரவசநிலையை அடைய முடியாதபோது அடியார் மனநிலையை ஆழமாக உற்றுநோக்குகிறார். அவர்களோடு தொடர்ந்து செல்ல முடியாமல் தனித்து நின்று அழுகிறார். தன்னுடைய அழுகைக் கோலம் கண்டு இறைவன் வந்து ஆட்கொள்வான் என நம்புகிறார். அவருடைய உள்ளம் எப்போதும் தன்பலவீனத்தைப்பற்றியே எண்ணுகிறது. இறைவனைக் காண வேண்டும் என்ற ஆவலால் பல வழிகளையே தேடுகிறது. துணையின்றித் தனித்து நிற்றல் என்பது மிகவும் கடினமானது. மெய்யடியாரோடு வழிபாட்டில் இணையமுடியாதபோது அழுது ஏதாவது பெறலாம் என எண்ணுவது இயல்பு.

வாழ்க்கையில் துணையின்றி எதுவும் செய்யமுடியாது. தனியே வாழ்தல் என்பது ஒருவகையான துறவு நிலையாகும். மணிவாசகர் பலரோடு மந்திரியாய் செல்வாக்கோடு வாழ்ந்தவர். ஆனால் இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட பின்பு அவருள் ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளது. நான் தனியனாக நிற்பதால் அடியவர்களோடு சேர்ந்து இறைவனை அடையலாம் என எண்ணுகிறார். ஆனால் அடியார்களுக்கும் தனக்குமிடையேயுள்ள வேறுபாட்டையும் மனதுள் நினைக்கிறார். **தொழுது உன்னைத் தொடரும் அடியார்** என மெய்யடியார்களை இனம் காட்டுகிறார். **தொழுதல்** என்பது இரண்டு கைகளையும் மேலே தூக்கி உச்சிமேல் வைத்து இறைவனை வணங்குவதாகும்.

அவ்வாறு தொழுது வணங்கும் மெய்யடியாரை மணிவாசகரால் தொடர முடியவில்லை. எல்லாவற்றையும் முற்றிலும் துறந்து இறைவனிடம் அடைக்கலமாகும் நிலையை அவர் இன்னமும் எட்டவில்லை. தொடர்ச்சியாக அந்த வழிபாட்டைச் செய்யவும் அவரால் முடியவில்லை. அதனால் இறைவனிடம் அழுது வேண்டுகிறார். தான் எவ்வாறு பணிசெய்ய வேண்டுமென இறைவனிடமே கேட்டு நிற்கிறார். தான் பிறந்த மனிதப் பிறவி பயனுடையதாக அமைய இறைவன் அருள் செய்ய வேண்டுமென எல்லோருக்குமாக வேண்டுதல் செய்கிறார்.

**அழகேன் நின்பால் அன்பாம்**
**மனமாய் அழல் சேர்ந்த**
**மெழுகே யன்னார் மின்னார்**
**பொன்னார் கழல் கண்டு**
**தொழுதே யுன்னைத் தொடர்ந்தாரோந்**
**தொடராதே**
**பழுதே பிறந்தேன் என் கொண்டு**
**உன்னைப் பணிகேனே**

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா பிறிமியர் லீக் கிரிக்கெட் போட்டி; யங்ஸ்ரார், செவ்வானம் அணிகள் வெற்றி

vpl Vavuniya Premier League

(வேலணை)

வவுனியாவில் செவ்வானம் விளையாட்டுக்கழகம் நடத்தி வரும் வவுனியா பிறிமியர் லீக் போட்டிகளில் கடந்த ஞாயிற்றுக்கிழமை போட்டிகளில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம், செவ்வானம் விளையாட்டுக்கழகம் ஆகிய கழகங்கள் வெற்றி பெற்றுள்ளன.

யங்ஸ்ரார் கழகத்திற்கும் விபிஏ கழகத்திற்குமிடையில் இடம்பெற்ற போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற விபிஏ கழகம் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 18 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 60 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

துடுப்பாட்டத்தில் விபிஏ கழகம் சார்பாக குமணேஷ் 22 பந்துகளில் 17 ஓட்டங்களையும் சந்தோஷ் 39 பந்துகளில் 16 ஓட்டங்களையும் பெற்ற அதேவேளை பந்துவீச்சில் யங்ஸ்ரார் கழகம் சார்பாக தினேஷ் 4 ஓவர்களில் 13 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் ரஞ்சன் 3 ஓவர்களில் 10 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் துஷா 4 ஓவர்களில் 12 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

61 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் கழகம் 8.2 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் யங்ஸ்ரார் கழகம் சார்பாக தரிசி 22 பந்துகளில் 27 ஓட்டங்களையும் ஜெசி 17 பந்துகளில் 15 ஓட்டங்களையும் பெற்ற அதேவேளை பந்துவீச்சில் விபிஏ கழகம் சார்பாக சுகந்தன், சங்கர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

செவ்வானம் விளையாட்டுக்கழகத்திற்கும் குட்ஸ்ரார் கழகத்திற்குமிடையில் இடம்பெற்றபோட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய செவ்வானம் விளையாட்டுக்கழகம் 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் செவ்வானம் விளையாட்டுக்கழகம் சார்பாக ஜெயபால் 31 பந்துகளில் 32 ஓட்டங்களையும் கலை 13 பந்துகளில் 21 ஓட்டங்களையும் சிவாசலிஸ் 20 பந்துகளில் 20 ஓட்டங்களையும் பெற்ற அதேவேளை குட்ஸ்ரார் கழகம் சார்பாக பந்துவீச்சில் ரகு 14 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் அம்பி 25 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

133 ஓட்டங்களை வெற்றியிலக்காகக்கொண்டு துடுப்பெடுத்தாடிய குட்ஸ்ரார் கழகம் 20 ஓவர்களில் 99 ஓட்டங்களைப் பெற்று 33 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் குட்ஸ்ரார் கழகம் சார்பாக ரேகன் 30 பந்துகளில் 28 ஓட்டங்களையும் டினோஜன் 34 பந்துகளில் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் செவ்வானம் விளையாட்டுக்கழகம் சார்பாக ரோபட் 21 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் சிவாசலிஸ் 13 ஓட்டங்களுக்கு




2 விக்கெட்டுக்களையும் சுரேன் 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றிய அதேவேளை போட்டியின் நாயகனாக செவ்வானம் விளையாட்டுக் கழகம் சார்பாக சகலதுறைப் பெறுபேறுகளை வெளிப்படுத்திய சிவாசலிஸ் தெரிவானார்.



மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத்தின் உதைபந்தாட்ட போட்டியில் இரண்டாம் இடத்தினைப்பெற்ற ஊரெழு றோயல் அணியினை படத்தில் காணலாம்.

## அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான ஹொக்கிச் சுற்றுப்போட்டி

(வேலணை)

இலங்கை கல்வியமைச்சினால் அகில இலங்கை பாடசாலை அணிகளுக்கிடையே நடத்தப்படுகின்ற பெருவிளையாட்டுப்போட்டியில் மாகாண மட்டத்தில் வெற்றிபெற்ற பாடசாலை அணிகளுக்கான இரண்டாம் கட்டப்போட்டிகள் அடுத்தமாதம் ஆரம்பமாகவுள்ளன.

இரண்டாம் கட்டப்போட்டிகளில் 19 வயதுப் பிரிவு ஆண், பெண்களுக்காக ஹொக்கிப் போட்டிகள் மாத்தளை எட்வேட் பாக் விளையாட்டு மைதானத்திலும் வேனாட் அலுவிகார் விளையாட்டு மைதானத்திலும் எதிர்வரும் 15ஆம், 16ஆம், 17ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

வடமாகாண அணிசார்பில் ஆண்கள் பிரிவில் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் யாழ். கல்விவலயத்தைச்சேர்ந்த யாழ்.மத்திய கல்லூரியும் கலந்து கொள்ளவுள்ளன.



பெண்கள் பிரிவில் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த உடுவில் மகளிர்கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, வவுனியா வடக்கு வலயத்தைச்சேர்ந்த சுந்தரபுரம்அரசினர்தமிழ்க்கலவன்பாடசாலை ஆகியன கலந்துகொள்ளவுள்ளன.




# புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழக கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி; ஆவரங்கால் இந்து இளைஞர், புத்தூர் கலைமதி இறுதிக்கு தகுதி





(வேலணை)

புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழகம் 46ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் கரப்பந்தாட்டச்சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் கடந்த வாரம் நடைபெற்றது. பரபரப்பு மிகுந்த அரையிறுதியாட்டங்களில் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி அச்சுவேலி விக்னேஸ்வரா அணியோடு மோதியது.

ஐந்து சுற்றுக்களைக்கொண்ட போட்டியில் முதல் சுற்றை ஆவரங்கால் இந்து இளைஞர் அணி மிகுந்த போராட்டத்திற்கு மத்தியில் 25:23 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இரண்டாம் சுற்றைச் சுதாரித்து ஆடிய அச்சு வேலி விக்னேஸ்வரா அணி 25:19 ஏன்ற கணக்கில் கைப்பற்றியது.

மூன்றாம் சுற்றிலும் தனது ஆதிக்கத்தை தொடர்ந்த விக்னேஸ்வரா அணி 25:23 என்ற கணக்கில் கைப்பற்றியது.

நான்காம் சுற்றில் தோல்வியிலிருந்து மீண்டெழுந்த ஆவரங்கால் இந்து இளைஞர் 25:22 என்ற கணக்கில் கைப்பற்றினர்.

போட்டியில் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்குச் செல்லும் அணி யார் என்பதை தீர்மானிக்கும் இறுதிச் சுற்றில் ஆவரங்கால் இந்து இளைஞர் அபாரமாக ஆடி 15:13 என்ற ரீதியில் கைப்பற்றி வெற்றி பெற்று இறுதிக்குள் நுழைந்தது.

மற்றைய அரையிறுதி ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணி புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணியோடு பலப்பரீட்சை நடத்தியது. முதலாவது சுற்றில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஆவரங்கால் மத்திய அணி முதல் சுற்றை 25:14 என்ற ரீதியில் மிகவும் எளிதாக கைப்பற்றினர். முதல்சுற்றை எளிதாக இழந்தாலும் அதிலிருந்து மீண்ட புத்தூர் கலைமதி இரண்டாம் சுற்றில் பல வியூகங்களை வகுத்து 25:23 என்ற கணக்கில் கைப்பற்றினர்.

தொடர்ந்து தமது ஆதிக்கத்தை தொடர்ந்த புத்தூர் கலைமதி மூன்றாம் சுற்றை 25:23 என்ற கணக்கிலும் நான்காம் சுற்றை 25:23 என்ற ரீதியில் கைப்பற்றி 3:1 என்ற செட்களில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது. இறுதிப்போட்டியில் புத்தூர் கலைமதி கரப் பந்தாட்டத்தில் தொடர்ந்து சம்பியன் பட்டத்தை வென்று வரும் ஆவரங்கால் இந்து இளை ஞர் அணியோடு மோதவுள்ளது.

இதன் காரணமாக ஆவரங்கால் இந்து இளைஞ ரின் சம்பியன் வேட்டைக்கு புத்தூர் கலைமதி முற்றுப்புள்ளி வைக்குமா? அல்லது ஆவரங்கால் இந்து இளைஞரின் சம்பியன் வேட்டை தொடருமா? என்ற எதிர்பார்ப்புக்கு மத்தியில் இக்கரப்பந்தாட்ட இறுதிப் போட்டி நடைபெறவுள்ளது.

எனவே இவ்விறுதிப் போட்டி கரப்பந் தாட்ட ரசிகர்களுக்கு நல்ல விருந்தாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிக்கெட்டில் ஓய்வு பெறமாட்டேன்-சச்சின்



இந்திய கிரிக்கெட் அணியின் மூத்த வீரர் டெண்டுல்கர் தன் ஓய்வு குறித்து பேட்டியளித்துள்ளார்.

கடந்த 1989-ம் ஆண்டு சர்வதேச போட்டிகளில் அறிமுகமான சச்சின் 23 ஆண்டுகளாக இந்திய அணியில் விளையாடி வருகிறார்.

189 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 15 ஆயிரத்து 489 ஓட்டங்களும் 463 ஒரு நாள் போட்டிகளில் 18 ஆயிரத்து 426 ஓட்டங்களும் எடுத்துள்ளார்.

இதுதவிர டெஸ்டில் 51 சதமும் ஒரு நாள் போட்டியில் 49 சதமும் அடித்துள்ளார்.

இந்நிலையில் சமீபத்தில் டெஸ்ட் அணியில் இடம்பெற்றிருந்த லக்ஸ்மன், ராவிட் ஓய்வுபெற்றனர்.

இதனால் 39 வயதான டெண்டுல்கருக்கு ஓய்வுபெறவேண்டிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

அதற்கு ஏற்றவாறு நியூசிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்டில் 19 ஓட்டத்தில் ஆட்டமிழந்தார்.

இதற்கிடையில் தற்போது ஓய்வுபெறும் எண்ணமில்லை எனவும் உடற்தகுதியுடன் இருக்கும்வரை ஆடுவேன் எனவும் டெண்டுல்கர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது,


தற்போது நல்ல உடல் தகுதியுடன் உள்ளதாகவும் ரசித்து விளையாடி வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும் என்னால் எவ்வளவு காலம் விளையாட முடியுமோ அதுவரை விளையாடுவேன் என்றார்.

இதனால் இப்போது ஓய்வுபெறும் திட்டம் எதுவும் இல்லை.

மேலும் அணியில் மூத்த வீரராக இருப்பதால் எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்றார்.

# ஒருநாள் போட்டியில் அம்லா புதிய சாதனை




ஒருநாள் கிரிக்கெட்டில் வெகுவிரைவாக 3000 ஓட்டங்களைக் கடந்து சாதனை படைத்துள்ளார் தென்னாபிரிக்காவின் ஹசிம் அம்லா.

57 ஒரு நாள் ஆட்டங்களில் பங்கேற்றுள்ள அவர், 3031 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

மேற்கிந்திய தீவுகளின் விவியன் றிச்சர்ட்ஸ் 69 ஒரு நாள் ஆட்டங்களில் 3 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்ததே இதற்கு முன்பு சாதனையாக இருந்த து.


விராட் ஹோலி, தென்னாபிரிக்காவின் இப்போதைய பயிற்சியாளர் கேரி கிரிஸ்டன், மேற்கிந்தியத் தீவுகளின் கார்டன் கிரின்ட்ஜ் ஆகியோர் 72 ஆட்டங்களில் 3 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்து 3ஆவது இடத்தில் உள்ளனர்.

இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் 124 பந்துகளில் 150 ஓட்டங்களை (16 பவுண்டரிகள்) அம்லா எடுத்தார்.

ஒருநாள்கிரிக்கெட்டில் இதுவே அவரது அதிகபட்ச ஓட்டமாகும். இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் ஆட்டத்தில் தென்னாபிரிக்க வீரர் ஒருவர் எடுத்த அதிகபட்ச ஓட்டமும் இதுதான்.



ஐ.சி.சியின் தலைமை செயலாளர் டேல் ரிச்சர்ட்சன் மற்றும் இலங்கையின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரும் உலகின் முதல் நிலை வீரருமான குமார் சங்கக்கார 2012-ம் ஆண்டுக்கான ஐ.சி.சியின் குறுகிய விருதுகள் பட்டியலை அறிவிக்கும்போது...



இந்தியக் கிரிக்கெட் அணியின் யுவராஜ் சிங் இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியிடம் இருந்து அர்ஜுனா விருது பெற்றபோது...

# சுதந்திர விசாரணையை வலியுறுத்...

ஐ.நாவின் நடவடிக்கை குழு காணாமல் போயுள்ளவர்களின் உறவினர்களை சந்தித்துப் பேசுவதற்கும் அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் இங்கு வலியுறுத்தப்பட்டது.

காணாமல்போனோரின் குடும்பத்தினர், காணாமல் போனோரைத் தேடியறியும் குழு, மனித உரிமைகள் இல்லம், மன்னார் பிரஜைகள் குழு உட்பட பல்வேறு அமைப்புகள் இணைந்து இந்த ஆர்ப்பாட்ட நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட பெரும் எண்ணிக்கையான பெண்கள் தமது கணவன்மாரையும் பிள்ளைகளையும் விடுதலை செய்ய வேண்டும்.

அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பதை தெரிவிக்க வேண்டும் என்று அழுது கண்ணீர் விட்டு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நூற்றுக் கணக்கானவர்கள் இந்த ஆர்ப்பாட்ட நிகழ்வில் கலந்துகொண்டனர்.

வவுனியா பேருந்து நிலையத்திற்கு எதிரில் இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது காணாமல் போனவர்களை கண்டுபிடித்து தருமாறு கோஷங்கள் எழுப்பப்பட்டன.

காணாமல் போயிருப்பவர்களின் நிலைமைக்கு அரசாங்கமே பொறுப்புக் கூறவேண்டும் என்று இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் கோஷமிட்டு கோரிக்கை எழுப்பினார்கள்.

காணாமல்போனவர்கள் தொடர்பில் அரசாங்கம் காட்டிவருகின்ற அக்கறையற்ற போக்கைக் கண்டித்து எழுதப்பட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் சுலோக அட்டைகளையும் காணாமல்போனவர்களின் புகைப்படங்களையும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் ஏந்தியிருந்தார்கள்.

ஆர்ப்பாட்டத்தை அடுத்து வவுனியா கலாசார மண்டபம் வரையில் சென்ற பேரணி முடிவில் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பலரும் உரையாற்றினார்கள்.

ஆட்கள் காணாமல்போயுள்ளமைக்கு அரசாங்கமே பொறுப்பேற்று அதற்குரிய தீர்வை வழங்க வேண்டும் என்று இங்கு உரையாற்றிய பலரும் வலியுறுத்தினார்கள்.

வவுனியா நிகழ்வுகள் முழுக்கவும் அரசுசார்பற்ற அமைப்புகள் நடத்தும் நிகழ்வுகளாக நடத்தப்படும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளார்கள்.

இதேவேளை, இனவாத அரசியல் நோக்கங்களுக்காக கடத்தப்பட்ட பெருந்தொகையான தமிழர்களின் குடும்ப உறுப்பினர்கள் சார்பாக அரசாங்கத்திற்கு கடுமையான செய்தி ஒன்றை இந்த காலகட்டத்தில் விடுப்பதற்கு இந்த அரசு சார்பற்ற நிறுவனங்கள் தயக்கம் காட்டுவதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பதற்காக இந்த நிகழ்வில் கலந்துகொள்ளப் போவதில்லை என மக்கள் கண்காணிப்புக் குழுவின் இணைத் தலைவர் சிறிதுங்க ஜெயசூரிய அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணியும் ஆதரவளித்திருப்பதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

இந்த அறிக்கை தொடர்பில் கருத்து வெளியிட்ட காணாமல்போனோரை தேடியறியும் குழுவைச் சேர்ந்த மகேந்திரன் பதிலளிக்கையில், தமது குழு காணாமல் போயுள்ளவர்களை கண்டுபிடித்துக் கொடுப்பதற்காக பாடுபட்டு வருவதாகவும், இந்த நிகழ்வில் சிறிதுங்க ஜெயசூரிய கூறியிருப்பதைப் போன்று தமக்கு வேறு உள்நோக்கம் எதுவும் கிடையாது என்றும் கூறியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மற்றும் மனோ கணேசன் போன்றவர்களுக்கே இதில் அரசியல் உள் நோக்கம் இருப்பதாக பதிலளித்துள்ளார். (உ-1)

# சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து அன்ட்ரூ ஸ்ரொரஸ் ஓய்வு



இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலைவர் அன்ட்ரூ ஸ்ரொரஸ் கிரிக்கெட் போட்டிகள் அனைத்திலுமிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார்.

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அறிவிக்கப்பட்டுள்ள இந்த ஓய்வு அறிவிப்பை அடுத்து புதிய டெஸ்ட் தலைவராக அலஸ்ரெயர் குக் அறிவிக்கப்பட்டுள்ளார்.

ஏராளமான சிந்தனையின் பின்னர் இந்த முடிபை எடுத்துள்ளதாக தெரிவித்த அன்ட்ரூ ஸ்ரொரஸ், அனைத்து வகையான கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் உடனடியாக ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

கடினமான ஒரு முடிபாக அமைந்ததாகத் தெரிவித்த அன்ட்ரூ ஸ்ரொரஸ், ஆனால் இங்கிலாந்து கிரிக்கெட் அணியினதும், தனதும் நலனுக்காக இந்த முடிபை எடுத்துள்ளதாக தெரிவித்தார்.

தன்னோடு இணைந்து விளையாடிய இங்கிலாந்து வீரர்கள், தனது கழகமான மிடில்செக்ஸ் கழகம், பயிற்றுவிப்பாளர்கள் ஆகியோருக்குத் தனது நன்றிகளைத் தெரிவிப்பதாக தெரிவித்த அவர், குறிப்பாக தற்போதைய பயிற்றுவிப்பாளரான அன்டி பிளவருக்கும், முன்னாள் பயிற்றுவிப்பாளரும் தற்போதைய இந்திய அணியின் பயிற்றுவிப்பாளருமான டங்கன் பிளட்சருக்கும் விசேட நன்றிகளைத் தெரிவித்தார்.

துடுப்பாட்டத்தில் அதிக ஓட்டங்களைக் குவிக்க முடியாது காணப்பட்டதாகக் குறிப்பிட்ட அன்ட்ரூ ஸ்ரொரஸ், இது நீண்டகாலமாக நீடித்துக் கொண்டிருந்ததாகவும், இந்நிலை மேம்பட வாய்ப்புகள் இல்லாத நிலையில் ஓய்வு பெறுவதே சிறப்பானது எனவும் தெரிவித்தார்.

தென்னாபிரிக்காவிற்கு எதிரான தொடரில் 2-0 என்ற கணக்கில் தோல்வி அடைந்தபோதிலும் அத்தொடருக்கு முன்னரே ஓய்வு பற்றிய எண்ணம் ஏற்பட்டுவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இசட் புள்...

முடிந்தளவு மாணவ, மாணவியரை பல் கலைக்கழகங்களில் சேர்த்துக்கொள்ளுமா றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்வரும் மூன்றாம் திகதி இறுதித்தீர்வுத் திட்ட அறிக்கை சமர்ப்பிக்க முடியா விட்டால் 10 அஆம் திகதி மனு தொடர்பான விசாரணை களை நடத்த பிரதம நீதியரசர் உத்தரவிட்டுள் ளார். (எ-11)

## பாதுகாப்பு...

பாதுகாப்பு அமைச்சர் நாடுதிரும்ப முன்னர் அவர் கொழும்பு திரும்பி, ஜெனரல் லியாங் குவாங்லியுடன் பேச்சுக்களை நடத்துவார் என்றும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (எ-11)

# மூன்றாம் தரப்பு எதனையும் சீனா குறி வைக்கவில்லை!

(கொழும்பு)

எந்தவொரு மூன்றாம் தரப்பையும் குறி வைப்பதற்காக அன்றி பிராந்தியப் பாதுகாப்பு மற்றும் உறுதிப்பாடு என்பவற்றை பேணு வதற்காகவே மக்கள் விடுதலை சேனை, தென்னாசிய நாடுகளின் படைகளுடன் ஒத் துழைப்பை நாடுகிறது என இலங்கை வந் துள்ள சீனப்பாதுகாப்பு அமைச்சர் லியான்

## குவாங்லி தெரிவிப்பு

குவாங்லி தெரிவித்தார்.

சீனாவுடன் எல்லையைக் கொண்டுள்ள 14 நாடுகளில் 5 நாடுகள் தெற்காசியாவில் உள்ளன எனக் கூறிய அவர், இந்து சமுத் திரம் சீனாவின் முக்கிய வலு மற்றும் பொருள் போக்குவரத்துப் பாதையாக உள்ளது என்றார்.

சீனா தென்னாசிய நாடுகளுடனான உறவு களுக்கு பெரும் முக்கியத்துவம் கொடுத்து வருகின்றது. அபிவிருத்தி மற்றும் பாது[...] உத்திகளை கட்டுப்பாட்டில் வைத்திரு[...] சீனாவின் தேசியப்பாதுகாப்புக் கொ[...] யாகும் என ஜெனரல் குவாங்லி தெரிவித்[...]

பாதுகாப்புப் படைகளின் தலைமைய[...] மற்றும் படை அதிகாரிகளின் கல்லூரிய[...] பேசிய போதே அவர் மேற்கண்டவாறு கு[...] பிட்டுள்ளார். (எ[...]

## அரசியல் குழுக்களிடை...

மத்தில், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைமை வேட்பாளர் நசீர் ஹாபீசினுக்கு ஆதரவு தேடி பெண் ஆதரவாளர்கள் வீடு வீடாக பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வேட்பாளர் அலிசாஹீர் மௌ லானாவின் ஆதரவாளர்கள் இப் பெண்களை தாக்கியுள்ளனர்.

இதையடுத்து, சம்பவத்தில் பாதிக்கப்பட்ட இரண்டு பெண்கள் ஏறாவூர் வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர் பாக விசாரணைகளை நடத்திவருவதாக ஏறா வூர் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (எ-11)

## மிருகபலி பூஜை நிறு...

குறிப்பிடத்தக்கது.

நேற்று வியாழக்கிழமை காலை கூடிய முன்னேஸ்வரம் காளி கோவில் நிர்வாக சபையினர் இந்த முடிவை எடுத்ததாகவும், வரு டாந்தம் இடம்பெற்று வரும் மிருக பலி பூஜை யினை ஜனாதிபதியின் வேண்டு கோளின் பேரில் இவ் வருடம் மாத்திரம் நிறுத்துவதென முடிபு செய்ததாகவும் அவர் தெரிவித்தார்.

புத்த பெருமானின் கபிலவஸ்து புனிதச் சின்னங்கள் காட்சிக்கு வைக்கப்படும் காலத் தில், மிருக பலி பூஜை வேண்டாம் என ஜனாதிபதி கோரிக்கை விடுத்திருந்ததாக தெரிவிக்கப் பட்டது.

இதேவேளை ஜனாதிபதியின் கோரிக் கைக்கு இணங்க மிருக பலி பூஜையை நிறுத் தியமைக்காக முன்னேஸ்வரம் ஸ்ரீ பத்ரகாளி கோவில் பிரதம குருவுக்கு அமைச்சர் [...] வின் சில்வா நன்றி தெரிவித்துள்ளார் [...] அமைச்சரின் ஊடகச் செயலாளர் றொஹ[...] விஜேரட்ன கூறியுள்ளார்.

உரிய நேரத்தில் இவ் விடயத்தில் த[...] யிட்டமைக்காக ஜனாதிபதிக்கும் அமை[...] நன்றி தெரிவிக்கிறார். இந் நாட்டின் ம[...] களின் உண்மையான காவலர் அவரே [...] பதை இது நிருபித்துள்ளது எனவும் வி[...] ரட்ண தெரிவித்துள்ளார். ([...]

## ஈழ விடுதலைக்கு ஆதர...

என்று நினைத்திருந்தேன். ஆனால், கனவா நினைவா என்று வியக்கும் வகையில், மிடுக் கான அந்த இராணுவ உடையோடு அவரே வாசலில் நின்று எங்களை வரவேற்றதைக் கண்டு அதிர்ந்தும் வியந்தும் போனேன்.

ஆயுத இரைச்சல்களும் மரணக் கூச்சல் களும் நிறைந்த போர்ச் சூழலில் பகையை எதிர்த்து படையை நடத்தும் ஒரு மாவீரன், சில மணித் துளிகளைக் கூட நமக்காக எப்படி ஒதுக்க முடியும் என்று எண்ணியிருந்த நிலை யில், சில மணி நேரம் எங்களோடு இருந்தார் என் பதே எங்களது வியப்பை மேலும் விரிவாக்கி யது.

குடும்ப வாழ்க்கை, பொது வாழ்க்கை, தமிழக அரசியல், இந்திய அரசியல், உலக நடப்புகள் இப்படி ஏராளமான, இயல்பான உரையாடல்கள். ஒவ்வொரு நொடிப்பொழு தும் நெருப்பு ஆறுகளை கடக்கும் போராட்ட வாழ்க்கையிலும் நகைச்சுவை மிகுந்த ஒரு போராளியாக எப்படி இவரால் இருக்க முடி கிறது என்று வியக்கும் அளவுக்கு அவரது உரையாடலின் பெரும்பகுதி அமைந்திருந் ததைக் கண்டு சிலிர்த்தேன்.

நண்பகல் உணவின் போது, அவரது வலப் பக்கம் அமர்ந்திருந்த எனது இலையில், அவ ரது இலையிலிருந்து கோழிக்கறி துண்டு ஒன்றை எனக்கு எடுத்து வைத்தார். நான் கறி சாப்பிடுவதில்லை அண்ணா என்று சொன் னதும், அடுத்த நொடியே இது என்ன சைவ சிறுத்தையா என்று சொல்லி அனைவரையும் சிரிக்க வைத்தார்.

அவர் ஒரு மாபெரும் படைத் தலைவராக இருந்தாலும், இயல்பான மக்கள் தலைவராக வும் இருந்ததை உணர்ந்தேன்.

டெசோ மாநாட்டில், கருணாநிதி கட்சியின் கொள்கை பரப்பு செயலாளர் போல பேசி யிருக்கிறீர்களே... வெளியுலகத்திற்கு எல்லாம் சரி, அன்றைய இரவு தூங்கப்போகு முன் மனம் உறுத்தவில்லையா?

ஈழ விடுதலை ஆதரவு, விடுதலைப் புலிகள் ஆதரவு என்பதே விடுதலை சிறுத்தைகள் கட் சியின் கொள்கை. அதை நீங்கள் அறிந்து கொள் ளும் அளவிற்கு நாங்கள் செயல்படவில்லை என்பதை எண்ணி வருந்துகின்றேன்.

அதேவேளையில், ஈழ விடுதலையையும் விடுதலைப் புலிகளையும் ஆதரிப்பது தி.மு.க வின் கொள்கை என்பதையாவது அறிந்து வைத்திருக்கிறீர்களே... அதற்காக பாராட்டு கிறேன் என்றார். (எ-11)

## ஒரு இலட்சம்...

கள் சுதந்திர முன்னணி ஏற்பாடு செய்துள்ள ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரி வித்த அவர் 2 மாதத்தினுள் 4 ஆயிரம் கொள்கலன் களில் அரிசி அனுப்ப திட்டமிடப்பட்டது.

ஆனால் அரிசி ஆலை களில் போதுமான நவீன தொழில்நுட்ப வசதிகள் இல்லாத நிலையில் துரிதமாக அவற்றை வழங்க முடியவில்லை.

இதனால் அரிசி ஆலைகள் நவீன தொழில் நுட்பங்களு டன் முன் னேற்றப்பட் டுள்ளதாகவும் அமைச் சர் கூறினார். (எ-11)


**C.C.A - உடுப்பிட்டி கல்வி நிலையம்**

தரம் 4க்குரிய (2012)
புலமைப் பரிசில் வகுப்பு (2013)
ஆரம்பம் :- 01.09.2012 (சனிக்கிழமை) காலை 07.00 மணிக்கு
இடம்:- உடுநகர் பொதுமண்டபம், ஆதியாமலை, உடுப்பிட்டி. ஆசிரியர் :- தெ.எழில் B.A (Hons)
தொடர்புகளுக்கு :- 0777049064 (311)

**கல்யாண மாலை[...] அறிவித்தல்**

கணனி மயப்படுத்தல் மற்[...] இணைய ஒழுங்கமைப்பு சேவையி[...] பொருட்டு எதிர்வரும் செப்டெம்பர் மாத[...] 1ம் திகதி தொடக்கம் 4ம் திகதி வரை அ[...] வலகம் இயங்கமாட்டாது என்பதை[...] அறியத் தருகின்றோம். 5ம் திகதி வழமை[...] போல் அலுவலகம் இயங்கும்.

-இயக்குந[...]




**Training**
வேலை வாய்ப்பு நிறைந்த
Web Designing
Networking
Multimedia
Type Free <Course><Name> & Sms to 772395895
MCS IT CAMPUS 324, Palaly road, Jaffna.
Supported by UNDP/JRRP

**A Music Workshop with Dr.Tanya Ekanayaka**

A moment of healing for us all, through music...

**Date:** 31st of August
**Venue:** Chundikuli Girls' College Hall, Chundikuli, Jaffna
**Time:** 4 PM – 6 PM
*Only through registration , phone Chundikuli Girls College at 021 2222338 or Renuja at 0773063653 for registration*
SJC 87 initiative is organising a workshop for music students and teachers through Chundikuli Girls' College and Uduvil Girls' College.

**About Dr. Tanya Ekanayaka**



Dr.Tanya Ekanayaka

One of Sri Lanka's première concert pianists, a composer, musicologist and linguist has given solo recitals in prestigious concert venues in Europe and the United States. Currently based in the UK, she is a member of staff of Edinburgh University. Tanya is the first Sri Lankan pianist to be invited to perform in the 'Pianists of the World' series at London's St Martin-in-the-Fields founded by the legendary Dame Myra Hess. Her programme concluded with the world première of her composition 'Adahas: of Wings of Roots' which is the first Sri Lankan composition to be performed at this venue. 2012 has seen Tanya debut in the US with a solo recital at The John F. Kennedy Centre for the Performing Arts in Washington DC and a performance at the Asia Society Concert Hall in New York. Her Kennedy Centre programme incorporated the world première of her compositions, 'Labyrinth;Vannam Lent' and 'Dhaivaya: Alter(ing) Hue' which are the first Sri Lankan compositions for the piano to be performed at this venue. Among forthcoming highlights for 2012 are solo recitals in Hong Kong and at London's St. Martin-in-the-Fields.

Visit us at **www.sjc87initiative.org** (285)

**அழைப்பிதழ்**

"Easy way to Speak English"
Workshop for English Learners – 2012
September 01, 03, 07, 09, 10,12,15,16 and 22

**Dear Sir/Madam/ Student**
மேற்குறிப்பிடப்பட்ட நாட்களில் நடைபெறவுள்ள இலவச ஆங்கில பயிற்சிப்பட்டறை[...] தொடரில் உங்களுக்கு வசதியான ஒரு தினம் கலந்து கொள்ளுமாறு அன்பு[...] அழைக்கின்றோம்.

மேலதிக தகவல்களுக்கும் பதிவுகளுக்கும்:
021 222 4728, 0777 444 225

(முன்கூட்டியே பதிவு செய்து உங்கள் ஆசனத்தை உறுதிப்படுத்திக் கொள்ளவும்)
நேரம்: காலை 8.30 - 12.00 அல்லது மாலை 2.00 - 5.00 மணிவரை
இடம்: IISEEES Nallur Campus

எதிர்கால சவால்களை வெல்லக்கூடிய வகையில் உங்களை மாற்றி அமைக்[...] Work Room Based Practical - Spoken English with grammar, Certificate in Engli[...] Diploma in English, French, Sinhala Language and computer Courses உ[...] Personality Development and Leadership Training அனுபமிக்கவர்களின் வழிகாட்ட[...] மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றது.

சர்வதேச ஆங்கிலத் தகைமைகளான IELTS, TOFEL, A1B1(City and Guilds) Cambridge and etc... வழிகாட்டல் பயிற்சிகளும் சிறந்த முறையில் நடைபெறுகிறது.

உங்கள் உயர்தரத்தின் பின் எதிர்கால தொழில் சந்தையில் உயர் வருமானம் ஈட்டக் கூடிய தொழில் தகைமைகளை அடைந்து கொள்வதற்கான பாடநெறிகளை சிறப்பான முறையில் இன்றே தெரிவு செய்து கொள்ளுங்கள்.. இலங்கையின் தனியார் உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் UK, USA, Canada, Australia, New Zealand, All European Counties, Malaysia ,etc நாடுகளின் College and University உடனடி Admission மற்றும் VISA ஏற்பாடுகள் பெற்றுக் கொள்ளமுடியும்.

IISEEES NALLUR CAMPUS
your path finder
No. 762, Point Petro Road, Nallur, Jaffna. (321)

(ஆங்கிலப் பாடநெறியில் கலந்து கொள்ளும் சகல மாணவர்களுக்கும் சிங்களம் மற்றும் அடிப்படை கணனிப்பாடநெறிகள் இலவசமாக கற்பிக்கப்படும்)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org